
# 2015 அவ்யக்த முரளி



பொருளடக்கம் - 8

**18.01.2015** நினைவு நாளன்று ஏதேனும் விசேஷ தன்மையை தனக்குள் தாரணை செய்து குறைகளை நீக்க வேண்டும், பாரத தேசத்தில் பாரதத்தின் தந்தை மறைவான வேஷத்தில் வந்துள்ளார், இந்த விஷயத்தை நாலா புறமும் தெளிவாகப் பரப்ப வேண்டும்!

**16.02.2015** எப்படி தந்தை மற்றும் குழந்தைகளுடைய அன்பு அழிவற்றதோ, (அமர்) அலௌகீகமானதோ அவ்வாறே உங்களுக்கு பாபாவினுடைய அறிமுகத்தின் கூடவே பிராப்திகள் கிடைத்துள்ளன. அவ்வாறே சேவையில் முன்னேறிக் கொண்டு அனைவருக்கும் உற்சாகம் ஆர்வத்தைத் தாருங்கள், தற்போது எவரது புகாரும் இருந்து விடக்கூடாது! (சிவ ஜெயந்தி)

**15.03.2015** அன்றாட காரியங்களைச் செய்துகொண்டே மேரா பாபா (எனது பாபா), மீட்டா பாபா (இனிமையான பாபா) இந்த இரண்டு வார்த்தை எப்போதும் நினைவிருக்க வேண்டும்; இந்த அலௌகீக அன்பின் சம்பந்தம் தான் பரிசு ஆகும்!

**10.04.2015** வீடியோ -மிலன் நடைபெறவில்லை! ரதம் மும்பை ஆஸ்பத்திரியில்!

**14.10.2015** எந்தக் குழந்தைகள் நினைவில் இருக்கிறார்களோ அவர்கள் பாப்தாதாவின் மனதில் எப்போதும் அமர்ந்திருக்கிறார்கள். நம்முடைய சத்யுக இராஜ்யம் வந்தே விட்டது என்ற மகிழ்ச்சி இப்போது அனைவரின் மனதிலும் இருக்கிறது. அனைவரும் அப்படிப்பட்ட யுகத்தைக் கொண்டு வருவதில் மும்முரமாக இருக்கின்றனர்!

**03.11.2015** பிரபுவின் அன்பிற்குப் பாத்திரமான இந்த கூட்டமானது (சந்திப்பு) சங்கமத்தின் இந்த மகான் சமயத்தில் தான் நடக்கும், ஒவ்வொரு குழந்தைகளினுடைய மனதில் பாபா மற்றும் பாபாவினுடைய மனதில் செல்லக் குழந்தைகள் இருக்கின்றனர்!

**30.11.2015** சதா பெருமிதத்தில் இருந்து கவலையற்ற ராஜா ஆகுங்கள்; தீவிர முயற்சி மூலம் சம்பன்னம் மற்றும் சமமாகி கூடவே செல்வதற்குத் தயாராகுங்கள்!

**31.12.2015** நாடகத்தில் சங்கமயுகத்தின் இந்த சந்திப்பு மிக மிக விலைமதிப்பற்றது. மேலும் பற்றற்றதும் அன்பானதும் ஆகும். இது திடீரென்று கிடைத்த லாட்டரி அதுவும் பாக்கியவான் குழந்தைகளுக்கு மட்டுமே கிடைக்கிறது!

தனிப்பட்ட சந்திப்புகள் -பார்ட்டிகள் **etc**

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂
☂☂☂☂☂☂☂

# 18.01.2015 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நினைவு நாளன்று ஏதேனும் விசேஷ தன்மையை தனக்குள் தாரணை செய்து குறைகளை நீக்க வேண்டும், பாரத தேசத்தில் பாரதத்தின் தந்தை மறைவான வேஷத்தில் வந்துள்ளார், இந்த விஷயத்தை நாலா புறமும் தெளிவாகப் பரப்ப வேண்டும்!

அனைத்து சைத்தன்ய தீபங்களுக்கும் வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! ஒவ்வொரு சைத்தன்யமான தீபமும் தத்தமது ஜொலிப்பின் மூலம் உலகத்தைப் பிரகாசிக்கச் செய்து கொண்டு இருக்கின்றன. ஒவ்வொரு சைத்தன்யமான தீபமும் எவ்வளவு அழகாக நேர்த்தியாக பிரகாசித்துக் கொண்டிருக்கிறது இதனைப் பார்த்து பாப்தாதா ஒவ்வொரு தீபத்தையும் பார்த்து குஷியடைந்து கொண்டிருக்கின்றார். ஆஹா தீபங்களே ஆஹா! உண்மையான தீபாவளியை பார்க்க வேண்டும். என்றால் இந்த சைத்தன்யமான தீபங்களின் மத்தியில் பார்க்க முடியும் பாப்தாதாவும் ஒவ்வொரு தீபத்தையும் பார்த்து மகிழ்வடைகின்றார். ஆஹா! ஒவ்வொரு தீபமும் ஆஹா! ஏனெனில் நீங்கள் ஒவ்வொரு தீபமும் பாபாவின் மிகச் செல்லமானவர்கள். இவ்வளவு பெரிய உலகில் அருமையான தீபங்களாகிய உங்களைப் பார்த்து பாபா மகிழ்வடைகின்றார். மேலும் உள்ளத்தில் பாடலையும் பாடுகின்றார். ஒவ்வொரு தீபமும் பரமாத்மாவிற்கு அன்பானது மேலும் அவரது உள்ளத்தில் வயித்து இருக்கக் கூடியவர்கள். உண்மையான தீடமாலையை பாபா எதிரிலேயே பார்த்துக் கொண்டிருக் கின்றார். மேலும் ஒவ்வொரு

தீபத்தைப் பார்த்தும் ஆஹா, ஆஹா! என்னும் பாடலை உளப்பூர்வமாகப் பாடிக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு தீபத்தின் அதனது விசேஷத் தன்மையை பாபா பார்த்துக் கொண்டிருக்கின்றார். மேலும் நீங்கள் அனைவரும். கூட பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். தீபங்களாகிய உங்கள் மூலம் உலகம் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது, மேலும் ஒவ்வொரு தீபமும் தனது பிரகாசத்தின் மூலம் உலகை பிரகாசிக்கச் செய்து கொண்டிருக்கிறது பாப்தாதா ரிசல்ட்டைப் பார்த்து மகிழ்வடைகின்றார். அதாவது ஒவ்வொரு தீபமும் தனது பிரகாசத்தின் மூலம் நாலா புறங்களையும் பிரகாசிக்கச் செய்யும் இக்காரியத்தை மிகவும் உளப்பூர்வமாக செய்து கொண்டிருக்கின்றனர். தற்போது இந்த திவ்யமான பிரகாசத்தைப் பார்த்து வெளி உலகத்தினரின் பார்வையிலும் வருகின்றனர். எப்படி இந்த அலௌகிக பிரகாசம் எங்கிருந்து வருகிறது. இவ்வாறு அனைவரது பார்வையும் உங்களை நோக்கிச் செல்கிறது. இன்று நினைவு தினத்தன்று பாப்தாதா நினைவு தீடங்களாகிய உங்களைப் பார்த்து மகிழ்வடைகின்றார். எப்படி ஒவ்வொரு தீபமும் தனது பிரகாசத்தைக் காண்பித்துக் கொண்டிருக்கிறது, அதன் மூலம் உலக மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இருள் விலகி பிரகாசம் ஏற்படுகிறது. மேலும் தற்போது அனைத்து ஆத்மாக்களுக்கும் உள்ளத்தில் இந்த சங்கல்பம் உள்ளது. எங்கிருந்து இந்த பிரகாசம் வந்து கொண்டிருக்கிறது? கொஞ்சம் கொஞ்சமாக இந்த பிரகாசத்தைப் பார்த்து அதாவது தீடங்களாகிய உங்களைப் பார்த்து மிகுந்த குஷியும் அடைகின்றனர், இந்த பிரகாசம் நாலா புறமும் பரவத்தான் செய்கிறது. நல்லது.

டெல்லி மற்றும் ஆக்ரா மண்டலங்களின் சேவை முறை: அப்படியே கை உயர்த்துங்கள். நல்லது வாருங்கள், டெல்லிக்காரர்கள் ஒவ்வொரு வருக்கும் பாப்தாதா விசேஷமான அன்பு நினைவுகளைத் தருகிறார். டெல்லிக் காரர்கள் டெல்லியை சொர்க்கமாக்க வேண்டும். தங்களது இராஜ்யத்தை டெல்லி யில் ஸ்தாபிக்க வேண்டும். சேவை செய்து கொண்டிருக்கின்றனர், ஆனால் இப்பொழுது மேலும் பலமாக ஓசை எழுப்ப வேண்டும், டெல்லி தற்போது சொர்க்க மாசு வேண்டும். அனைவருக்கும் தெரிய வரவேண்டும், சேவை நன்றாகச் செய்து கொண்டிருக்கிறீர்கள், ஆனால் தற்போது அனைவருக்கும் சேவையின் செய்தி சென்று சேரவில்லை, மூலை முடுக்கெல்லாம் இது தெரிய

வரவேண்டும், நமது சத்யுக இராஜ்ய அதிகாரி மறைமுக வேடத்தில் வந்துள்ளனர், தற்போது சேவையின் மூலம் இம்மாதிரி மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதாவது. பிரம்மா குமாரிகள் என்ன கூறுகின்றனரோ அது நன்றாகவே உள்ளது, ஆனால் தற்போது இந்த ஒலி (செய்தி) எழுப்பப்பட வேண்டும், சத்தியத்தை அவர்கள் கூறுகிறார்கள் என்று. அந்த நாளும் வந்து சேரும். ஏனெனில் தற்போது சேவையின் ஒலி சென்று சேர்ந்துள்ளது ஆனால் இந்த ஒலி யில் சற்று வேகம் தேவை. எல்லோருடைய பார்வையிலும் மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது ஆனால் இதை செய்வது யார்? என்பது இதுவரை தெளிவாகத் வெளிப்படவில்லை. தார்மீக துறையினர் நினைக்கின்றனர், ஏதோ நடக்கப்போகிறது, ஆனால் தற்போது பரமாத்மாவின் மூலம் இந்த புது டெல்லியை படைக்கக் கூடியவர்கள் வந்துள்ளனர் என்கிற ஒலி (செய்தி) பிரபல்யமாக வேண்டும். தற்போது மிகவும் தெளிவாக இது வரவேண்டும். நீங்கள் சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள், சேவை நன்கு செய்து கொண்டிருக்கிறீர்கள். முன்பு கேட்பதற்கு விருப்பம் இல்லாமல் இருந்தனர், தற்போது கேட்க விரும்புகின்றனர் ஆனால் கேட்பவர்கள் என்னவாக ஆகப்போகிறார்கள், இது தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பாப்தாதா குழந்தைகளின் சேவையைப் பார்த்து குஷி அடைகிறார். செய்து கொண்டு தான் இருக்கிறீர்கள் ஆனால் பேரொலி வெளிப்படவில்லை. நாலா புறமும் நன்கு பரவவில்லை, பரவிக் கொண்டிருக்கிறது, ஆனால் அனைவருடைய வாயிலிருந்தும் உலகத் தந்தை வந்து விட்டார், உலகத் தந்தையின் குழந்தைகள் மறைந்து கொண்டு உலகத் தந்தையின் காரியத்தை செய்து கொண்டிருக்கின்றனர் என்கிற வேகத்தோடு பரவ வேண்டும். தற்போது கொஞ்சம் கொஞ்சமாகத்தான் செய்தியின் ஒலி பரவிக் கொண்டிருக்கிறது ஆனால் இன்னும் சற்று அதிகமான வேகத்துடன் பரவ வேண்டும். ஆரம்பமாகி உள்ளது, ஆனால் மூலை முடுக்கெல்லாம் நாலா புறமும் ஒலி எழுப்புபவர்கள் (நீங்கள்) மாற்றம் ஏற்பட வேண்டும், அது நடந்து கொண்டிருக்கின்றது என்று தெளிவாக எடுத்துரைக்க வேண்டும்.

கல்கத்தா குருப் வந்துள்ளது, மதுபனை முழுமையாக பூக்களால் அலங்கரித்துள்ளனர்: கல்கத்தாவின் சகோதர சகோதரிகள் அவர்கள் இங்கு வந்திருந்தாலும் சரி, அல்லது அவர்கள் அங்கிருந்தாலும் சரி,

இந்த ஒலியானது கல்கத்தாவில் இருந்து நாலா புறமும் பரவியிருக்கிறது. ஏதோ நடந்து கொண்டிருக்கிறது ஆனால் இன்னும் யோசித்துக் கொண்டிருக்கின்றனர். உள்ளுக்குளேயே நினைக்கின்றனர், ஏதோ சற்று மாற்றம் என்பது தெரிகிறது ஆனால் தற்போது மிக வேகமாக வேகத்துடிப்போடு (தூள் கிளப்பி) கூற வேண்டும் அதாவது மாற்றம் செய்யக்கூடியவர்கள், நமது துணையானவர்கள் தற்போது தங்கள் கடமையை செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் போகப்போசு இந்த கடமையானது மிகத் தெளிவாகத் தென்பட ஆரம்பிக்கும். ஆனாலும் ஏதோ மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதைப் புரிகின்றனர். தற்போது முன்பு போல் இல்லை, அதாவது இது நடப்பது மிகவும் கஷ்டம், எப்படி நடக்கும், என்ன நடக்கும், இது போன்ற கேள்விகள் தற்போது இல்லை தற்போது நடந்து கொண்டிருக்கிறது ஆனால் எங்கே, எப்பொழுது அவ்வப்போது தான் தெரிய வருகிறது ஆனால் தற்போது புத்தியில் அபுவின் பக்கம் சைகை காட்ட வேண்டும். அபுவிலிருந்து இந்த காரியம் நடந்து கொண்டிருக்கிறது என்று பலமாக தெளிவுபடுத்த முடியவில்லை ஆனால் முன்பு நினைத்ததுபோல இந்த காரியத்தை பிரம்மா குமாரிகள் தான் கூறுகின்றனர், ஆனால் இது மறைமுகமாக நடந்து கொண்டிருக்கிறது என்று தற்போது நினைக்கின்றனர். பிரம்மா குமாரிகள் ஏதோ மாற்றத்தைக் கொண்டு வரும் காரியத்தை செய்யத்தான் செய்கிறார்கள் ஆனால் இன்னும் தெளிவாக இல்லை. பிரம்மா குமாரிகள் தான் இதற்கு நிமித்தமானவர்கள் என்று அவர்களுக்குப் புரிய வேண்டும், ஒரு சிலர் புரிய ஆரம்பித்துள்ளனர் ஆனால் மிகவும் வெளிப்படையாக இன்னும் வரவில்லை. அந்த நேரமும் விரைவில் வரும் தற்போது உங்களிடம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இந்த மாற்றம் அதன் பிரபாபாவம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. செய்திகளைப் படித்து படித்து கடைசியில் தெளிவாகி விடும்.

**தாதி ஜானகி அவர்களுடன்:** (எனது பாபா!) எனது குழந்தை மிக நன்றாக நடந்து கொண்டிருக்கிறீர்கள். மேலும் நடந்து கொண்டிருப்பீர்கள். நீங்கள் நிமித்தமாக இருப்பதற்கான மிகவும் நல்வாழ்த்துக்கள்!

**வெளிநாட்டினர் 400-பேர் வந்துள்ளனர்:** நல்லது வாழ்த்துக்கள்! பாபாவின் கடமையை பிரத்யமாக்குவதற்காக நீங்கள் அனைவரும்

நிமித்தமாகி உள்ளீர்கள். ஆக பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். அதிகரித்துக் கொண்டிருக்கின்றீர்கள் ஆனாலும் அதன் வேகத்தை சற்று அதிகரி யுங்கள் மற்றபடி ஆரம்பமாகி உள்ளது ஏதோ நடக்கப்போகிறது என்பதை புரிகிறார்கள், அனைவருக்கும் செய்தியின் ஒலி சென்று கொண்டிருக்கிறது ஆனால் கூறுவதற்கு யாராவது நிமித்தமாக வேண்டும். அப்படிப்பட்டவர் தற்போது யாராவது வெளிப்படுவர் மறைமுகமானது ஆனால் கூடிய விரைவில் ஆகி விடும். தற்போது நீங்களும் கூட இந்த திட சங்கல்பத்தை வையுங்கள். அதாவது பாபாவை பிரத்யக்ஷம் ஆக்கியே தீர வேண்டும் சங்கல்பம் என்னவோ இருக்கிறது, ஆனால் அதில் திடத்தன்மையைக் கொண்டு வாருங்கள். நடந்தே ஆக வேண்டும் ஆனால் இந்த பக்கம் சற்று கவனம் செலுத்துங்கள், அவரவர்கள் தரப்பில் இருந்து செய்து கொண்டு தான் இருக்கிறீர்கள். செய்யவே இல்லை என்று சொல்ல முடியாது ஆனால் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து பெரிய ஒலி எழுப்பப்பட வேண்டும். எது நடக்க வேண்டுமோ அது நடந்து கொண்டிருக்கிறது, அது (முழுமையாக) நடந்தேறி விடும்.

அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா? மகிழ்ச்சி தானே! கை உயர்த்துங்கள். தயாராக இருக்கிறீர்களா? தயார் தானே! அனைவரிடமும் உற்சாகம் நிறைந்து வழிகிறது. ஏதாவது செய்ய வேண்டும் என்று நடந்து கொண்டும் இருக்கிறது ஆனால் வேகத்தை அதிகரியுங்கள். பாப்தாதா சபையைப் பார்த்து குஷி அடைந்துக் கொண்டிருக்கிறார். ஏனெனில், அனைத்து குழந்தைகளிடமும் இந்த சங்கல்பம் உள்ளது. அதாவது ஏதேனும் செய்ய வேண்டும், செய்தே தீரவேண்டும். மேலும் உங்களது இந்த சங்கல்பம் ஏதேனும் பிரம்மாண்டத்தை காண்பிக்கும். சங்கல்பம் நன்றாக உள்ளது -அனைவரது உள்ளத்திலும் இருக்கிறது அல்லவா! அதாவது தற்போது ஏதாவது புதியதாக நடைபெற வேண்டும். அனைவரும் குஷி குஷியாக இந்த சங்கல்பத்தை செய்துள்ளீர்கள், அதாவது பாரத தேசத்தில் எங்கெல்லாம் இன்னும் குறை உள்ளதோ அந்த பகுதிகளில் உங்கள் கடமையை (சேவையை) செய்யுங்கள். ஒவ்வொரு பகுதியிலும் உள்ள முக்கிய நகரங்களில் இந்த செய்தி பிரசித்தமாக வேண்டும். ஆக பிரம்மா குமாரிகள் என்ன விரும்புகின்றனரோ அதில் உதவியாளராக ஆகிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஆக வேண்டும். தற்போது மெது

மெதுவாக பிரசித்தம் ஆகிக் கொண்டிருக்கிறது. விரைவில் அதுவும் நடந்தேறிவிடும். எனவே உற்சாக ஆர்வத்துடன் முன்னேறிக் கொண்டு செல்லுங்கள். நீங்கள் ஒவ்வொருவரும் நிமித்தமானவர்கள். பெரியவர்கள் செய்கின்றனர், எனவே நாமும் செய்கின்றோம் என்று அப்படி அல்ல. என்ன செய்கிறீர்களோ அதில் நீங்கள் பாஸ். அதற்காக நல்வாழ்த்துக்கள்! ஆனால் தற்போது ஒலி சற்று வேகமாக ஒலிக்க வேண்டும். பாரதத்தில் பாரதத்தின் தந்தை மறைமுக வேசத்தில் வந்து விட்டார் -இந்த ஒலியை (செய்தி) சற்று தெளிவாகத் தெரியும் அளவு பரப்புங்கள். துக்கம் அதிகரித்துக் கொண்டு தான் இருக்கிறது. எல்லோரும் தொந்தரவுக்குள்ளாகி இருக்கின்றனர் ஆனால் ஆங்காங்கு அற்ப கால சுகம் அவர்களை உறங்க வத்து விடுகிறது. தற்போது சேவையிலும் சோதித்துப் பாருங்கள், எந்தெந்த தரப்பிலிருந்து எந்தெந்த பகுதியில் (சேவை செய்ய வேண்டும்) அந்த ஒவ்வொரு சென்டரும் தத்தம் பகுதிகளை சோதனை செய்யுங்கள். எங்கு நடக்கவில்லையோ அங்கு சேவையின் ஒலியைப் பரப்புங்கள். ஒரு சில இடங்களில் மிக நன்றாகவே உள்ளது ஆனால் பாரத தேசம் முழுவதையும் எழுப்ப வேண்டும். எனவே தற்போது சோதித்துப் பாருங்கள், வாய்ப்டைப் பயன்படுத்துங்கள், நலாடறமும் தற்போது ஒலி பரவ வேண்டும். அதாவது நாமும் மாற வேண்டும், மேலும் உலகத்தையும் மாற்றி அமைக்கும் காரியத்தில் ஈடுபட வேண்டும் ஆக அனைவரும் குஷி தானே! இரண்டு கைகளையும் உயர்த்துங்கள்.

மோகினி சகோதரியிடம்: தற்போது உடல் ஆரோக்கியம் நன்றாகி வருகிறது. நன்றாகி விடும். எனவே சேவையில் சிறிது சிறிதாக ஈடுபட ஆரம்பியுங்கள், (உங்களது வரதானத்தின் மூலம் சக்தி கிடைக்கிறது என்று மோகினி தீதி கூறுகிறார்) சேவைக்கான ஆர்வம் உள்ளது, அது உங்களை முன்னேற்றிக் கொண்டிருக்கிறது, மேலும் முன்னேறச் செய்யும் (சேவையின் உற்சாகம்) நன்றாகி விடும். தாங்கள் எப்படி தங்களை நடத்துகிறீர்கள் இல்லையா? ஆக சேவையும் நடந்தேறுகிறது. மற்றபடி வேறொன்றுமில்லை.

மூன்று முக்கிய சகோதரர்களுடன்: காலத்தின் வேகத்தை நீங்கள் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் நேரம் தற்போது தெளிவாக ஆகிக் கொண்டிருக்கிறது. அதாவது மறைமுக வேடத்தில் என்ன

காரியத்தை பிரம்மா குமாரிகள் செய்து கொண்டிருக்கிறார்களோ அதனை முன்பெல்லாம் புரியாது இருந்தார்கள், இவர்கள் என்ன செய்கிறார்கள் என்றனர் ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக தற்போது புரிய ஆரம்பித்திருக்கிறார்கள், இவர்கள் உலக மாற்றத்தை செய்வதற்காக உற்சாகம் ஆர்வத்தை அதிகரிக்கின்றனர் எனவே தற்போதைய சூழ்நிலையில் மிகுந்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. பாவனை கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்துக் கொண்டிருக்கிறது. தற்போது சேவைக்கான பூமியானது தயாராகி விட்டது. தற்போது எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவு வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள முடியும்.

இன்றைய நினைவு நாளில் ஒவ்வொரு குழந்தைக்கும் நினைவின் கூடவே சக்தியும் வேண்டும். ஆக அனைத்து குழந்தைகளும் இந்த நினைவு நாளாகிய இன்று தங்களுக்குள் ஏதேனும் விசேஷத்தை கவனம் கொண்டு தாரணை செய்தல் வேண்டும். விசேஷ தினத்தில் விசேடங்களை தாரணை செய்யுங்கள். என்னென்ன குறை உங்களிடம் உள்ளதோ அவைகளை இந்த தினத்தில் நீக்கி விட்டு, ஏதேனும் உற்சாகம் ஆர்வத்தின் அடிப்படையிலான தாரணையை நினைவில் கொள்ளுங்கள். உறங்குவதற்கு முன்பாக இந்த சங்கல்பத்தை செய்து விட்டு உறங்க வேண்டும் மேலும் அமிர்தவேளையில் அதையே மீண்டும் சிந்தித்து நிரந்தரமாக கவனம் செலுத்தி பாபாவிற்குச் சமமாக ஆகியே தீரவேண்டும். அனைவருக்கும் மிகவும் அன்பு நிவைகள் உரித்தாகுக. ஏனெனில் அனைவரும் உற்சாகம் ஆர்வத்துடன் வந்துள்ளீர்கள் மேலும் அனைவரும் ஒன்றிணைந்து 18-ஜனவரியை கொண்டாடிக் கொண்டுகிறீர்கள் என்றால் ஜனவரி 18'ன் விசேஷம் என்ன? விசேஷம் என்னவோ அந்த விசேஷத்தை தனக்குள் தாரணை செய்து முன்னேற வேண்டும். முன்னேறியே தீரவேண்டும். இதில் உறுதியான நிச்சயம் கொள்ளுங்கள். அதாவது ஏதேனும் குறையிருந்தால் அதனை இன்று இரவுக்குள் நினைத்துப் பார்த்து அதை நீக்கும் சங்கல்பமும் செய்து விட்டு உறங்க வேண்டும். நல்லது.

இரட்டை வெளிநாட்டினர் எழுந்திருங்கள். மிகவும் நன்று. அனைவருக்கும் மிக மிக அதிகமான அன்பு நினைவுகள்! மேற்கொண்டு முற்றிலும் நிறைந்து (சம்பன்ன) வாழ்வீர்கள். இதுவே வரதானம் ஆகும்.நீங்கள் அனைவரும் நிமித்தமாகி உள்ளனர்.

விடைபெறும் போது தாதி ஜனாகியுடன்: மிக நன்றாக உங்கள் பாகத்தை நடித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺
✺✺✺✺✺

**16.02.2015 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்**

**எப்படி தந்தை மற்றும் குழந்தைகளுடைய அன்பு அழிவற்றதோ, (அமர்) அலௌகீகமானதோ அவ்வாறே உங்களுக்கு பாபாவினுடைய அறிமுகத்தின் கூடவே பிராப்திகள் கிடைத்துள்ளன. அவ்வாறே சேவையில் முன்னேறிக் கொண்டு அனைவருக்கும் உற்சாகம் ஆர்வத்தைத் தாருங்கள், தற்போது எவரது புகாரும் இருந்து விடக்கூடாது! (சிவ ஜெயந்தி)**

ஓம் சாந்தி! அனைத்து குழந்தைகளுக்கும் அவர்கள் எதிரில் இருந்தாலும் சரி, எந்த இடத்திலிருந்தாலும் சரி, ஆக நாலா புறங்களிலும் உள்ள குழந்தைகளுக்கு இன்றைய தினத்தினுடைய வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! இன்று வாழ்த்துக்களின் தினமாகும். மிகவும் அன்பானதாகும்! மேலும் நாடகத்தில் குழந்தைகளாகிய உங்களின் விசேஷமான அன்பின் அடையாளம் பாபா மற்றும் குழந்தைகள் எதிரிலேயே சாகாரத்திலேயே சந்திப்பு நிகழ்ந்துக் கொண்டிருக்கின்றது. எனவே முதலில் எதிரில் அமர்திருப்பவர்களுக்கு சந்திப்பு மற்றும் வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! இந்த நாள் விசேஷமாக ஸ்தாபனையின் காரியத்தின் விசேஷ நாளாகும். அதாவது குழந்தைகள் தந்தையை அறிந்து கொண்டார்கள். தந்தை குழந்தைகளை அறிந்து கொண்டார். பாபா கூறுகிறார்: என்னுடைய குழந்தைகளே! மேலும்

குழந்தைகள் கூறுகின்றனர் என்னுடைய பாபா! ஒவ்வொருவரும் முன்னாலிருந்தாலும் பின்னால் அமர்ந்திருந்தாலும் சரி, அவர்களுக்கு பாப்தாதா இன்றைய தினத்தின் நேரடியான சந்திப்பின் வாழ்த்துக்களை வழங்கிக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையினுடைய முகத்திலும் இன்று சந்திப்பினுடைய பாக்கியம் ஆகும். ஒவ்வொரு குழந்தைகளினுடைய முகத்திலும் மகிழ்ச்சியின் உருவில் தென்படுகிறது. மேலும் பாப்தாதாவும் ஒவ்வொரு குழந்தையையும் எதிரில் சந்திப்பதற்கான பாக்கியத்தைப் பார்த்து அக மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையின் நெற்றியிலும் என்னுடைய தந்தை, அன்டான தந்தை, இனிமையான தந்தை, இந்த சந்திப்பின் அலைகள் முகத்தில் தென்பட்டு கொண்டிருக்கின்றது. பாபாவும் ஒவ்வொரு குழந்தையின் முன்னால் மற்றும் பின்னால் அமர்ந்திருப்பவர்களைப் பார்த்து எவ்வளவு மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றார். அதை பாபாவும் குழந்தைகளாகிய நீங்களும் தான் அறிவீர்கள். பாபாவினுடைய உள்ளத்திலிருந்து ஒவ்வொரு குழந்தையின் பொருட்டும் ஆஹா! குழந்தாய் ஆஹா குழந்தாய் என்பது எழுகிறது. எதிரிலேயே சந்திப்பும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

பாப்தாதா முன்னால் பின்னால் மூலையில் அமர்ந்திருக்கும் குழந்தைகளைப் பார்த்து ஆஹா குழந்தாய்! என்னும் பாடலைப் பாடிக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையும் எவ்வளவு இனிமையான நினைவில் அமர்ந்திருக்கின்றார்கள் என்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு மூலையிலும் முன்னாலும் பின்னாலும் ஒவ்வொரு குழந்தையும் பாபாவைப் பார்த்து எவ்வளவு மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார்கள். மேலும் ஒவ்வொரு குழந்தையும் பாபாவைப் பார்த்து ஆஹா குழந்தைகளே! என்ற பாடலைப் பாடிக் கொண்டிருக்கின்றார். ஏனெனில் இந்த சந்திப்பு நிரந்தரமாகக் கிடைப்பதல்ல என்பதை பாபாவை அறிவார் ஆனால் இன்று கூடவே இவ்வாறு இருக்கக் கூடிய அனுபவம் ஒவ்வொரு குழந்தையின் சிநேகத்தைப் பார்த்து அனைவரது உள்ளமும் அன்பிலே துடித்துக் கொண்டிருக்கின்றன. பாபாவிற்கும் இந்த சாகார உலகில் அவ்வப்போது நிகழக் கூடிய சந்திப்பு அவரது உள்ளத்தைக் கவர்ந்திழுக்கிறது. பாபாவும் ஆஹா குழந்தைகளே! என்னும் இந்தப் பாடலைப் பாடிக் கொண்டிருக்கின்றார். குழந்தைகளும் இந்த பாடலை

பாடிக் கொண்டிருக்கின்றனர் ஆஹா பாபா! ஆஹா பாபா! எவ்வளவு இந்த சங்கமயுகத்தினுடைய நாடகத்தின் பாகமானது குழந்தைகள் பாபாவைப் பார்க்கின்றனர்.. நன்றாக அறிந்து கொள்கின்றனர். மேலும் பாபாவும் குழந்கைளைப் பார்த்து எவ்வளவு குஷி அடைந்து கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு வருடைய உள்ளத்திலிருந்தும் இதே பேச்சுத்தான் வெளி வந்து கொண்டிருக்கின்றது. என்னுடைய தந்தை, அன்பான தந்தை மேலும் பாபாவினுடைய வாயிலிருந்து இதுவே வெளி வந்து கொண்டிருக்கிறது ஆஹா குழந்தாய்! ஆஹா! ஒவ்வொரு குழந்தையும் எவ்வாறு தன்னுடைய பிறப்புரிமையை அதாவது எதிரிலேயே சந்திக்கக் கூடிய அந்த உரிமையை அனுபவம் செய்து கொண்டிருக்கின்றனர். பாபாவிற்கும் மிக மிக மிக ஒவ்வொரு குழந்தையின் முகத்தைப் பார்த்தும் குஷி ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

பாபாவும் ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து என்ன அனுபவம் செய்கின்றார். ஒவ்வொரு குழந்தையிடமும் எவ்வளவு உள்ளத்தின் அன்பு உள்ளது. ஒருவேளை பாப்தாதா ஒவ்வொரு குழந்தையினுடைய அன்பையும் வர்ணனை செய்தால் அநேகப் புத்தகங்கள் எழுதலாம் ஆனால் இது உள்ளம் அறியக் கூடியது, பாபாவும் குழந்தைகள் மட்டுமே அறிவர். ஆக, பாபா தற்போது குழந்தைகளினுடைய இந்த சந்திப்பின் முகத்திலிருந்து ஒவ்வொரு குழந்தையும் எவ்வளவு சக்தியோ குழந்தைகள் மற்றும் தந்தையினுடைய அன்பு அழிவற்றதாக இருக்கும் மற்றும் அலௌகீகமாகவும் இருக்கும். பாபா குஷி அடைகிறார். ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து பாபா குஷி அடைகிறார். ஒவ்வொரு குழந்தைக்கும் ஆஹா! குழந்தாய் ஆஹா! உள்ளப் பூர்வமாகக் கூறிக் கொண்டிருக்கிறார். பாபாவிற்கும் குஷி ஏற்படுகிறது. இந்த குறைந்த சமயத்தில் நேரெதிராகக் கிடைக்கும் இந்த சந்திப்பு எவ்வளவு அன்பு நிறைந்ததாக உள்ளது. ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் உற்சாகம் ஆர்வம் நிரம்பி வழிகிறது அதாவது உலகின் ஒவ்வொரு குழந்தையும் பாபாவைப் புரிந்து கொண்டு எவ்வளவு தூரம் தன்னை முன்னேற்றிக் கொண்டிருக்கின்றது. ஆக பாப்தாதா இன்று ஒவ்வொரு குழந்தையினுடைய உள்ளத்தினுடைய அன்பைப் பார்த்து பார்த்து, அதற்காக மிக மிக உள்ளத்தின் ஆசீர்வாதங்களையும், இதயப் பூர்வமான வாழ்த்துக் களையும் ஒவ்வொரு குழந்தைக்கும் வழங்கிக்

கொண்டிருக்கின்றார். ஆஹா டிராமா ஆஹா! இந்த சந்திப்பு கூட குறைவானதல்ல! பாப்தாதாவோ குழந்தைகளை உள்ளத்திலேயே சந்தித்து, கொண்டாடிக் கொண்டிருக்கின்றார். குழந்தைகள் இல்லாமல் அவரும் இருக்க முடியாது. இந்த சந்திப்பின் கதைகளோ அதிகமாக உள்ளன ஆனால் நேரெதிரே இருக்கக் கூடிய குழந்தைகளப் பார்த்து மிகவும் குஷி அடைந்து கொண்டிருக்கின்றார். பாப்தாதாவும் உள்ளத்தில் குழந்தை களினுடைய அன்பு காரணமாக பாடலைப் பாடிக் கொண்டிருக்கின்றார் ஆஹா! குழந்தாய் ஆஹா!

இன்றைய தினத்தின் சந்திப்பு, சந்திப்பதற்காக மட்டுமே உரிய தினமாகும். பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார் -ஒவ்வொரு குழந்தையும் இந்த விதமாக சந்திப்பை பார்த்து எவ்வளவு மகிழ்ச்சி அடைகின்றனர். முதலில் பாப்தாதா பிறகு குழந்தைகள். ஒரு குழந்தையைக் கூட பாப்தாதா பார்க்காமல் இருக்க முடியாது. பின்னால் அமர்ந்திருந்தாலும் சரி, ஆனால் கண்ணெதிரே குழந்தைகளைப் பார்த்து பாப்தாதாவிற்கும் குஷி! குழந்தைகளுக்கும் குஷி! தற்போது இதற்கு பிறகு என்ன ஒரு அற்புதத்தைக் காண்பிக்கப் போகிறீர்கள்? சந்திப்பு மேளா போன்றவற்றை கொண்டாடினீர்கள். இப்பொழுது மேற்கொண்டு எந்த ஒரு அற்புதத்தைக் காண்பிக்கப் போகிறீர்கள்? ஒவ்வொருவரினுடைய, பெரும்பாலான உள்ளங்களில் இந்த ஒரு அறிமுகம் ஏற்பட்டு விடட்டும், நமது பாபா. நமது தந்தை, குழந்தைகள் இல்லாமல் குழந்தைகளின் சந்திப்பு இல்லாமல் இருக்க முடியாது. பாப்தாதா பார்த்தார் -நாடகத்தில் பாகத்தைப் பார்த்து குழந்தைகள் இதை நிச்சயமாக எண்ணுவார்கள் அதாவது அந்த நாள் (ஆதிகாலம்) எப்படி? மேலும் இந்த நாளும் எப்படி! ஆனால் மிகவும் புத்திசாலித்தனத்துடன் சேவையினுடைய பாகத்தை நன்றாகவே நடத்திக் கொண்டிருக்கின்றனர். பாப்தாதா சேவையினுடைய பாகத்தை நடத்தக் கூடிய குழந்தைகளைப் பார்த்து மிகுந்த குஷி அடைகிறார். மேலும் உலகத்தில் இறுதியாக நம்முடைய பாபா வந்து விட்டார் இந்த ஒரு அறிமுகம் நிச்சயமாக நடந்தேறும் ஆனால் எப்படி சாகார ரூபத்தில் உலகத்தில் குறைந்த எண்ணிக்கையிலான குழந்தைகளுக்கு புரிந்து கொள்ளும் உரிமை உள்ளதோ, பிராப்தி கிடைக்கிறதோ அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு இந்த பாக்கியத்தினுடைய காரணமாக பாபா மற்றும் குழந்தைகளின் இந்த சந்திப்பு ஏற்படுகிறது. இந்த நாடகத்தினுடைய

பாகம் உள்ளத்திற்கு சுகம் தருகிறது. பாபாவும் குஷி அடைகிறார், குழந்தைகளும் குஷி அடைகின்றனர். ஆக, பாப்தாதா நாடகப் பிரகாரம் சாகார ரூபத்தில் சந்தித்து கொண்டு குழந்தைகளை பார்த்து பார்த்து மிகவும் குஷி அடைகின்றார்.

இந்த சந்திப்பும் கூட டிராமாவில் மிகவும் நன்றான இந்த பாகம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நீங்களும் கூட குஷி அடைந்து கொண்டேயிருக்கிறீர்கள் இல்லையா! பாபா பிறகும் இந்த சந்திக்கக் கூடிய பாகத்தைப் பார்த்து குழந்தை களுக்கும் குஷி, பாபாவிற்கும் குஷி ஆனால் இந்த சந்திப்பு மேலும் அந்த சந்திப்பு எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. டிராமாவினுடைய பாகத்தைப் புரிந்து கொண்டு ஒவ்வொருவரும் இந்த பாகத்திலிருந்து தங்களுடைய சக்தி, அன்பு மற்றும் உற்சாகத்தை எடுத்து கொள்கின்றனர். பாப்தாதாவும் குழந்தைகளை சந்தித்து எவ்வளவு குஷி அடைவார் அதனை குழந்தைகளும் அறிவர், பாபாவும் அறிவர் ஆக இந்த வாய்ப்பும் டிராமா மிக நன்றாகவே அமைத்துள்ளது. பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து எவ்வளவு குஷி அடைகிறார் மேலும் எவ்வளவு வாழ்த்துக்களை உளப் பூர்வமாக தருகிறார்.

ஆக இதே பாடலைப் பாடிக் கொண்டிருக்கின்றார். ஆஹா குழந்தாய் ஆஹ! அனைவரும் குஷியாகவும் திருப்தியாகவும் இருந்து முன்னேற்ற அடிகளை எடுத்து வைப்பதற்கு நிமித்தமாக இருக்கிறீர்கள் இல்லையா! ஆனால் அதில் வித்தியாசம் இருக்கலாம் ஆனால் சந்திப்பு என்பது நிகழத்தானே செய்கிறது. பாப்தாதாவிற்கும் குழந்தைகளைப் பார்த்து அவ்வளவு குஷி ஏற்படுகிறது. அதுவும் மிகுந்த குஷி ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து என்ன செய்ய விரும்புகிறார். அது பாப்தாதா வினுடைய உள்ளம் அறியும் ஆனால் பாப்தாதா குஷி அடைகிறார். குழந்தைகள் வரிசைக்கிரமமாக நம்பர் பிரகாரம் இருக்கலாம் ஆனால் குழந்தைகள் மற்றும் பாபாவினுடைய சந்திப்பு ஏற்படுகிறது அல்லவா! பாபா பார்த்தார், குழந்தைகள் நினைவில் இருக்கின்றனர், நினைவு செய்து கொண்டும் இருக்கின்றனர் ஆனால் மாயாவோடு எதிராக சந்தித்துக் கொண்டும் இருக்கிறார்கள். டாப்தாதா சூட்சுமத்தில் ஒவ்வொரு குழந்தைக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார் ஆஹா

குழந்தாய்! ஆஹா! இந்த தந்தை மற்றும் குழந்தைகளினுடைய சந்திப்பு அழிவற்றதாகும், நிரந்தரமாக அழிவற்றதாகவே இருக்கும்.

அனைவரும் சரீரம் மற்றும் ஆத்ம ரூபத்தில் குஷியாகத்தானே இருக்கிறீர்கள் இல்லையா! அசையுங்கள். அனைவரும் கையையும் பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். மிகவும் நன்று, வாழ்த்துக்கள்! பாப்தாதா பார்த்தார் உள்ளத்தின் அன்பு, உண்மையான அன்பு ஒருபொழுதும் அழிய முடியாது. ஆக பாபாவும் ஆஹா குழந்தைகளே ஆஹா! என்னும் பாடலை பாடிக் கொண்டிருக்கின்றார். அனைத்து குழந்தைகளும் நினைவில் இருப்பதற்கான செய்யும் முயற்சியைப் பார்த்து பாப்தாதா குஷி அடைகிறார். இதற்காக வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! பாப்தாதாவும் குழந்தைகளாகிய உங்களை நினைவு செய்கிறார். குழந்தைகள் மறந்து விட்டனர் என்று அப்படியும் கிடையாது. ஒவ்வொரு குழந்தையும் பாப்தாதாவின் உள்ளத்தில் இருக்கின்றனர். வரிசைக்கிரமமாக ஒருவேளை இருக்கலாம். ஆனாலும் நினைவில் இருக்கின்றனர். ஆக இன்றைய தினத்தில் பாபா மகான் தினமாக அறிகிறார். இன்றுதான் தந்தை மற்றும் குழந்தைகளினுடைய நேரடி சந்திப்பு ஏற்படுகிறது. பாபாவிற்கும் மகிழ்ச்சி, குழந்தைகளுக்கும் மகிழ்ச்சி அடுத்து செய்ய வேண்டியது பாபாவின் செய்தியை பரப்புவதற்கான ஏதேனும் திட்டத்தை தீட்டுங்கள், அதன் மூலம் உலகினர் விழித்தெழட்டும் உறங்கி விடக் கூடாது. அவர்களை எழுப்பி கொண்டே இருங்கள். முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். பாப்தாதா உங்களது பாக்கியத்திற்கு முன்னதாக பாவமான அவர்களையும் (உலகினர்) அறிவார் ஆனால் இப்பொழுது அப்படிப்பட்ட சமயம் வர இருக்கிறது. யார் இந்த மூன்றினையும் நினைவு செய்வார்கள். ஆகவே நீங்கள் உங்கள் காரியத்தை செய்து கொண்டே இருங்கள். பாவம் அவர்கள்! நீங்களோ பாக்கியவான்கள் தங்களது பாக்கியத்தை அடைந்துள்ளீர்கள். அதனை அனுபவித்து கொண்டிருக்கின்றீர்கள். மேலும் பாப்தாதாவும் குஷியாக இருக்கிறார். பாபா அவ்யக்தம் ஆன பிறகும் குழந்தைகள் அவரை அறிந்துள்ளனர். மேலும் சேவையினுடைய பாக்கியத்தையும் எடுத்துக் கொண்டிருக்கின்றனர். நல்லது!

அனைவரோடும் தற்போது இந்த விதியின் ஆதாரத்தில் தான் சந்திப்பு ஏற்படுகிறது. அவர்களும் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இதிலும் பாப்தாதா குஷி அடைகிறார். மேலும் என்ன பாடலும் பாடுகிறார்? ஆஹா பாக்கியவான் குழந்தைகளே ஆஹா!

சேவையினுடைய முறை இந்தூர் மற்றும் போபால்: (25,000-சகோதர, சகோதரிகளினுடைய குரூப், இந்தூர் விடுதியின் 200-குமாரிகளும் வந்துள்ளனர்). இந்த பாகமும் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதுவே நடந்து கொண்டிருக்கின்றது. பாப்தாதாவும் குழந்தைகளை சந்தித்து குஷி அடைந்து கொண்டிருக்கின்றார். எவ்வளவு பாக்கியவான் குழந்தைகள்! இந்த பாக்கியத்தைப் பார்த்து அடிக்கடி உள்ளத்திலேயே கூறுகிறார். வாயினாலும் கூறுகிறார். ஆஹா குழந்தைகளே! ஆஹா பாக்கியவான் குழந்தைகளே ஆஹா! நல்லது! என்ன பாகம் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறதோ அது நாடகப்படி நடக்க வேண்டியது அது நடந்து கொண்டிருக்கிறது. தற்போது ஒவ்வொருவரும் பாபாவினுடைய நினைவில் இருக்க வேண்டும். சேவையில் முன்னேற வேண்டும். மேலும் பாவமாக அறியாமலிருக்கக் கூடியவர்களும் (உலகினர்) இருக்கிறார்கள். அவர்களுக்கு நாலா புறங்களிலும் சேவையை குஷி குஷியாக செய்து வர வேண்டும். ஏதேனும் புகார் இருந்து விடக் கூடாது. உங்களுக்குத் தெரியும், ஆனால் எங்களுக்குத் தெரியாமல் போய் விட்டதே! சேவையும் செய்யுங்கள், மேலும் அவர்களுக்கு உற்சாகம் ஆர்வத்தை வழங்கி முன்னேறச் செய்யுங்கள். மேலும் உங்களுடைய காரியமான செய்தியை வழங்க வேண்டியது அதனை மிகவும் சமயோசிதமாக (யுக்த்தி யுக்த்) செய்து கொண்டே இருங்கள். ஏதேனும் ஒரு ஆசை இதயத்தின் மூலையில் அப்படியே தங்கி விடக் கூடாது. பாபாவின் செய்தியை தற்போது கூட நாலா புறங்களுக்கும் வித விதமான முறையில் கொடுத்துக் கொண்டே இருங்கள் சேவை மற்றும் நினைவு இரண்டிற்கும் உள்ள சம நிலையை ஏற்படுத்திக் கொண்டு முன்னேறிச் சென்று மேலும் பிறரையும் முன்னேறச் செய்து கொண்டே இருங்கள். பாப்தாதாவிற்கு மிகுந்த குஷி, பின்னால் வருபவர்கள் கூட குறைந்தவர்கள் அல்ல. வாய்ப்பு கிடைத்தவுடன் அவர்கள் செய்து கொண்டு இருக்கிறார்கள் ஆனால் தமது ஸ்திதியினுடைய (ஆத்ம நிலை) கவனமும் இருக்க வேண்டும். குறைவானவர்களாக இருக்கலாம் ஆனால் சக்தி வாய்ந்தவர்கள் அனைத்தையும் பார்த்து

விட்டார்கள் இல்லையா எனவே அவ்வாறு தெரிந்து கொள்வதில் மிகவும் புத்திசாலிகள் அந்த மாதிரியான குழந்தைகள் மீதும் பாப்தாதாவிற்கு மிகுந்த குஷி.

இரட்டை வெளிநாட்டினர் 65-நாடுகளிலிருந்து 1100-சகோதர, சகோதரிகள் வந்துள்ளனர், நல்லது வந்து கொண்டே இருக்கிறார்கள். சேவையும் அதிகரிக்கிறார்கள். அதற்காக வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள்! ஏதேனும் ஒரு விதி மூலமா முழு உலகத்திலும் இதனைப் பரப்பிக் கொண்டே இருங்கள். இப்பொழுது கூட நாலா புறங்களிலும் உங்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் மறைந்திருக்கின்றனர். ஆகையால் சேவையினுடைய பாகத்தை நாலாபக்கங்களிலும் விரிவாக்கிக் கொண்டே செல்லுங்கள். பிறகு உங்கள் மீது புகார் வந்து விடக் கூடாது. நீங்கள் கூட எங்களைத் தெரிந்து கொள்ளவில்லை. அப்படி என்று. செய்தியை பரப்பிக் கொண்டே செல்லுங்கள். உங்களது குடும்பத்தின் ஆத்மாக்களை உங்களுடையவர் களை ஆக்கிக் கொண்டே செல்லுங்கள். பாப்தாதா குழந்தைகளாகிய உங்களைப் பார்த்து குஷி அடைகிறார். எந்த விதமான கவலையுமின்றி சென்று கொண்டிருக்கிறீர்கள். அவ்வாறே செல்லுங்கள்.

முதல் முறையாக வந்திருக்கும் பல குழந்தைகள்: அநேகம் பேர் முதல் முறையாக வந்திருக்கின்றனர். ஆக எப்படி தற்போது சேவையை நடத்திக் கொண்டிருக்கிறீர்களோ அவ்வாறே சேவையிலும் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். அவ்வாறு அநேகம் பேர் இருக்கின்றனர் (மறைவாக). அவர்கள் விரும்பினால் கூட இங்கு வந்து சேர முடிவதில்லை. உங்களது சேவையை அதிகரித்துக் கொண்டே செல்லுங்கள். பாபாவின் செய்தியை கொடுத்துக் கொண்டே போங்கள். பல நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டே இருங்கள். எவ்வளவு சேவையை அதிகரிப்பீர்களோ அவ்வளவு உங்கள் மீதான புகார் குறைந்து கொண்டே போகும். எனவே சேவையில் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். தற்போது கூட அவ்வாறு நிறைய ஆத்மாக்கள் உள்ளன. அவர்களுக்கு செய்தி இன்னும் கிடைக்கவே இல்லை. அப்படிப்பட்ட ஆத்மாக்களை சேவை மூலம் எழுப்பிக் கொண்டே இருங்கள். எப்படி நீங்கள் உற்சாகம், ஆர்வத்துடன் நிகழ்ச்சிகள் நடத்துகிறீர்களோ செய்தியைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறீர்களோ அவ்வாறே மேலும் தைரியம் வைத்து

மேலும் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். புகார்கள் தங்கி விடக் கூடாது. நீங்கள் எங்களுக்கு வாய்ப்பே தர வில்லை என்று புகார்கள் தங்கி விடக் கூடாது. சேவையினுடைய வாய்ப்பை அதிகரித்துக் கொண்டே செல்லுங்கள். இவ்வளவு பெரிய உலகம் எவரது புகாரும் இருந்து விடக் கூடாது. நாலா புறத்திலும் உள்ள சேவையை அதிகரித்துக் கொண்டே செல்லுங்கள். நல்லது!

நாலா புறங்களிலும் உள்ள குழந்தைகளுக்கு பாப்தாதா தீவிர புருஷார்த்தம் பவ என்று கூறி அன்பு நினைவுகளைத் தருகிறார். சதா அமிருத வேளை எழுந்த உடனே தீவிர புருஷார்த்தி பவ என்பதின் அன்பு நினைவினை நினைவில் வைத்து முன்னேறிச் செல்ல வேண்டும். ஏனெனில் பாபாவிற்கு ஒவ்வொரு குழந்தையின் மீது அன்பு உள்ளது. ஒரு சிலரே மேடையில் தென்படலாம் ஆனால் பாப்தாதா அனைத்து குழந்தைகளையும் தூரத்திலிருந்து பார்த்தே உள்ளத்தின் அன்பு நினைவைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்.

தாதி ஜானகிஜி அவர்கள் பாப்தாதாவை சந்திக்கிறார்கள்: லண்டன் செய்தியைக் கூறிக் கொண்டிருக்கிறார். சரி, மிக நல்லது!

நியூயார்க்கிலிருந்து மோகினி சகோதரி உங்களுக்கு மிகுந்த அன்பு நினைவுகளை அனுப்பியுள்ளார். மிக ஆரம்பகாலத்திலிருந்தே உற்சாகம் ஆர்வத்தோடு இருக்கக் கூடியவர். சேவையின் வாய்ப்பை நன்கு எடுத்துக் கொள்ளக்கூடியவர். மேலும் சேவை செய்து அநேகரை முன்னேறச் செய்யக் கூடியவர். பாப்தாதா குழந்தைக்கு விசேஷமான அன்பு நினைவுகளைத் தருகிறார். உடல் நிலை காரணமாக வந்து போவதை சரியாக செய்ய முடிவதில்லை ஆனால் பாபாவின் நினைவில் குழந்தையும் இருக்கிறது. பாபாவும் நினைவை அனுப்பிக் கொண்டிருக்கிறார். குழந்தை முன்னேறிக் கொண்டேயிருக்கிறது. முன்னேறிக் கொண்டே இருக்கும்.

சாந்திவன் மோகினி சகோதரியிடம் உடல் நிலை சற்று குறைவாக உள்ளது. உடல் நிலையை பாபாவிடம் கொடுத்து விடுங்கள். பாபாவின் சார்பில் இப்போது மேடைக்கு வாருங்கள். அப்போது நன்றாக செய்ய

முடியும். இதில் சக்தி நிரம்பி யுள்ளது, எல்லோரும் கை அசைக்கிறார்கள்.

தாதி ஜானகி குல்சார் தாதி ஒரு முறை வெளி நாட்டிற்கு அவசியம் செல்ல வேண்டும். அனைவரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நன்றாக பார்த்த பிறகு திட்டமிடுங்கள். பூனாவில் ஜகதம்பா பவன்கட்டுவதற்காக நிலம் வாங்கப்பட்டுள்ளது. பூனாவை சார்ந்தவர்களிடம் முதலில் உற்சாகத்தை ஏற்படுத்துங்கள். அவர்கள் கொஞ்சம் பேர் ஆனந்தமாக உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். சேவையில் ஒரு ஆர்வம் இருக்கிறது என்பதை அறிவர்கள், ஆனாலும் கொஞ்சம் எழுப்புங்கள். பூனாவில் இந்த காரியம் நடந்தேறும். பிரிஜ்மோகன் சகோதரர் அவரும் கூட அன்பு நினைவுகளை அனுப்பியுள்ளார். சிவஜெயந்தியின் சேவை காரணமாக அவர் வர முடியவில்லை. அவருக்கும் அன்பு நினைவுகள்.

மூன்று முக்கிய சகோதரர்களுக்காக: கணக்கு வழக்குகள் எல்லாம் சரியாக நடக்கிறது அல்லவா? (இதுவரை நன்றாகவே நடந்து வருகிறது, தாதிஜி லண்டன் சென்று திரும்பியுள்ளார்). மிகுந்த தைரியம் உள்ளது அல்லவா? செய்தே ஆக வேண்டும் என்ற சங்கல்பம் எழுகிறது, அது நடந்தேறி விடுகிறது. அனைவருக்கும் மகிழ்ச்சி தானே. ஒருவர் மற்றவர்களுடையே கலந்து ஆலோசித்து எதை செய்ய வேண்டுமோ, மீட்டிங் போட்டு முன்னேறி செல்லுங்கள். பாபாவும் குஷி.

புதிய டைமன்ட் லோட்டஸ் (தாமரை) அதன் ஆரம்பம் தயாராகியுள்ளது. நல்லது. பாப்தாதாவிற்கு அழைப்பிதழ் கொடுக்கப்பட்டது. பாப்தாவோ அங்கே சென்று வந்து விட்டார்.

போபால் சகோதரரிடம் சேவையில் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். (உடல் நிலை சற்று தொந்தரவு செய்கிறது) யாராவது தெரிந்தவருடன் அறிமுகத்தை எற்படுத்திக் கொண்டு முன்னேறுங்கள்.

பாப்தாதா தனது திருக்கரங்களால் சிவ கொடியை ஏற்றினார்! இன்று சிவராத்திரியின் கொடியை ஏற்றிக் கொண்டிருக்கின்றோம். அனைவரும் சிவராத்திரி அன்று உள்ளத்தால் சங்கல்பம் செய்யுங்கள்,

போகப்போக முன்னேறிச் சென்று கொண்டே உலகத்தில் வெற்றியின் கொடியை ஏற்றுவோம். முழு உலகில் வெற்றியின் ஒலி கேட்கட்டும். எப்படி பாபா வந்து விட்டார், என்னுடைய பாபா வந்து விட்டார் என்று!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

## 15.03.2015 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## அன்றாட காரியங்களைச் செய்துகொண்டே மேரா பாபா (எனது பாபா), மீட்டா பாபா (இனிமையான பாபா) இந்த இரண்டு வார்த்தை எப்போதும் நினைவிருக்க வேண்டும்; இந்த அலௌகீக அன்பின் சம்பந்தம் தான் பரிசு ஆகும்!

ஓம் சாந்தி. அனைவருடைய முகமும் புன்சிரிப்போடு, பாப்தாதாவோடு ஒருவருக்கொருவர் முகமலர்ச்சி யோடு சந்தித்துக் கொண்டிருக்கின்றனர். இன்று அனைவருடைய முகத்திலும் நீண்ட காலத்திற்குப் பிறகு ஒவ்வொருவரும் சாகார ரூபத்தில் முன்னாலும் பின்னால் இருப்பவர்களும் கண்கள் மூலமாக சந்தித்துக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொருவருடைய மனமும் இந்த பாடலைப் பாடிக் கொண்டிருக்கிறது. மேரா பாபா! மீட்டா பாபா! பியாரா பாபா! (அன்பான தந்தையே) எவ்வளவு ஆத்மாக்கள் பாபா மற்றும் குழந்தைகளின் சந்திப்பைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றனர். அனைவருடைய முகத்திலும் சந்திப்பின் மகிழ்ச்சியான முகம் தென்படுகின்றது. அருகில் இருந்தாலும் சரி, தூரத்தில் இருந்தாலும் சரிஆனால் கடைசியில் இருப்பவர்களும் சந்திப்பின் ஊக்கம் உற்சாகத்தால் பாப்தாதாவை தன் பக்கம் ஈர்த்து விடுகின்றனர். பாபாவின் வாயிலிருந்து ஆஹா! என்னை மனதார நினைவு செய்யக் கூடிய குழந்தாய் ஆஹா! பாபாவினுடைய மனதில் குழந்தைகள் மற்றும் குழந்தைகளின் மனதில் பாபா, அனைவருடைய மனதிலும் சந்திப்பினுடைய சந்தோஷத்தின் அலைகள் தென்படுகின்றன. பாபா கூட மனதார இதே பாடலை பாடிக் கொண்டிருக்கின்றார். ஆஹா! குழந்தாய் ஆஹா! மேலும் குழந்தைகளும் இதே பாடலைப் பாடிக்

கொண்டிருக்கின்றனர் ஆஹா! பாபா ஆஹா!. ஆஹா என்று கூறியதும் அனைவருடைய முகத்திலும் சந்தோஷத்தின் பொலிவு தெள்ளத்தெளிவாக தென்படுகின்றது. எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் அனைவருடைய மனதிலும் ஆஹா! பாபா ஆஹா. மற்றும் பாபாவினுடைய மனதில் ஆஹா! குழந்தாய் ஆஹா. முகத்தில் மனதார சந்திப்பதன் அலைகள் மிகத் தெளிவாக தென்படுகின்றன. வாயின் மூலம் பாட்டு பாடுவதில்லை ஆனால் ஒவ்வொரு வருடைய மனதின் பாட்டும் முகத்தில் தென்படுகின்றது. ஒவ்வொருவருடைய முகமும் முகமலச்சியோடு எவ்வளவு இனிமையாக சிரித்துக் கொண்டிருக்கின்றனர். பாபா கூட மனதார இதே பாடலைப் பாடிக் கொண்டிருக்கின்றார் ஆஹா! குழந்தாய் ஆஹா! ஒவ்வொருவருடைய முகத்திலும் பாபா இதைத்தான் பார்த்துக் கொண்டிருக்கின்றார், மேலும் மனதார கூறிக் கொண்டிருக்கின்றார்கள். மனதினுடைய சப்தத்தை பாபாவிற்கு மிகவும் தெளிவாக பார்க்க முடிகிறது. பாபாவின் இதே பாடல் ஆஹா! குழந்தாய் ஆஹா, குழந்தைகளும் அதே பாடல் ஆஹா! பாபா ஆஹா.ஃ மேலும் ஒவ்வொருவருடைய முகத்திலும் ஆஹா! ஆஹா! என்ற அடையாளம் மிகத் தெளிவாகத் தென்படுகின்றது. சிலர் பாட்டின் மூலமாகவும் சிலர் மனதின் சப்தத்தின் மூலமாகவும் இந்த கண்கள் மூலமாகவும் தன்னுடைய மனதின் பாடலைப் பாடிக் கொண்டிருப்பது மிகவும் தெளிவாகத் தென்பட்டுக் கொண்டிருக்கின்றது. மேலும் பாபா கூட பிரதி பலனாக குழந்தைகளை பார்த்து ஒவ்வொரு குழந்தையும் மனதை கொள்ளைகொள்பவரான மனதின் நட்சத்திரங்களே என்கின்றார். ஆஹா குழந்தாய் ஆஹா! நட்சத்திரங்களே ஆஹா!

இன்று அனைவரின் முகத்திலும் மூர்த்தியைப் பார்க்கின்றார். பாபா கூட பாட்டை மனதில் பாடுகின்றார் ஆஹா! ஒவ்வொரு குழந்தைகளும் ஆஹா! என்று. எவ்வளவு காலத்தின் ஆசை முகத்தைப் பார்க்க வேண்டும் என்று, ஆனால் இன்று நடைமுறையில் பார்க்க முடிகின்றது. ஆகையால் குழந்தைகளின் மனதில் ஆஹா! பாபா ஆஹா! மேலும் பாபாவின் மனதில் ஆஹா! குழந்தாய் ஆஹா, இந்த மனதின் பாட்டு அனைவரும் அவர்களுடையதையும், பிறருடையதையும் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மேலும் பாப்தாதா அந்த மனதின் பாட்டை கேட்டு கேட்டு மிகவும் அன்பை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்.

பாபா கேட்டுக் கொண்டே மனதார பதில் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொருவருக்கும் அதாவது எத்தனை பேர் இருந்தாலும் ஒவ்வொரு வருடைய மனதிலும் மேரா பாபா! மேரா... இந்த சப்தம் தான் வருகின்றது மற்றும் பாபா கூட ஒவ்வொரு குழந்தைகளுக்கும் பதில் தருகிறார். எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் இங்கு தான் இருக்கின்றீர்கள்ஆனால் மற்ற தேசத்திலிருந்தும் அனைவருடைய வாயிலி ருந்தும் ஆஹா பாபா ஆஹா என்ற பாடலை பாபா கேட்டுக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையும் ஆஹா! பாபா ஆஹா!. என்னுடைய பாபா! ஆஹா! இதிலேயே மூழ்கியிருக்கின்றார்கள். ஆகையினால் மனதினுடைய பாடல் கேட்பதில்லை ஆனால் பாபாவிற்கு அனைவருடைய சப்தமும் வந்தடைகின்றது. பாப்தாதாவும் பதிலுக்கு கூறுகின்றார், ஆஹா குழந்தாய்! ஆஹா! ஒவ்வொரு மனதிலும் யார்? அனைவரும் என்ன கூறுகின்றீர்கள்! என்னுடைய பாபா! பாபா மற்றும் குழந்தைகளின் இந்த பாடலை கேட்டீர்கள் தானே! பாபா கூறுகின்றார் என்னுடைய குழந்தாய்! குழந்தைகள் கூறுகின்றார்கள் என்னுடைய தந்தை (மேரா பாபா) எவ்வளவு இனிமையான சப்தம்! என்னுடையது என்று கூறுகிறீர்கள் தானே! அதனுடைய ஆச்சரியம். ஒவ்வொருவருடைய மனதும் கூறுகின்றது என்னுடைய பாபா. பாபாவினுடைய மனதிலிருந்து ஒவ்வொரு குழந்தைக்காகவும் கூறுகின்றார் என்னுடைய குழந்தாய்! ஏனென்றால் சாகார ரூபத்தில் குப்தமான மனதினுடைய விசயங்கள்! ஆனால் ஒவ்வொருவருடைய மனதின் சப்தமானது பாபாவின் மனதிற்கு மிகத் தெளிவாகக் கேட்கின்றது. குழந்தைகள் கூறுகின்றார்கள் என்னுடைய தந்தை! மேலும் பாபா கூறுகின்றார் என்னுடைய குழந்தாய் இந்த பாபா மற்றும் குழந்தைகளின் சந்திப்பு என்ன ஏற்படுகிறது. இது ஒவ்வொருவருடைய அனுபவர். ஒவ்வொருவரின் வாயிலிருந்தும் இந்த சப்தம் தான் வெளிப்படுகிறது. ஆஹா என்னுடைய தந்தை! ஆஹா என்னுடைய பாபா! ஒவ்வொருவருக்கும் பதில் கிடைக்கின்றது ஆஹா! குழந்தாய் ஆஹா! ஆனால் இந்த சந்திப்பயனது மிகவும் விசித்திரமானது. அனைவரும் பதிலுக்கு ஆஹா! பாபா ஆஹா! என்று கூறுகின்றார்கள், ஆனால் ஒவ்வொருவரும் அவரவர் மனதிலிருந்து தன்னுடைய வார்த்தைகளால் கூறுகின்றார்கள். மேலும் பாப்தாதா அனைத்து குழந்தைகளின் பதிலைக் கேட்டு மனதின் அன்பைப் பார்த்து அவ்வளவு

புன்முறுவல் அடைகின்றார். அது இப்பொழுது இந்த கூட்டத்தில் குழந்தைகளுக்குத் தெரியும் தந்தையைப் பற்றி! பாபாவிற்குத் தெரியும் குழந்தைகளைப் பற்றி. இருவரும் ஆஹா! ஆஹா! ஆஹா! என்று கூறுகின்றார்கள். மேலும் பாபா அதனைக் கேட்டு கேட்டு அனைத்து குழந்தைகளுக்கும் பதில் தருகின்றார். ஒவ்வொரு நொடியும் இந்த வாயின் மூலமாக ஒவ்வொரு குழந்தைகளும் பாடிக் கொண்டிருக்கின்றார்கள். ஆஹா பாபா, ஆஹா மேரா பாபா, ஆஹா அன்பான தந்தையே (பியாரா பாபா) ஆஹா, மனதில் மூழ்கியிருக்கக் கூடிய தந்தையே! உங்களுடைய அன்பானது உங்களுக்கும் தெரியும் மற்றும் எனக்கும் தெரியும். ஒவ்வொருவரின் முகத்தையும் முன்னால் இருந்து பார்த்தால் அனைவருடைய முகமும் கூடுதலாக அந்த மாதிரி தென்படுகிறது. மிகுந்த சமயம் அன்பில் மூழ்கியிருந்த குழந்தைகள் மனதில் இருந்து கூறுகின்றார்கள் ஆஹா, ஆஹா ஆஹா! ஆஹா! ஆஹா! என்ற தொனியானது ஒவ்வொரு குழந்தையின் மனதிலிருந்து கேட்டுக் கொண்டேயிருக்கின்றது. அனைவருடைய மனதிலும் யார்! என்ன கூறுவீர்கள்? மேரா பாபா (என்னுடைய தந்தை) மீட்டா பாபா, பியாரா பாபா? மேலும் பாபாவின் மனதில் யார்? இப்பொழுது என்னுடையது மற்றும் இனிமையானது இந்த இரண்டு வார்த்தையை மட்டும் நினைவில் வைக்க வேண்டும். இனிமையான தந்தை, என்னுடைய தந்தையே ஒவ்வொரு குழந்தையும் மனதிலிருந்து பாருங்கள், மனதில் யார் நிறைந்திருக்கிறார்கள்? மேரா பாபா! ஒவ்வொருவரின் மனதிலும் மேரா பாபா மேரா பாபா இருக்கின்றார். ஏனென்றால், இந்த அன்பானது பாபா மற்றும் குழந்தைகளினுடைய அலௌகீகமான அன்பு, இந்த முழு கல்பத்திலும் இந்த பிறவியில் அனுபவம் செய்பவர்கள். ஆகையினால் கூறுங்கள். ஒவ்வொருவருடைய மனதிலும் யார்? மேரா பாபா! ஒவ்வொருவரின் முகமும் எவ்வளவு மலர்ந்து காணப்படுகிறது. பாப்தாதா எதிரில் பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையும் மனதில் என்னுடைய தந்தையே! என்று கூறிக் கொண்டு அதில் மூழ்கி விடுகின்றார்கள். பாபா மற்றும் குழந்தைகளின் சந்திப்பின் படம் சதா காலத்திற்கும் ஒவ்வொருவரின் மனதிலும் பதிந்து விட்டது.

இப்பொழுது இந்த விசயத்தில் நீங்கள் பாஸாகி விட்டீர்கள். அனைவருடைய மனதிலும் பாபாவின் நினைவு இருக்கிறது. ஏதாவது

காரணத்தினால் சில சமயங்களில் மறந்து விடுகின்றீர்கள்ஆனால் கணக்கு வழக்கு காரணமாயும் கொஞ்சம் மறந்து விடுகிறார்கள், ஆழ்ந்த அன்பு காரணமாக என்னுடைய தந்தை என்பது மிகவும் ஆழத்தில் உறுதியாகி விட்டது ஆகையினால் நடக்கும் போதும் போகும் போதும் அனைவரும் கூறுகின்றீர்கள் மேரா பாபா, மேரா பாபா என்பதை மறக்க முடியவில்லை. மேலும் பாபாவிற்கும் என்ன நினைவு இருக்கின்றது. என்னுடைய குழந்தாய்! அது தானே இருக்கின்றது? இருக்கின்றது தானே? அனைவருடைய மனதிலும் யார்? உறுதியாக, உறுதியாக உள்ளது தானே! அதிசயம் இது தான், இங்கு குழந்தைகளின் மனதில் பாா, பொதுவாக வாழ்க்கையின் துணைவன் நினைவு இருக்கும்ஆனால். இங்கு ஒவ்வொருவரின் மனதையும் கேளுங்கள். மனதில் யார் இருக்கின்றார், மேரா பாபா என்று கூறுவார்கள். மனதில் யார் உள்ளார்? மேரா பாபா? பாபாவின் விசயங்கள் தான் ஒவ்வொரு காரியங்களைச் செய்யும் பொழுதும் நினைவு இருக்கின்றது. முழு நாளும் பார்க்க வேண்டும். சோதனை செய்யுங்கள், அன்றாட காரியங்களைச் செய்தாலும் யாருடைய தினைவு இருக்கின்றது? யாரைப் பின்பற்றுவீர்கள். சாகாரத்தில் என்ன தென்படுகின்றது? பாபாவின் மனதில் நான், மற்றும் என்னுடைய மனதில் பாபா! அந்த மாதிரி தானே! கையை உயர்த்துங்கள். அந்த மாதிரி தானே! உறுதியாக உள்ளது தானே! அந்த மாதிரி கூறிக் கொண்டு அன்றட காரியங்களைச் செய்யும் பொழுது மறந்து விடுகின்றதுஆனால் இங்கு மறந்து விடுகிறது என்ற பெயரே கிடையாது. மேலும் பாபாவின் மனதில் யார்? என்னுடைய குழந்தாய் இந்த சம்மந்தம் சங்கமயுகத்தின் பரிசாகும். நல்லது. இன்றைய சந்திப்பானது அனைவருக்கும் கிடைத்து விட்டது தானே!

இப்பொழுது இந்த சந்திப்பானது எப்பொழுதுமே நினைவில் இருக்கும்! ஆத்மா மற்றும் பராமத்மாவின் சந்திப்பானது சாதாரண சந்திப்பு கிடையாது. யாரிடம் வேண்டுமானாலும் கேட்டுப் பாருங்கள் உங்கள் மனதில் யார் என்று? அனைவரும் கூறுவார்கள் மேரா பாபா (என்னுடைய தந்தை). எவ்வளவு ஆழமான அன்பு உள்ளது.

**சேவையின் வாய்ப்பு ஈஸ்டன் மண்டலம் -வங்களாம், பீகார், ஒரிசா, அசாம், நேபாளம், தமிழ்நாடு):** 21000-பேர் வந்திருக்கிறார்கள். பாபா கூட இந்த சந்திப்பை மறக்க முடியாது. எப்பொழுதெல்லாம் நேரம்

கிடைக்கின்றதோ அப்பொழுது மனதில் என்ன எழுகின்றது. என்னுடைய குழந்தாய்! செல்லக் குழந்தாய்! மேலும் குழந்தைகளுக்கு நேரம் கிடைக்கும் போது மேரா பாபா (என்னுடைய தந்தை) அந்த மாதிரி தானே! அந்த மாதிரி என்றால் கையை உயர்த்துங்கள். மறக்கக்கூடிய பொருள் கிடையாது. எவ்வளவு தான் மறப்பதற்கு முயற்சி செய்தாலும் ஆனால் மறந்தும் மறக்க முடியாது. (அனைவரும் எழுந்து நிற்கிறார்கள்). நிறைய பேர் வந்திருக்கின்றார்கள். தங்களுடைய முறையில் சேவைக்காக நன்றாக வந்துள்ளார்கள். பாபா மற்றும் யக்ஞ சேவையில் அனைவருக்கும் அன்பு உள்ளது. ஏனென்றால் இந்த சேவை மற்றும் சந்திப்பு இரண்டும் சேர்ந்து உள்ளது.

**நேபாளத்திலிருந்து 2500-பேர் வந்திருக்கிறார்கள்:** சகோதரிகள் கையை உயர்த்துங்கள். நல்லது. பாப்தாதாவிற்கு சில குழந்தைகள் அருகாமையில் இல்லை என்றால் நினைவு வருகின்றது தானே! ஆகையினால் இந்த சந்திப்பினுடைய வழிமுறை (பழக்கம்) மிகவும் நல்லதாக உள்ளது. அனைவருக்கும் சந்தோஷம் தானே! சந்தோஷம் இருந்தால் இரண்டு கைகளையும் உயர்த்துங்கள். அவ்வாறு இருந்தால் மட்டும் தான்!

**தமிழ்நாட்டிலிருந்து 4500-பேர் வந்திருக்கிறார்கள்:** நிறைய பேர் வந்துள்ளனர். வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள். நல்லது. பலன் நன்றாக உள்ளது.

இரட்டை அயல் நாட்டினர் 1200-பேர் வந்துள்ளனர். இந்த வாய்ப்பு பிராமணர்களைச் சந்திப்பது பெரிய பாக்கியமாகும். எங்கெங்கிருந்தெல்லாம் வந்திருக்கிறார்கள். மேலும் எவ்வளவு ஊக்கம், உற்சாகத்தோடு, வந்திருக்கிறார்கள். பாப்தாதா ஒவ்வொரு குழந்தை கயையும் பார்த்து சந்தோஷம் அடைகின்றார். மேலும் ஒவ்வொருவரும் சேவைக்கு வந்ததற்காக வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றார். மிகவும் நல்லது.

பாப்தாதாவிற்கு அனைத்து குழந்தைகளும் ஒவ்வொரு முறையும் வருவது மிகவும் நன்றாக உள்ளது. மேலும் யக்ஞ சேவையில் ஒவ்வொரு குரூப்பும் மிக அன்போடு செய்திருக்கிறார்கள். மேலும்

இப்பொழுதும் செய்கிறார்கள். ஒவ்வொரு குரூப்பிற்கும் பாப்தாதா மனதார திரும்பக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார், மேலும் யோசித்துப் பாருங்கள். இந்த யக்கும் யாருடையது? ஒவ்வொரு யக்ஞ நிவாசிகளினுடைய யக்ஞம் தானே! உங்கள் அனைவருக்கும் உண்மையான வீடு எங்கு உள்ளது? இது தானே! கூறப்போனால் நீங்கள் எங்கிருந்து வந்திருக்கிறீர்கள்? என்று கேட்பார்கள். நீங்கள் இவ்வாறு தானே கூறுவீர்கள். நாங்கள் அபுவில் உள்ளவர்கள் என்று. எங்கிருந்து வந்தாலும் சரி ஆனால் அவர்களும் கூட எங்குள்ளவர்கள்? அனைவரும் சீசனில் அவரவர் வாய்ப்பில் நன்றாக சகயோகம் கொடுத்துள்ளார்கள். சேவையை முழுமையாக முடித்துள்ளார்கள், அதற்காக பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளுக்கும் விசேஷமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்.

தாதி ஜானகிஜியிடம்: யக்ஞத்தில் ஒரு உதாரணமாக இருக்கின்றீர்கள். நோய் இருந்தாலும் வந்து விட்டீர்கள் (தாதி வகுப்பிற்கு வரவில்லை என்றால் வெறுமையாக தென்படுகின்றது) (குல்ஜார் தாதி, தாதியின் டாக்டர். சமயத்திற்கு தகுந்தாற்போல் நன்றாக ஆக்கி விடுகின்றார்) யார் வேண்டுமானாலும் செய்யலாம்? தைரியம் தாதியினுடையது தானே! நல்லது. அனைவரின் பார்வையும் உங்கள் மீது. எங்கள் தாதி, எங்கள் தாதி என்று. எவ்வாறு மேரா பாபா என்று கூறுகின்றார்களோ அதேபோல் மேரா தாதி!

மோகினி சகோதரி: (மருத்துவமனை போய் வந்திருக்கிறார்கள்) இப்பொழுது வந்து விட்டீர்கள். வாழ்த்துக்கள். தினசரி ஏதாவது கொஞ்சம் கொஞ்சம் நடக்கும். இருந்தாலும் சமயத்திற்குத் தகுந்தாற்போல் தயாராகி விடுகிறீர்கள். நல்லது தானே! வந்து விடுகிறீர்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! நல்லது. தைரியம் உள்ளது?

நியுயார்க் மோகினி சகோதரி: அன்பு நினைவுகளை அனுப்பியிருந்தார். (சமீபத்தில் அவருக்கு அறுவை சிகிச்சை நடைபெற்றது) தைரியம் நன்றாக வைத்திருக்கிறார். நேரம் எடுத்துக் கொண்டதுஆனால் தைரியம் வைத்து தன்னை காப்பாற்றிக் கொண்டார். (இப்பொழுது நன்றாக ஆகியே விடும்) பாபாவின் நினைவு என்ன? அனைவரின் நினைவும் அவருக்காக உள்ளது.

**நிர்வயர் சகோதரர்:** இப்பொழுது மருத்துவமனையில் இருந்து வந்து விட்டீர்கள்தானே? இனி மருத்துவமனை போக மாட்டீர்கள் தானே! (நான்கு தினங்களுக்காக போக வேண்டும்) நான்கு தினங்களுக்கு பிறகு முடிந்து விடும். நான்கு தினங்களுக்கு பிறகு சரியாகி விடும். நல்லது. இப்பொழுது அனைவரும் ஓ.கே. என்ற நாளைக் கொண்டாட வேண்டும். சில சில விஷயங்கள் ஏதாவது காரணத்தினால் ஆகின்றது.

**பிரிஜ்மோகன் சகோதரர்:** இவர் கூட சரியாகி விட்டார். (ரமேஷ் சகோதரரிடம்) நீங்கள் மூன்று சகோதரர்களும் நன்றாக இருக்கிறீர்கள் தானே!

**விடைபெறும் சமயத்தில்:** பாப்தாதா மைக் வைப்பதற்கு சம்மதிக்கவில்லை ஆனால் இந்த ஒரு மகா வாக்கியத்தை கூறியுள்ளார்: என்ன பழைய விசயங்கள் இருக்கின்றதோ அதை மறந்து விடுங்கள், முடிந்தது முடிந்து விட்டது. பழைய விசயம் முன்னால் வருகிறது என்றால் பாபாவின் நினைவு இருக்காது, இப்பொழுது ஒரு சிவபாபாவை மட்டும் நினைவு செய்யுங்கள். இப்பொழுது மிகுந்த சக்திசாலியான யோகத்திற்கு மிக அவசியம். அனைத்து இடங்களுக்கும் இந்த விசயத்தைக் கொடுங்கள். மேலும் அனைத்து பழைய விசயங்களையும் அழித்து ஒரு பாபாவின் யோகத்தில் சக்திசாலியான வாயுமண்டலத்தை உருவாக்குங்கள். மேலும் புதிய சேவைக்கான திட்டத்தையும் உருவாக்குங்கள். ஏதாவது சேவையின் நிகழ்ச்சி செய்கிறீர்கள் என்றால், அதில் தனித்தனியாகி விடுகின்றீர்கள்! ஆகையினால் அந்த சேவையின் திட்டத்தில் பலன் இல்லாமல் போய் விடுகின்றது ஆனால் ஒற்றுமையின் சக்தியின் மூலமாகதான் சேவையின் திட்டம் வெற்றிகரமாகும். இப்பொழுது 10-நிமிடம் நல்ல விதமாக அமைதியின் அனுபவத்தை செய்யுங்கள். யோகா செய்யுங்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## **10.04.2015 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்**

## வீடியோ -மிலன் நடைபெறவில்லை!

ரதத்திற்கு உடல்நிலை சரியில்லாததால் மும்பை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார் ! பழைய மிலன் வீடியோ போடப்பட்டது.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺
✺✺✺✺✺✺✺

## 14.10.2015 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## எந்தக் குழந்தைகள் நினைவில் இருக்கிறார்களோ அவர்கள் பாப்தாதாவின் மனதில் எப்போதும் அமர்ந்திருக்கிறார்கள். நம்முடைய சத்யுக இராஜ்யம் வந்தே விட்டது என்ற மகிழ்ச்சி இப்போது அனைவரின் மனதிலும் இருக்கிறது. அனைவரும் அப்படிப்பட்ட யுகத்தைக் கொண்டு வருவதில் மும்முரமாக இருக்கின்றனர்!

அனைத்து அன்பான குழந்தைகளின் அன்பு நினைவுகள் பாப்தாதாவிடம் வந்தடைந்தது. ஒவ்வொருவருடைய மனதும் என்னுடைய பாபா என்று சொல்லிக் கொண்டிருக்கிறது. மற்றும் பாப்தாதா என்ன சொல்லிக் கொண்டிருக்கின்றார்? என்னுடைய குழந்தைகளே! இந்த சந்திப்பு மிக அழகானது. ஹாலைப் பார்த்து, ஹாலில் குழந்தைகளின் அலங்காரத்தைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைந்துக் கொண்டிருக்கின்றார் மற்றும் மனதில் ஆஹா! குழந்தைகளே! ஆஹா! என்ற ஒலி வந்து கொண்டிருக்கின்றது. ஒவ்வொருவருடைய முகத்திலும் சந்திப்பின் மகிழ்ச்சியின் அலை தென்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த சந்திப்பு எவ்வளவு மதிப்பு வாய்ந்தது. ஒவ்வொருவருடைய மனதிலும் மற்றும் பாப்தாதாவின் மனதிலும் இதே சப்தம் வந்து கொண்டிருக்கின்றது. ஆஹா! என்னுடைய குழந்தைகளே ஆஹா! மேலும் குழந்தைகளின் மனதில் என்ன வந்து கொண்டிருக்கின்றது? ஆஹா பாபா ஆஹா! இந்த சந்திப்பு எவ்வளவு

அன்பானது. ஒவ்வொருவருடைய மனதிலும் என்னுடைய பாபா என்ற சப்தம் நிறைந்திருக்கின்றது. மேலும் பாபாவின் மனதில் இருக்கிறது? என்னுடைய குழந்தைகளே. ஒவ்வொரு குழந்தையும் தூரமாக அமர்ந்திருந்தாலும் அருகாமையில் அமர்ந்திருந்தாலும், எங்கே அமர்ந்திருக்கிறீர்கள்? இந்த சீட் மேல் அமர்ந்திருக்கிறீர்களா? எங்கே சீட் கிடைத்திருக்கிறது? பாப்தாதாவினுடைய மனதில் ஒவ்வொரு குழந்தையும் அமர்ந்திருக்கிறார்கள். இரண்டு சப்தம் வந்து கொண்டிருக்கிறது. ஒன்று ஆஹா பாபா ஆஹா! என்பதாகும். மற்றொன்று தந்தையினுடைய சப்தம் ஆஹா இனிமையான குழந்தைகளே ஆஹா! ஒவ்வொரு குழந்தையும் மனதில் அமர்ந்த பிறகு அருகாமையில் கண்கள் மூலமாக பார்த்து என்னென்ன பாடல்கள் பாடிக் கொண்டிருக்கிறார்கள். அனைவருடைய மனதிலிருந்தும் ஒரே ஒரு சப்தம் வந்து கொண்டிருக்கிறது. என்னுடைய பாபா. மேலும் பாபாவினுடைய வாயிலிருந்து என்ன சப்தம் வருகிறது. என்னுடைய குழந்தைகளே: இந்த தந்தை மற்றும் குழந்தைகளின் சந்திப்பு எவ்வளவு அதிசயமானது. தந்தை கூட எவ்வளவு மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். இது கூட ஒன்றும் இல்லை, வீட்டில் அமர்ந்திருந்தாலும், எங்கே அமர்ந்திருந்தாலும் அவர்கள் ஸ்தூலத்தில் கூட இந்த ஹாலில் அமர்ந்திருக்கிறார்கள். தந்தை மற்றும் குழந்தைகளின் இந்த சந்திப்பு எவ்வளவு அன்பானது மற்றும் விலகியதாக இருக்கிறது. அதிகபட்ச குழந்தைகள் தந்தையின் மனதில் அமர்ந்திருக்கிறார்கள். தந்தை கூட ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து, கடைசியில் அமர்ந்திருந்தாலும் பாபாவின் மனதில் நிறைந்திருக் கிறார்கள். பாபா கூட குழந்தைகளை இந்த கண்களால் பார்த்து எவ்வளவு மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். ஆஹா! குழந்தைகளே ஆஹா! ஒவ்வொரு குழந்தையும் தந்தையின் கண்களில் மணியாக இருக்கிறார்கள். ஆகையால் நீங்கள் ஒவ்வொருவரும் மற்றவருக்கு கண்ணின் மணி என்ற பட்டம் கொடுக்கிறீர்கள். எங்கே இருந்தாலும் நினைவு செய்யக் கூடிய குழந்தைகளின் கண்களில் பாபா நிறைந்திருக்கிறார். மற்றும் பாபாவின் மனதில் அனைத்துக் குழந்தைகளும் அமர்ந்திருக்கிறார்கள். யார் நினைவில் இருக்கிறார்களோ அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். தந்தையின் மனதில் அமர்ந்திருப்பதை பார்க்கின்றீர்கள் அல்லவா! இந்த காட்சி கூட இந்த சங்கமயுகத்தில் விசித்திரமான காட்சியாகும். அதை இப்பொழுது

பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். ஹாலில் சேர் (நாற்காலி) மீது அமர்ந்திருந்தாலும் பாப்தாதா என்ன அனுபவம் செய்து கொண்டிருக்கிறார். அனைவரும் மனதில் நிறைந்திருக்கும் மனதின் தீபங்கள் ஆவர். பாப்தாதா ஒவ்வொரு தீபத்தையும் பார்த்து எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறார். ஆஹா: குழந்தைகளே ஆஹா! தந்தை கூட குழந்தைகள் இல்லாமல் இருக்க முடிவதில்லை. மற்றும் குழந்தைகள் கூட தந்தையை முன்னால் சந்தித்து மிகுந்த அனுபவம் செய்கின்றனர். இப்போதும் அனுபவம் செய்து கொண்டிருக்கின்றனர். அனைவருடைய மனதிலும் யார் இருக்கிறார்? அனைவரும் என்ன சொல்வீர்கள்? என்னுடைய பாபா: மேலும் பாபாவின் மனதில் யார்? என்னுடைய குழந்தைகள். இந்த தந்தை மற்றும் குழந்தைகளின் மனதின் சந்திப்பு இந்த சங்கமயுகத்தில் தாள் பிராப்தி ஆகிறது. ஆக அனைவரின் மனதிலும் யார்? என்னுடைய பாபா. பாபாவின் மனதில் யார்? இனிமையான குழந்தைகள். ஒவ்வொருவரும் தன்னுடைய சக்திக்கு ஏற்றபடி அனுபவம் செய்து கொண்டிருக்கின்றனர். இரண்டு புறமும் மனதில் யார்? என்னுடைய பாபா, தந்தையின் மனதில் யார்? என்னுடைய குழந்தைகள். இந்த அதிசயமான சந்திப்பு குழந்தைகளாகிய நீங்கள் தான் செய்ய முடியும். என்னுடைய பாபா மற்றும் பாபாவின் மனதில் யார் என்னுடைய குழந்தைகள். இந்த சந்திப்பு இந்த சங்கமயுகத்தில் தான் நடக்கிறது. பாருங்கள் எங்கிருந்தெல்லாம் வந்திருக்கிறார்கள். ஒவ்வொருவருடைய மனதும் என்ன சொல்கிறது.? என்னுடைய பாபா மேலும் தந்தையின் மளம் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறது. என்னுடைய குழந்தைகள், தேடிக் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகள். இப்போது ஒவ்வொரு குழந்தையும், எப்படி தன்னுடைய மனதில் பாபாவை அமர்த்தி உள்ளீர்களோ அதுபோல அனைவரின் மனதிலும் பாபா வந்து விட வேண்டும். இந்த முயற்சியை குழந்தைகளும் செய்து கொண்டிருக்கின்றனர் மற்றும் பாபா குழந்தைகளின் முயற்சியைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றார். ஏனெனில், எங்கே பாபா இருக்கின்றாரோ அங்கே வேறு எந்த விசயமும் வர முடியாது. தந்தையின் மனதில் குழந்தைகள், குழந்தைகளின் மனதில் தந்தை, அப்படி அனுபவம் ஆகிறதல்லவா? பாப்தாதா கூட ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறார். மனதிலிருந்து என்ன வெளிப்படுகிறது? ஆஹா, குழந்தைகளே ஆஹா! இப்போது அனைவரின் மனதிலும் யார்?

என்னுடைய பாபா. மற்றும் பாபாவின் மனதில் யார்? ஆஹா! குழந்தைகளே ஆஹா! முழு ஹாலின் காட்சியைப் பார்த்து பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார்.

(பாபா உங்களுடன் சந்திப்பைக் கொண்டாடுவதற்காக **20000-**சகோதர, சகோதரிகள் வந்துள்ளனர். இரட்டை வெளிநாட்டினர் **60-**நாடுகளிலிருந்து **700-**பேர் வந்துள்ளனர். சேவாதாரிகளாக இராஜஸ்தானிலிருந்து **4000** -பேர் வந்துள்ளனர், பஞ்சாப்பை சேர்ந்தவர்கள் **10000-**பேர் வந்துள்ளனர்): இப்போது சத்யுகத்தை கொண்டு வருவதற்கான ஆதாரம் குழந்தைகளாகிய நீங்கள் தான். ஒவ்வொரு குழந்தையும் இதே சேவையில் ஈடுபட்டிருக்கிறீர்கள். அனைவரும் அப்படிப்பட்ட யுகத்தைக் கொண்டு வருவதில் மும்முரமாக இருப்பதைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். பாப்தாதா கூட ஒவ்வொரு குழந்தையின் மனதில் ஊக்கம் உற்சாகத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். அந்த யுகத்தைக் கொண்டு வர உள்ளுக்குள் எவ்வளவு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். பாப்தாதா குழந்தைகளின் முயற்சியையும் சோதனை செய்கிறார். பெரும்பாலானோர் நம்முடைய யுகம் வெகு சீக்கிரம் வந்து விடட்டும் என்ற இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர். வந்து கொண்டிருக்கின்றது, தங்கள் அனைவருடைய முயற்சியைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார் ஆனால் எப்போதும் அப்படி இருப்பதில்லை. கொஞ்சம் எப்போதைக்குமான முயற்சி என்று ஆகி விட்டால் இந்த கண்களால் பார்க்க முடியும். உங்களுக்காகத்தான் இந்த யுகம் உள்ளது. நீங்கள்தான் யுகத்தை மாற்றுவதற்கான முயற்சி செய்து கொண்டிருக்கின்றீர்கள் மற்றும் வெற்றியும் அடைந்து கொண்டிருக்கின்றீர்கள். அனைவருடைய மனதிலும் இதே உற்சாகம் இருக்கிறது -நம்முடைய யுகம் வந்தே விட்டது. அது நம்முடைய யுகமாகும், நம்முடைய யுகத்தை கொண்டு வந்து கொண்டிருக்கிறோம் மற்றும் வரத்தான் வேண்டும். இது கூட உத்திரவாதம் ஆகும். பாப்தாதா கூட உதவியாளர் குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார் என்ன பாடல் பாடுகிறார்? ஆஹா! குழந்தைகளே ஆஹா! ஒவ்வொருவருடைய முகத்திலும் தன்னுடைய எதிர்காலம் தெளிவாக இருக்கிறது, சமயமும் ஒத்துழைக்கிறது. இப்போது நாம் நம்முடைய வதனத்திற்கு சென்று விடுவோம். அனைவருடைய மனதிலும்

தன்னுடைய வதனம் நினைவுக்கு வருகிறதல்லவா, முன்னால் இருக்கிறது. நம்முடைய யுகம் வந்து கொண்டிருக்கிறது. மகிழ்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது அல்லவா!

இரட்டை வெளிநாட்டினர்: சகோதர, சகோதரிகளிடம்: அனைவருக்கும் சந்திப்பதற்கான வாய்ப்பு கிடைத்து விடுகிறது. இது கூட நன்றாக இருக்கிறது. ஒவ்வொரு ஜோனுக்கும் சந்திப்பதற்கு தனிதனியாக வாய்ப்பு கிடைக்கிறது. மேலும் பாப்தாதாவும் குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். ஆஹா என்னுடைய குழந்தைகளே ஆஹா!. வெளிநாட்டினருக்கும் தன்னுடைய இந்த தேசம் பிரியமானதாக இருக்கிறது. எப்போது வருகிறார்களோ அப்போது தன்னுடைய உண்மையான இடத்திற்கு வந்ததும் எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகிறது என்று தன்னுடைய அனுபவத்தை சொல்கிறார்கள். மற்றும் பாபாவும் அப்படிப்பட்ட குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். அனைவரும் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறீர்கள். இப்போது மகிழ்ச்சியாக இல்லையென்றால் எப்போது மகிழ்ச்சியாக இருப்பீர்கள்? இந்த நேரம் தான் தந்தையின் அறிமுகத்தோடு தந்தையும் குழந்தைகளும் சந்திப்பதற்கான நேரமாகும். குழந்தைகளும் மகிழ்ச்சி அடைகின்றனர். பாபாவும் மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றார். ஆஹா! முழு நினைவும் வந்து கொண்டிருக்கிறது அல்லவா! முழு சக்கரத்தின் நினைவும் வந்து கொண்டிருக்கிறது. இப்பொழுது இன்னும் கொஞ்ச நேரம் இருக்கிறது, அதைத்தான் என்னுடைய யுகம் என்று சொல்கிறீர்கள். இப்போது மற்றவருடைய யுகத்தில் தன்னுடைய சந்திப்பைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள் ஆனால் நம்முடைய யுகம் வந்தேவிட்டது என்ற நினைவு உறுதியாக இருக்கின்றது. எப்போது மதுபனிற்கு வருகிறீர்களோ அப்போது மகிழ்ச்சி இருக்கவே செய்கிறது ஆனால் மதுபனுக்கு வரும்பொழுது இங்கேதான் நாம் இராஜ்யம் செய்ய வரவேண்டும் என்ற மகிழ்ச்சியும் இருக்கிறது. இப்போது தபஸ்யா செய்து கொண்டிருக்கின்றனர். மற்றும் இங்கே தான் இராஜயம் செய்யவும் வர வேண்டும். அந்த வாசனை வருகிறதல்லவா! நமக்காக இராஜ்யம் செய்யும் இடமும் இதுதான். சேவை செய்யும் இடமும் இதுதான். மகிழ்ச்சி ஏற்படுகிறதல்லவா! தன்னுடைய இராஜ்ய ஸ்தானத்தைப் பார்த்து மகிழ்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது அல்லவா! நம்முடைய இராஜ்யம் இங்கே தான் இருந்தது, மற்றும்

இப்போது வந்தே விட்டது. இப்படிப்பட்ட சகஜயோகம், இராஜயோகம் முழு கல்பத்திலும் இருப்பதில்லை. நீங்கள் தான் நிமித்தமாக இருக்கிறீர்கள் மற்றும் தன்னுடைய அதிகாரத்தை மீண்டும் அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்கள்.

பாருங்கள் இந்த நேரம் எவ்வளவு மதிப்பு வாய்ந்தது, நமக்கு இராஜ்ய பாக்கியம் கிடைத்துக் கொண்டிருக்கின்றது என்று தெரிந்திருக்கிறீர்கள். நாம் யார் மற்றும் என்னவாக ஆகப் போகிறோம் என்ற போதை மற்றும் குஷி இருக்கிறது. நாம் தான் அப்படி இருந்தோம் மற்றும் நாம்தான் அப்படி ஆகிக் கொண்டிருக்கின்றோம். மகிழ்ச்சி இருந்தால் கை உயர்த்துங்கள். பாருங்கள் எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகிறது. ஏனெனில் நம்முடைய யுகம் வரப்போகிறது. பாருங்கள் இங்கே அனைத்து தாய் மார்களும் தென்படுகிறார்கள். தாய் மார்கள் எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறார்கள். ஆஹா! நமது யுகம் வந்து விட்டது. நமது யுகம் வந்து விட்டது! தாங்கள் மட்டும் தனியாக இருக்க மாட்டீர்கள். தம்பதியாக இருப்பிர்கள். இராஜ்யம் செய்விர்கள் அல்லவா! இராஜ்யம் தனியாக செய்ய மாட்டீர்கள். இராஜ்யத்தில் இரண்டு பேரும் இருப்பார்கள் அல்லவா! ஆக, நமது இராஜ்யம் வந்து விட்டது என்ற மகிழ்ச்சி ஏற்படுகிறது. பாபா வந்திருப்பதே இராஜ்யத்தை கொடுப்பதற்காகத்தான். மேலும் அனைவருக்கும் எவ்வளவு குஷி இருக்கிறது. இப்போது நமது இராஜ்யம் உருவாகும். நம்முடைய இராஜ்யம்! எவ்வளவு போதை ஏற்படுகிறது. இராஜ்யத்தின் குஷி எவ்வளவு இருக்கிறது. நம்முடைய இராஜ்யம் வந்தே விட்டது. எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகிறது, சொல்லுங்கள். எப்படி சொல்வீர்கள்! கை தட்டுங்கள். கை தட்டலின் சப்தத்தைப் பாருங்கள். எப்படி இருக்கிறது, ஆஹா! மற்றும் அனைவரின் முகத்தைப் பாருங்கள். எவ்வளவு புன் சிரிப்பு இருக்கிறது. நம்முடைய இராஜ்யம் வந்து விட்டது. அனைவருக்கும் மகிழ்ச்சிதானே! ஆகையால் தான் கைகளைத் தட்டினீர்கள். இப்போது துக்கப்படுவதற்கோ அழுவதற்கோ அவசியமே இல்லை. மகிழ்ச்சியின் நாட்கள் வந்து விட்டது. நம்முடைய இராஜ்யம் வந்து விட்டது. நம்முடைய இராஜ்யம்..... எவ்வளவு போதை இருக்கிறது. மற்றவருடைய இராஜ்யத்தில் நீண்ட காலம் இருந்தீர்கள். இப்போது நம்முடைய இராஜ்யம் வந்து விட்டது. மகிழ்ச்சி இருக்கிறது அல்லவா! சகோதரர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. சகோதரிகளுக்கு இருக்கிறதா?

பாருங்கள் நாலா புறமும் மகிழ்ச்சியைப் பார்த்து எவ்வளவு நன்றாக இருக்கிறது. யாருடைய மனதிலும் துக்கத்தின் அலை கூட இல்லை. பாப்தாதா கூட உங்கள் அனைவருக்கும் இந்த மகிழ்ச்சிக்கான மிக மிக மிக வாழ்த்துக்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

தாதி ஜானகி: அவர்கள் பாப்தாதாவை அரவணைத்துக் கொண்டார். நாமும் இப்படி சந்திக்க வேண்டும் என்று அனைவரும் யோசிக்கிறீர்கள் ஆனால் பாபாவின் இதயத்தில் அனைவரும் நிறைந்திருக்கிறீர்கள். ஒவ்வொருவரும் பாபாவின் மனதில் அமர்ந்திருக்கிறீர்கள்.

மோகினி சகோதரி: அனைத்தும் நன்றாக இருக்கிறதா? (உங்கள் வரதானத்தால் அனைத்தும் நன்றாக இருக்கிறது) வரதானங்கள் இருக்கவே இருக்கிறது. பாப்தாதா என்ன செய்து கொண்டிருக்கிறார். வரதானங்களினால் தான் நடத்திக் கொண்டிருக்கின்றார். ஏனெனில் இங்கே இருக்க முடியாது. ஆகையால் வரதானங்களினால் நடத்திக் கொண்டிருக் கின்றார். அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கின்றீர்கள் அல்லவா? மிகுந்த மகிழ்ச்சி. அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். முகத்தில் தென்படுகிறது. சேவையின் குஷியில் இருக்கிறார்கள் என்பது அனைவருடைய முகத்திலும் தென்பட்டுக் கொண்டிருக்கின்றது. சேவைக்காக கொஞ்ச நேரம் கிடைத்திருக்கிறது. அதிக நேரம் அல்ல.

மூன்று சகோதரர்களும் பாப்தாதாவிற்கு மலர் செண்டு கொடுத்தார்கள்: மூன்று பேரும் நிற்கிறீர்கள். நன்றாக நடந்து கொண்டிருக்கிறது அல்லவா! (அனைவருடைய நிலையும் மேல், கீழாக இருக்கிறது) அதுவும் மகிழ்ச்சியில் சரியாகி விடும்.ஆனாலும் பாருங்கள் வாயுமண்டலத்தின் வித்தியாசம் இருக்கிறது அல்லவா! அங்கே மற்றும் இங்கே இருப்பதில் உடல் உடல் நிலையில் வித்தியாசம் ஏற்படுகிறது. அனைவருடைய உடல் நிலையும் சரியாக இருக்கிறது. யாரும் நோய் வாய்ப்பட்டவர்களாக இல்லை. அனைவரும் நன்றாக இருக்கிறார்கள். யாரும் நோயாளி அல்ல. மகிழ்ச்சி இருந்தால் நோய் இருக்காது. அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கின்றீர்கள் அல்லவா! கை உயர்த்துங்கள். இந்த மகிழ்ச்சிதான் டானிக் ஆகும். மற்ற டானிக் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. இந்த

மகிழ்ச்சியின் டானிக் நன்றாக இருக்கிறது. (இப்போது தாதி ஜானகிஜி சொல்கிறார். நான் நோயாளி தாதி ஜானகிஜி கூட நோயாளி அல்ல. இதுவோ இவர்களுடைய கொஞ்சம் கணக்கு வழக்கு மிச்சம் இருக்கிறது. அது விரைவில் முடிந்து கொண்டிருக்கிறது. நன்றாக தாதியை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் மற்றும் உடல் நிலையும் நன்றாக இருக்கிறது. மகிழ்ச்சியாக இருங்கள் போதும். இதுதான் மருந்து. இந்த மருந்து நோயை வர விடாது. தாதியின் வயது கணக்குப்படி, நோயின் கணக்குப்படி அனைவரும் யோசிக்கிறார்கள் ஆனால் இவர் கவலையற்றவர். (தாதி ஜானகிஜி அவர்களின் 100-வயது சேவைகளின் புத்தகம் வெளிநாட்டு சகோதர, சகோதரிகள் உருவாக்கியுள்ளனர். அதை பாப்தாதா திறந்து வைத்தார்). உங்கள் அனைவருக்கும் கூட பெரும்பாலானோருக்கு 100-வயது ஆகியிருக்கும். (புத்தகத்தைப் பார்த்து) மிக நன்றாக இருக்கிறது.

(ஓம் பிரகாஷ் சகோதரர், இந்தூர், மோகினி சகோதரி அமெரிக்கா மற்றும் கமலேஷ் சகோதரி கட்டக் மூன்று பேரும் நோய் வாய்ப்பட்டிருக்கிறார்கள். உங்களுக்கு (பாப்தாதாவிற்கு) அதிக நினைவு கொடுத்தார்கள்): யாரெல்லாம் நோய் வாய்ப்பட்டிருக்கிறார்களோ அவர்கள் அனைவருக்கும். கூடவே தாங்கள் அனைவருக்கும் மிக மிக அன்பு நினைவுகள் மற்றும் எப்போதும் நினைவு இருக்கும். அனைவருடைய மனதில் பாபா! பாபா! இருக்கிறது மற்றும் பாபாவின் மனதில் யார்? குழந்தைகள். ஓம் சாந்தி.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 03.11.2015 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிரபுவின் அன்பிற்குப் பாத்திரமான இந்த கூட்டமானது (சந்திப்பு) சங்கமத்தின் இந்த மகான் சமயத்தில் தான் நடக்கும், ஒவ்வொரு குழந்தைகளினுடைய மனதில் பாபா மற்றும் பாபாவினுடைய மனதில் செல்லக் குழந்தைகள் இருக்கின்றனர்!

இன்று பாப்தாதா நாலா புறத்திலுமுள்ள குழந்தைகளைப் பார்த்து புன்முறுவல் அடைகின்றார். ஏனென்றால் ஒவ்வொரு குழந்தைகளும் பாபாவைப் பார்த்து புன்முறுவலோடு சந்தித்துக் கொண்டிருக்கின்றனர். இது பாபா மற்றும் குழந்தைகளினுடைய ஆன்மீக சந்திப்பு எவ்வளவு அன்பானதாக இருக்கின்றது. இந்த சந்திப்பு அமரராக மாற்றக்கூடிய சந்திப்பு, அனைவருடைய வாயிலிருந்தும் என்ன வெளிப்படுகின்றது. ஆஹா பாபா ஆஹா! மேலும் பாபாவின் வாயிலிருந்தும் இதே சப்தம் வெளிப்படுகின்றது. ஆஹா என்னுடைய செல்லக் குழந்தைகளே, ஆஹா! ஆஹா! அனைவருடைய வாயிலிருந்தும் ஆஹா என்ற பாட்டானது ஒலித்துக் கொண்டிருப்பதைப் பார்க்க முடிகிறது. அனைவருடைய முகமும் மூலமாகவும் ஆஹா! ஆஹா! என்ற பாட்டை பாடிக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பதிலாக பாபாவும் ஆஹா குழந்தாய், ஆஹா! என்கின்றார். அனைவருடைய மனதின் சப்தமானது தூரமாக இருந்தாலும், அருகில் இருந்தாலும் அனைவருடைய மனதினுடைய சப்தத்திற்குப் பதில் அளிக்கின்றார், பாபா கூறுகின்றார், ஆஹா குழந்தாய் ஆஹா! மற்றும் குழந்தைகள் கூறுகின்றனர் ஆஹா பாபா ஆஹா! இந்த ஆஹா, ஆஹா என்ற பாட்டானது ஒலித்துக் கொண்டிருக்கின்றது. அனைவருடைய முகத்திலிருந்தும் தானாகவே ஆஹா, ஆஹா என்று

வெளிப்படுகின்றது. இன்றைய வாழ்த்துக்கள் அனைவருடைய வாயிலிருந்தும் ஒலித்துக் கொண்டிருப்பதைப் பார்க்க முடிகிறது. அனைவரும் ஒரே மாதிரியாக மகிழ்ச்சியின் பாட்டைப் பாடிக் கொண்டிருக்கின்றார்கள். ஆஹா! பாபா ஆஹா பாபாவினுடைய வாயிலிருந்தும் ஆஹா ஒவ்வொரு செல்லக் குழந்தைகளே, ஆஹா! என்ற பாடலை பாடிக் கொண்டிருக்கின்றார். ஆகையால் இந்த சமயத்தில் அனைவருடைய மனதிலும் ஆஹா, பாபா ஆஹா! என்ற சப்தம் தான் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. பாபாவினுடைய சப்தம் ஆஹா, குழந்தாய் ஆஹா! அனைவரும் ஆஹா, ஆஹா! என்கின்றார்கள். உங்கள் அனைவரின் மனதின் ஒலியானது ஆஹா, ஆஹா! என்பது தானே? பாபா கூறுகின்றார் ஆஹா, செல்லக் குழந்தைகளே ஆஹா மேலும் குழந்தைகள் கூறுகின்றார்கள் ஆஹா, பாபா ஆஹா! அப்படியிருக்கும் போது அனைவரும் யாராக இருக்கின்றீர்கள்? எங்கிருந்து வந்தாலும் ஆனால் இந்த கூட்டமானது யாருடையது? வரிசைக்கிரமமாக இருந்தாலும் பாபாவினுடைய குழந்தைகள்! ஆகையினால் எவ்வாறு தந்தை ஆஹா, ஆஹா! என்று கூறுகிறாரோ ஒவ்வொருவருடைய மனதிலும் என்ன ஒலித்துக் கொண்டிருக்கிறது. ஆஹா, பாபா ஆஹா! பாபாவினுடைய மனதிலும் எந்த பாட்டானது ஒலித்துக் கொண்டிருக்கிறது. ஆஹா குழந்தாய் ஆஹா! வரிசைக்கிரமமாக இருந்தாலும் ஒவ்வொருவருடைய வாழ்க்கையின் லட்சியம் என்ன? உலகத்தில் ஆஹா, ஆஹா, என்ற ஒரு கூட்டத்தை பார்க்க முடிகிறது என்றால், எங்கு பார்க்க முடியும்?

இன்று கூட இப்பொழுது பாப்தாதா ஆஹா, ஆஹா! என்ற கூட்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். வரிசைக்கிரமமாக இருந்தாலும் ஆஹா, ஆஹா அனைவரும் பிரபுவிற்கு அன்பானவர். ஆகையினால் இந்த கூட்டமானது பிரபுவிற்கு அன்பானவர்களுடையது. ஒவ்வொருவரும் வரிசைக்கிரமமாக இருந்தாலும் மூல ஆதாரம் அனைவருக்கும் ஒன்று தான். அனைவருடைய மனதிலிருந்தும், வாயிலிருந்தும் என்ன வெளிப்படுகின்றது? ஆஹா பாபா ஆஹா! மேலும் பாபாவினுடைய வாயிலிருந்து என்ன வெளிப்படுகின்றது? ஆஹா செல்லக் குழந்தாய் ஆஹா! ஒவ்வொருவரும் தான் முன்னாடியிருந்தாலும் சரி, பின்னாடியிருந்தாலும் சரி, ஒவ்வொருவரும் பாபாவின் செல்லக் குழந்தைகள். பாபாவும் ஒவ்வொரு குழந்தையையும் அதே ரூபத்தில்

பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொருவடைய மனதிலும் யார் இருக்கின்றார்? என்ன கூறுவீர்கள்? ஆஹா பாபா ஆஹா! மேலும் பாபாவினுடைய மனதில் யார் இருக்கிறார்கள்? ஒவ்வொரு குழந்தைகளும் இருக்கிறார்கள். வரிசைக்கிரமம் உள்ளது ஆனாலும் அனைவரும் செல்லமானவர்கள்.

இன்றைய இந்த கூட்டத்திற்கு என்னவென்று கூறலாம்? ஒவ்வொருவரும் பாபாவினுடைய செல்லக் குழந்தைகள். இந்த மாதிரி அனுபவம் செய்கின்றீர்கள் தானே! அனைவருடைய மனதிலும் ஒரு பாபா என்பது அனைவருடைய முகத்திலிருந்தும் இந்த ஒரு அனுபவம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. மேலும் பாபா கூட ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து பார்த்து புன்முறுவல் செய்கின்றார். ஆஹா குழந்தாய் ஆஹா! இந்த சந்திப்பானது இந்த சமயத்தில் சந்திப்பது எவ்வளவு மகான் தன்மையாக இருக்கின்றது. முழு கல்பத்திலும் இந்த மகான் மகத்துவமான சமயம் என்றால் இது தான். ஆகையினால் மகிமை பாடப்படுகின்றது. சங்கமயுகம் என்பது மகத்துவமான யுகம். பாப்தாதாவும் இதே மகான் தன்மையுடன் குழந்தைகளை சந்தித்துக் கொண்டிருக்கின்றார். குழந்தைகளும் கூறுகின்றார்கள் தந்தை மகான் என்று. பாபா என்ன கூறுகின்றார்? குழந்தைகள் எவ்வாறு இருந்தாலும் பாபாவிற்கு மிகவும் அள்பாளவர்கள். வரிசைக்கிரமமாக இருந்தாலும் சரி, பாபாவிற்கு ஒவ்வொரு குழந்தைகளும் அன்பானவர்கள். பாபாவினுடைய அன்பு ஒவ்வொரு குழந்தைகளுக்கும் அனுபவம் உள்ளது. அன்போடு என்ன கூறுகின்றீர்கள். மேரா பாபா (என்னுடைய தந்தை). மேலும் பாபா என்ன கூறுகின்றார்? ஒவ்வொருவரையும் என்னுடைய குழந்தாய் என்று கூறுகின்றார். ஒருவருக்கொருவர் அன்பானவர்களாக இருக்கின்றார்கள்.

இன்றைய தினம் சந்திப்பினுடைய தினமாகும். எவ்வளவு குழந்தைகள் இருந்தாலும் எங்கிருந்தாலும் எவ்வாறு இருந்தாலும், ஆனால் பாபாவிற்கு அன்பானவர்கள். அப்படித்தானே? ஒவ்வொருவரும் பாபாவிற்கு அன்பானவர்கள்: கை உயர்த்துங்கள். பாருங்கள் அனைவருடைய கையையும் இங்கு வந்து பாருங்கள். தாதி (தாதி ஜானகி) இங்கிருந்து பாருங்கள் அனைவருக்கும் எவ்வளவு அன்பு இருக்கின்றது என்று அனைவரும் இங்கிருந்தும் பார்த்துக்

கொண்டிருக்கிறார்கள். இங்கு அமர்ந்தும் பார்க்கலாம். எங்கிருந்து பார்த்தாலும் பார் அமர்ந்திருக்கிறார்கள்? சரி, மேலிருந்து பார்த்தால் எவ்வளவு சந்தோஷம் ஏற்படுகின்றது. பாபாவிற்கு அன்பானவர்கள், செல்லக் குழந்தைகள் அமர்ந்திருக்கிறார்கள். ஆனாலும் எவ்வளவு சாதாரணமாக அமர்ந்திருக்கிறார்கள். அனைவரும் பாபாவிற்கு அன்பானவர்கள் தானே கை உயர்த்துங்கள். இந்த காட்சியை முன்னாடி இருந்து பாருங்கள், அனைவரும் எவ்வாறு புன்முறுவல் அடைகின்றார்கள். அனைவருடைய உள்ளம் என்ற ஹால் முகத்திலிருந்து தென்படுகின்றது. அனைவருடைய மனதிலும் யார்? என்னுடைய தந்தை (மேராபாபா) மேலும் பாபா என்ன கூறுகின்றார் என்னுடைய குழந்தாய் (மேரா பச்சா). அனைவரும் பாபாவிற்கு அன்பான, செல்லமானவர்கள் தானே! அவ்வாறு இருந்தால் கை உயர்த்துங்கள். பார்த்தீர்களா? பாபா பார்த்துக் கொண்டிருக்கின்றார். நீங்கள் பார்க்க முடியாது, ஆனால் பாபா கூறுகின்றார். ஒரு முறை சபையின் முன்னால் வந்து பாருங்கள். எவ்வளவு அன்பானவர்கள். எவ்வளவு செல்லமானவர்கள். பார்த்தீர்களா? வாருங்கள். (பாபா, ஜானகி தாதி அவர்களை அழைக்கின்றார்) வர முடியும் தானே! வர முடியுமா? சரி. எழுந்து நின்று பாருங்கள். (அதிசயமான தந்தையோ ஆஹா பாபா ஆஹா பாபா! சபை நன்றாக உள்ளது.) ஒவ்வொரு குழந்தையும் செல்லமானவர்கள்.

**சேவையின் வாய்ப்பு இந்தூர்:** 7000-பேர் வந்துள்ளார்கள். அதில் ஹாஸ்டலில் உள்ள குமாரிகள் 150-பேர் வந்துள்ளனர். அனைவரும் சேவைக்காக எவரெடியாக இருக்கின்றீர்கள். பாப்தாதா பார்க்கின்றார். ஒவ்வொரு மண்டலமும் சமயத்திற்குத் தகுந்தாற்போல் தன்னுடைய பாகத்தை நன்றாகச் செய்கின்றார்கள். மேலும் நீங்கள் அனைவரும் கூட ஒவ்வொரு மண்டலத்தினுடைய சேவையின் மூலமாக திருப்தி அடைகின்றீர்கள் தானே! திருப்தி தானே? கை உயர்த்துங்கள்.

**500-இரட்டை அயல் நாட்டினர்கள் 55-நாடுகளில் இருந்து வந்திருக்கிறார்கள்:** இரட்டை அயல் நாட்டினர் அதிகமாக வந்துள்ளார்கள். இரட்டை அயல் நாட்டினர் அனைவரும் கை உயர்த்துங்கள். உங்கள் நாட்டினுடைய நல்ல பொறுப்பாளராக இருக்கின்றீர்கள். இரட்டை அயல் நாட்டினர் முயற்சி செய்வதில்

மிகவும் நல்லவர்கள். முயற்சியில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றனர். இந்தியாவில் உள்ளவர்கள் அவ்வாறு இல்லை என்பது கிடையாது. ஒவ்வொரு குழந்தையும் இந்தியாவில் இருந்தாலும் சரி, அயல் நாட்டில் இருந்தாலும் சரி, ஆனால் நல்ல முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொருவரின் மனதிலும் நாம் முதலிலும் முதலாவதாக நம்பர் எடுக்க வேண்டும் என்று உள்ளது. பாப்தாதாவும் குழந்தைகளினுடைய முயற்சியைப் பார்த்து சந்தோஷம் அடைகின்றார். ஏனென்றால் பாபாவிடமும், தாதாவிடமும் (பிரம்மாபாபா) அனைவரும் உள்நாட்டவராக இருந்தாலும் சரி, வெளிநாட்டவராக இருந்தாலும் சரி, ஒவ்வொருவருக்கும் பாப்தாதாவினுடைய உள்ளபூர்வமான அன்பான நன்றாக இருக்கின்றது. பாப்தாதாவின் அன்பும் உள்நாடு மற்றும் வெளிநாட்டின் ஒவ்வொரு குழந்தைகளுக்காகவும் உளமார்ந்த அன்பு உள்ளது. வரிசைக்கிரமமாக இருந்தாலும் சரி, ஆனால் பாபாவின் அன்பானது கடைசியிலுள்ள குழந்தைகள் மீதும் நன்றாக உள்ளது. ஏனென்றால் ஒவ்வொருவரும் நினைவில் அமர்ந்திருக்கின்றார்கள். அப்படியென்றால் யாருடைய நினைவில் அமர்ந்திருக்கின்றீர்கள். பாபாவின் நினைவில் இருக்கின்றீர்கள். எந்த குழந்தை ஒரே பாபாவின் நினைவில் இருக்கின்றார்களோ பாபாவும் உள்நாட்டினராளாலும், வெளிநாட்டினரானாலும் அனைவருக்கும் அன்பானவர். பாபாவினுடைய மனதில் யார்? ஒவ்வொரு குழந்தைகளும் மனதிற்கு மிகவும் செல்லமானவர்கள். பாபாவிற்கு அனைத்து குழந்தைகள் மீதும் உள்நாட்டினரனாலும் சரி, வெளிநாட்டினரானாலும் சரி குழந்தைகளுக்காக மனதினுடைய அன்பு உள்ளது. பாபாவும் பார்க்கின்றார் ஒவ்வொரு குழந்தைகளுக்கும் பாபா மீது அன்பு உள்ளது. ஆகையினால் தான் ஞான வாழ்வில் நடந்து கொண்டிருக்கின்றது. அதாவது பாபாவிடம் தொடர்பு இல்லை என்றால் சக்தி எங்கிருந்து வாங்குவீர்கள்? பாபாவிடமிருந்து சக்தியை அடைந்து நடந்து கொண்டிருக்கிறீர்கள். குழந்தைகளின் அன்பானது பாபாவைவிட நன்றாக உள்ளது. மேலும் பாபாவின் அன்பானது ஒவ்வொரு குழந்தை மீதும் உள்ளது. எங்கிருந்தாலும் சரி, உள்நாட்டினரானாலும் சரி, வெளிநாட்டினராக இருந்தாலும் சரி, ஒவ்வொரு குழந்தைகளும் பாபாவிற்கு அன்பானவர்களே. யாராக இருந்தாலும் சரி பாபாவின் அன்பு நடத்திக் கொண்டிருக்கிறது. பாபாவை நினைவு செய்யவில்லை

என்றால் சக்தி எங்கிருந்து கிடைக்கும்? ஒவ்வொருவருடைய தொடர்பும் பாபாவோடு இருக்கின்றது. ஒருவராவது எனக்கு பாபாவிடம் அன்பு இல்லை என்று, அப்படி யாராவது இருந்தால் கை உயர்த்துங்கள். நான் என்னுடைய முயற்சியின் மூலமாக நடந்து கொண்டிருக்கின்றேன் என்று யார் தன்னை நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். முயற்சி எவ்வளவுதான் செய்தாலும் சிலர் புரிந்துக் கொண்டிருக்கின்றார்கள் நான் என்னுடைய முயற்சியின் மூலமாக தான் நடந்து கொண்டிருக்கின்றேன் அவ்வாறு இருந்தால் கை உயர்த்துங்கள். (யாரும் இல்லை).

மோகினி சகோதரி: எப்பொழுதும் பாபா கூடவே இருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையோடும் இருக்கின்றார். எப்பொழுதுமே பாபா கூடவே இருக்கின்றார் இந்த அனுபவம் ஏற்படுகின்றதா? பாபா ஒவ்வொரு குழந்தையோடும் சதா கூடவே இருக்கின்றார். பாபா ஒருவராக இருந்தாலும், அனைவரோடும் இருக்க முடியும். இப்பொழுது நீங்கள் பாருங்கள் எவ்வளவு பேர் இருந்தாலும் சரி யாரோடு இருக்கிறீர்கள்? பாபாவோடு தானே! ஆகையால் பாபாவின் கூட இருப்பவர்கள். ஒவ்வொருவருடனும் கூடவே பாபா இருக்கின்றார். மேலும் கூடவே இருப்பார். பாபா ஒவ்வொருவரோடும் கூட இருக்கின்றார் தானே!

மோகினி சகோதரி (நியுயார்க்): என்ன பாகம் ஏற்று நடித்துக் கொண்டிருக்கிறீர்களோ அது நல்லது. (பாபா இங்கு வரைக்கும் என்னை கொண்டு வந்துள்ளார் ஆகையால் உங்களுக்கு மிக மிக நன்றி) எங்கிருந்தாலும் சரி ஒவ்வொரு குழந்தையின் அன்பு நினைவானது பாபாவிற்கு வந்தடைகிறது. யாரும் தூரமாக இல்லை. மனதில் இருக்கின்றார்கள். அனைவரையும் விட நெருக்கத்தில் உள்ளீர்கள். (தூரமாக தென்படவில்லை) தூரமேயில்லை. அனைவரும் பாபாவின் மனதில் மூழ்கி உள்ளீர்கள். அனைவரும் மனதில் இருக்கிறீர்கள் தானே? மனதில் உள்ளவர்கள் யார்? பாப்தாதா தான் மனதில் உள்ளார். குழந்தைகளின் மனதிலும்கூட பாபா கூடவே இருக்கின்றார் என்பது தான். பாபா கூட இல்லாமல் யாருமே இல்லை. கூடவே இருக்கின்றார். கூடவே இருப்பார். அனைவரும் எப்பொழுதுமே கூட இருப்பதன்

அனுபவத்தில் இருந்து கொண்டேயிருக்கின்றீர்கள் தானே! கை உயர்த்துங்கள்.

ரமேஷ் சகோதரர்: பூனாவில் உள்ள ஜகதம்பா பவன் வரை படத்தை பாப்தாதாவிற்கு காண்பிக்கின்றார். எவ்வளவு முடியுமோ எவ்வளவு முன்னேற முடியுமோ அவ்வளவு முன்னேறலாம். ஜகதம்பாவாக இருந்தாலும் சரி, வேறு யாராது இந்த காரியத்திற்கு பொறுப்பாக இருக்ககூடிய குழந்தையானாலும் சரி, ஆனாலும் நீங்கள் ஒவ்வொருவரும் முன்னேறலாம். மேலும் முன்னேறுவார்கள். ஒவ்வொரு குழந்தையும் முன்னேறிச் செல்வதை பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார். எவ்வளவு சக்தி உள்ளதோ அதற்கு தகுந்தாற்போல் தங்களது பாகத்தை நடிக்கின்றார்கள். ஒவ்வொரு குழந்தைகளிடமும் ஊக்கம் உற்சாகம் நன்றாக உள்ளது. ஒவ்வொரு குழந்தையும் எப்பொழுதும் தனது முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மேலும் ஈடுபட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்து பாபாவும் மகிழ்ச்சி அடைகின்றார். அனைவரும் நன்றாக முயற்சியில் முன்னேறி சென்றுக் கொண்டிருக்கின்றார்கள். இதைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார். என்ன நடந்தாலும் சரி, ஆனால் தன்னுடைய முயற்சியில் தான் கூடவே இருக்கின்றார். மேலும் முழு குடும்பமும் கூட இருக்கின்றது, தனியாக இல்லை. கூடவே இருக்கின்றார்கள். மேலும் கூடவே இருப்பார்கள். ஒவ்வொருடைய மனதிலும் ஒரு பாபாவினுடைய நினைவு தான் இருக்கின்றது.

பிரிஜ்மோகன் சகோதரர்: டில்லி இந்தியா கேட்டில் நடக்கக்கூடிய நிகழ்ச்சியைப் பற்றிக் கூறுகின்றார், நவம்பர் 8ம் தேதி அங்கு பெரிய நிகழ்ச்சி நடக்க உள்ளது, அங்கு 2-தாதிகளும் (தாதி ஜனாகிஜி, தாதி குல்ஜார்ஜி) வருகின்றார்கள். அதற்காக விசேஷமாக நாங்கள் என்ன செய்ய வேண்டும்? விசேஷம் இது தான் பாபாவை பிரத்யக்ஷம் படுத்த வேண்டும். பாபாவை வெளிப்படுத்துவது என்றாலே அனைத்தையும் செய்தாலும் அனைத்து சம்மந்தமும் ஒரு பாபாவிடம் வைக்க வேண்டும். ஆகையினால் பாபாவோடு சம்மந்தம் வைப்பதன் ஆதாரம் மிக நல்லது. முக்கியமாக அனைவரும் இணைந்து நிகழ்ச்சி நடத்த வேண்டும். இது டில்லியின் நிகழ்ச்சி என்று யாரும் நினைக்கக் கூடாது.

அனைவருடைய தந்தை அனைவருடைய நிகழ்ச்சி. சிலர் அருகில் இருந்தாலும் சரி. சிலர் தூரமாக இருந்தாலும் சரி அனைவரதும் தான். இந்த ஊக்கம் உற்சாகம் உள்ளது. இதை மேலும் அதிகரிக்க வேண்டும். எங்கு நிகழ்ச்சி நடந்தாலும் சரி அது நம்முடையது. ஒருவர் தான் அனைவரின் தந்தை. ஒருவர் தான்! அநேகர் தென்பட்டாலும் கூட குடும்பம் ஒன்று தான். இந்த விசேஷத்தன்மை இங்கு உள்ளது. துண்டு துண்டாகக் கிடையாது, அனைவரும் ஒன்றே.

டாக்டர் பனாரஸ் சகோதரர்: மெடிக்கல் விங் புத்தகத்தைக் காண்பித்தார். நல்லது. அனைவரும் ஏதாவது செய்கின்றார்கள். பாபாவும் மகிழ்ச்சி அடைகின்றார். அனைவரும் சேர்ந்து நடத்துகின்றீர்கள். நடத்திக் கொண்டேயிருங்கள்.

போபால் சகேதாரர்: உதயப்பூரின் கட்டிடம் பற்றி கேட்டார். என்ன காரியம் நடக்கிறதோ அதில் அனைவரும் கூட இருப்பார்கள். ஒருவருடையது கிடையாது. பிரம்மா குமாரிகளினுடையது. குமார் அதில் வந்து விடுகின்றார்கள். (உதயப்பூரில் அனைவரும் வருவதாகவும் போவதாகவும் இருக்கின்றது), வருவதும் போவதுமாக இருக்கும், இது குடும்பம் தானே!

ஓம் பிரகாஷ்சகோதரர் -இந்தூர்: உடல் நிலை சரியாக உள்ளதா? (முதல் தடவையாக நோய்வாய் பட்டிருக்கிறேன்). அனைவரின் உதவியோடும் பாபாவின் கூடவே முன்னேறி செல்லுங்கள். சரியாக நடக்கின்றது தானே! முன்னேறிச் சென்று கொண்டேயிருப்பீர்கள். உடல் நிலை சரியாக இல்லை என்றாலும் சரியாகி விடும். நல்லது. கவனமாக நடந்து கொள்ளுங்கள்.

கமலேஷ் சகோதரி -கட்டக்: நன்றாக இருக்கிறீர்கள் தானே! நல்லது. (உங்களுடைய ஆசீர்வாதத்தின் மூலமாக சரியாகி விட்டது). ஆசீர்வாதம் எப்பொழுதும் கூடவே இருக்கின்றது. உடல் நிலை முன்னும் பின்னுமாக இருக்கின்றது. ஏனென்றால் இந்த சமயம் கலியுகத்தினுடையது, இதில் இவை அனைத்தும் வந்து கொண்டு இருக்கும் ஆனால் என்ன நடந்தாலும் பாபாவினுடைய நினைவில், கழுமரம் போன்றதை முள்ளாக மாற்ற வேண்டும். எவ்வளவு

பெரியதாக (கழு மரம்) வந்தாலும், அது பாபாவின் நினைவில் சிறிய முள்ளாக மாறி விடும். நல்லது.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺ ✺✺✺✺✺✺✺✺

# 30.11.2015 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சதா பெருமிதத்தில் இருந்து கவலையற்ற ராஜா ஆகுங்கள்; தீவிர முயற்சி மூலம் சம்பன்னம் மற்றும் சமமாகி கூடவே செல்வதற்குத் தயாராகுங்கள்!

இன்று பாப்தாதா கவலையற்ற ராஜாக்களின் சபையை பார்த்துக் கொண்டிருக்கிறார். இந்த சந்திப்பு இந்த நேரத்தில் மட்டும்தான் உருவாகிறது, ஏனென்றால் எல்லா குழந்தைகளும் தந்தையிடம் தங்கள் கவலைகளைத் தந்து விட்டு தந்தை மூலம் மகிமை அடைந்துள்ளனர். இந்த சபை இப்போதுதான் உருவாகிறது. நீங்கள் தினமும் அதிகாலை எழுந்து ஒவ்வொரு காரியம் செய்யும்போதும் கவலையற்றவராகவும், ராஜாவாகவும் ஆகி செய்கிறீர்கள்தானே. இந்த கவலையற்ற வாழ்க்கை எவ்வளவு அன்பானதாக இருக்கிறது. கவலையற்றதின் அடையாளம் என்னவாகத் தெரியும்? ஒவ்வொருவரின் நெற்றியிலும் ஒளி, ஆத்மா ஜொலிப்பது தெரியும். இந்த கவலையற்ற வாழ்க்கை எப்படி உருவானது? தந்தை அனைத்து குழந்தைகளின் வாழ்க்கையிலிருந்து கவலையை எடுத்துக் கொண்டு மகிமையை அளித்து விட்டார். யாருடைய வாழ்வில் மகிமையின்றி கவலையுள்ளதோ, அவரது நெற்றியில் ஒளி வீசாது. அவர்களுடைய நெற்றியில் சுமையின் ரேகைகளைக் காண முடிகிறது. கூறுங்கள் உங்களுக்கு எது பிடித்துள்ளது -ஒளியா, சுமையா? ஒருவேளை ஏதாவது சுமை வந்தது எனில், சுமை என்றால் கவலை, தந்தையிடம் கொடுத்து விட்டு மகிமையை எடுத்துக் கொள்ளலாம். உங்கள் அனைவருக்கும் கவலையற்ற வாழ்க்கை பிடிக்கும்தானே. பார்ப்பவரும் கூட கவலையற்ற வாழ்க்கையை விரும்புகின்றனர்.

எனவே இன்று, பாப்தாதா நாலா புறமும் உள்ள குழந்தைகளுக்கு முன்னால் இருக்கிறார், எங்கு உட்கார்ந்திருந்தாலும், அவர் குழந்தைகளின் நெற்றியின் நடுவில் ஒளி வீசிக் கொண்டிருக்கும் ஒளியை மட்டுமே பார்க்கின்றார். சதா கவலையற்று இருக்கிறீர்களா அல்லது அவ்வப்போது ஏதாவது கவலை வருகிறதா? எப்போது தந்தை இயற்கையை வென்றவர், விகர்மங்களை வென்றவர் ஆக்கி விட்டாரோ, அப்போது கவலை எப்படி வர முடியும்? எனில் கவலையற்றவர்கள்தானே, கையை உயர்த்துங்கள். சதா இப்படி இருக்கிறீர்களா அல்லது அவ்வப்போதா? அவ்வப்போது என்பவர்கள் இருக்கிறீர்களா? கையைத் தூக்கவில்லை, பாப்தாதாவும் கூட பாரக்க விரும்பவில்லை. பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் கவலையற்ற ராஜாவாக பார்க்க விரும்புகிறார். ஒருவேளை அவ்வப்போது என்பவர்கள் இருந்தாலும்கூட மிக எளிதான விதி உள்ளது ஏதாவது கொஞ்சம் அதிக கவலை வருகிறது என்றால் எனது என்பதை உனதாக மாற்றி விடுங்கள். இது எல்லைக்குட்பட்ட என்னுடையது என்பதை உன்னுடையது என மாற்றுவதற்கான சகஜ விதி ஆகும். நீங்களோ கூறுகிறீர்கள் என்னுடைய பாபா, என்றால் இப்போது என்னுடையது என்னவாயிற்று? எல்லைக்குட்பட்ட என்னுடையது என்பது முடிந்து விட்டதுதானே. என்னுடைய பாபா என ஆயிற்று. எல்லோரும் இதயபூர்வமாக கூறுகிறீர்கள்தானே, என்னுடைய பாபா! அன்பான பாபா! இனிமையான பாபா! என்றால் என்னுடையதில் உன்னுடையதை நிரப்புவது கடினமா என்ன? என்ன வித்தியாசம் உள்ளது? மேலும் நான் என்பதில் சிறிய வித்தியாசம் உள்ளது. சங்கல்பம் செய்து விட்டீர்கள் எல்லாம் உன்னுடையது மற்றும் என்னுடையது என்ன உள்ளது? என்னுடைய பாபா!

பாப்தாதாவும் பார்த்தார் பெரும்பான்மையான குழந்தைகள் எல்லைக்குட்பட்ட எனது என்பதை உனது என ஆக்கி விட்டனர், ஆதலால் என்னவாகி விட்டீர்கள்? கவலையற்ற ராஜா! இன்று பாப்தாதா குழந்தைகளை கவலையற்ற ராஜா சொரூபத்தில் பார்க்கின்றார். பாருங்கள், பக்தி மார்க்கத்திலும் உங்களுடைய சித்திரத்தை உருவாக்குகின்றனர் என்றால் இரட்டைக் கிரீடத்தைக் காட்டுகின்றனர். ஒன்று ஒளியினுடைய கிரீடம் உள்ளது, அதுதான் கவலையற்ற ஆத்மாவின் அடையாளம், நெற்றியில் ஒளி ஜொலிப்பது மற்றும்

இரண்டாவது கிரீடம், விகாரங்கள் மேல் வெற்றி அடைவது, ஆதலால் கிரீடம் காண்பிக்கின்றனர்; எனவே இந்த கவனம் வையுங்கள். எப்போது பாப்தாதா கவலையை எடுத்துக் கொண்டு மகிமையைத் தந்து விட்டாரோ, அப்போது என்னவாக ஆனீர்கள்? ராஜா ஆனீர்கள், எனில் கிரீடமும் வேண்டும்தானே. ஆகவே பாப்தாதா மூன்று சிம்மாசனங்களுடைய எஜமானன் ஆக்கியுள்ளார். முதல் சிம்மாசனம், பிருகுட்டியினுடையது, இதுவோ எல்லோருக்கும் இருக்கிறது. இரண்டாவது சிம்மாசனம், பாப்தாதாவின் இதய சிம்மாசனம் மற்றும் மூன்றாவது உலகத்தின் சிம்மாசனம், ராஜ்யத்தின் சிம்மாசனம். எனில் உங்கள் அனைவருக்கும் இந்த மூன்று சிம்மாசனங்களும் கிடைத்துள்ளதுதானே. சர்வ சிரேஷ்டமானது பாப்தாதாவின் இதய சிம்மாசனம்! எனில் சோதனை செய்யுங்கள் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறேனா என? ஏனெனில் பாப்தாதாவின் இதய சிம்மாசனத்தில் யார் அமர்ந்திருக்கிறார்கள்? யார் சதா தானும் கூட பாப்தாதாவை தனது இதய சிம்மாசனத்தில் அமர்த்தியிருக்கிறாரோ, யார் சதா சிரேஷ்ட ஸ்திதியில் மாஸ்டர் சர்வ சக்திவானாக இருக்கிறாரோ, அவர்தான்! எனவே சதா இதய சிம்மாசனம் இருக்கிறதா என சோதனை செய்யுங்கள் அல்லது அவ்வப்போது மண்ணில் வந்து விடுகிறீர்களா? இது தேக அபிமானத்தின் மண் ஆகும். வெகு காலம் மண்ணில் இருந்தீர்கள், ஆதலால் இப்போதும்கூட அவ்வப்போது மண்ணில் வந்து விடுவதில்லைதானே?

ஆகவே பாப்தாதா எல்லா குழந்தைகளுக்கும் நேரத்தினுடைய சமிக்ஞை தருகின்றார். அசானக்'ன் (திடீரென) பாடத்தை உறுதி ஆக்குகின்றார், இதற்காக இந்த சங்கம யுக நேரத்திற்கு மிகுந்த மகத்துவம் வைக்க வேண்டும். ஏனெனில் இந்த ஒரு ஜென்மத்தில் அநேக ஜென்மங்களுக்கானப் பலனை உருவாக்க வேண்டும், ஆதலால் பாப்தாதா சமிக்ஞை செய்கிறார் எனில் சங்கம யுக நேரத்தில் இரு விஷயங்கள் மீது சதா கவனம் வைக்க வேண்டும். அந்த இரு விஷயங்களும் நினைவிருக்கலாம் -சமயம் மற்றும் சங்கல்பம்! பாப்தாதாவிற்கு அனைவருமே வீண் சங்கல்பத்தை, சங்கல்பம் மூலம் தருவதற்கு தைரியம் வைத்தீர்கள்; ஆகவே தைரியம் சதா நிரந்தரமாக உள்ளதா? என்று சோதனை செய்யுங்கள். ஏனெனில் ஒருமுறை குழந்தைகள் தைரியம் வைத்தால் தந்தை ஆயிரம் முறை உதவி

செய்வார். எனில் இப்போது என்ன நினைக்கிறீர்கள்? வீண் சங்கல்பத்தை தைரியம் வைத்து தந்தைக்கு முன் சங்கல்பம் செய்தீர்களோ அது நிரந்தரமாக உள்ளதா? ஏனென்றால் இந்த வீண் சங்கல்பத்தால் அதிக நேரம் செலவாகிறது மற்றும் உங்களுக்கு இந்த நேரத்திற்கு ஏற்ற காரியம் உலகிலுள்ள ஆத்மாக்களுக்கு செய்தி அளிப்பது. ஆகவே வீண் சங்கல்பத்தை முடிக்க வேண்டும், அப்போது துக்கம், அசாந்தியில் இருக்கும் ஆத்மாக்களுக்கு சுகம் சாந்தியின் அனுபவம் செய்விக்க முடியும். பாப்தாதாவிற்கு துக்கத்திலிருக்கும் குழந்தைகளைப் பார்த்து இரக்கம் வருகிறது. உங்களுக்கும் கூட உங்களுடைய சகோதர-சகோதரிகளைப் பார்த்து இரக்கம் வருகிறதுதானே.

இந்த 75'ம் வருட நிறைவு விழாவைக் கொண்டாடுவதற்காக தற்சமயம் எல்லோருக்கும் விருப்பம் உள்ளது, திட்டமும் போட்டுள்ளனர், நடைமுறையிலும் செய்துள்ளனர் என்பதைப் பாப்தாதா பார்த்தார். பாப்தாதா இதை விரும்புகிறார், நிகழ்ச்சிகளை மிக நன்றாகச் செய்தீர்கள், அதற்கான வாழ்த்துக்களையும் தருகின்றார்; ஆனால் இப்போது நேரத்திற்கு ஏற்றவாறு சீக்கிரம் சீக்கிரமாக அவர்களையும் வாரிசு ஆக்குங்கள், அவர்களும் ஏதாவது ஆஸ்திக்கு அதிகாரிகள் ஆகட்டும். நல்ல நல்ல விஷயங்களை நிறையக் கூறுகிறீர்கள், பாப்தாதாவும் கூட குழந்தைகளுடைய சேவையின் இந்த முடிவைப் பார்த்தார் மற்றும் தந்தை குழந்தைகள் மீது குஷியும் அடைகிறார். மனதார செய்கின்றீர்கள் மற்றும் இப்போது நேரத்திற்கு ஏற்றவாறு கேட்பவர்களும் விருப்பத்துடன் கேட்கிறார்கள். இவ்வளவு வித்தியாசமோ வந்து விட்டது. மிக நன்றாக உள்ளது ஆனால் நல்லவராக்கி ஏதாவது ஆஸ்தியினுடைய அதிகாரியாக ஆக்குங்கள். இதற்காக இப்போது நேரத்திற்கு ஏற்றவாறு தீவிர முயற்சியாளராக ஆவதன் அவசியம் உள்ளது என பாப்தாதா முன்பேயும் சமிக்ஞை அளித்திருந்தார். தீவிர முயற்சியாளராக ஆவதற்காக முக்கிய முயற்சி -ஒரு நொடியில் புள்ளி வைப்பது, நொடி மற்றும் புள்ளி இரண்டும் ஒரே நேரத்தில்! எனில் இப்போது பாப்தாதாவோ குழந்தைகளையோ கவலையற்ற ராஜாவின் ரூபத்தில் பார்க்கின்றார். இப்போது இந்த ரூபத்தை சதா அனுபவம் செய்யுங்கள். எது வந்தாலும் சரி, என்னுடையதை உன்னுடையதாக்கி விடுங்கள்!

இன்று பாப்தாதா பார்த்தார், வியாழக்கிழமை (குருவார்) நிறைய குழந்தைகள் பாப்தாதாவிடம் வந்தடைந்தனர், எனில் பாப்தாதா கூறினார் வாரத்தில் இரண்டு நாட்கள் விசேஷமானவை என. ஒன்று வியாழக்கிழமை, இரண்டு ஞாயிற்றுக்கிழமை (Sunday). என்றால் குருவாரத்தின் நாள் குருவின் நாளாகும், குருவிடமிருந்து என்ன கிடைக்கிறது? வரதானம்! ஆகவே குருவாரத்திற்கு வரதானத்திற்கான நாள் என்ற விசேஷம் உள்ளது, இந்த ரூபத்தில் குருவாரத்தைக் கொண்டாடுங்கள். ஏதாவது விசேஷ வரதானம் அமிர்தவேளை முதல் தனது புத்தியில் வெளிப்பட்டு (எமர்ஜ்) இருக்கட்டும். வரதானமோ அதிகம் உள்ளது ஆனால் விசேஷமாக ஒரு வரதானத்தை தனக்காக புத்தியில் வைத்து, சோதனை செய்யுங்கள் வரதானி தினத்தில் வரதான சொரூபமாகி, வரதானத்தைத் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது ஆனால் வரதான சொரூபம் ஆக வேண்டும் மற்றும் சோதனை செய்து கொண்டே இருக்க வேண்டும் இன்று எவ்வளவு நேரம் வரதான சொரூபத்தில் இருந்தேன்? என்பதை. ஞாயிற்றுக்கிழமையின் விசேஷம், உலகினருக்கான விடுமுறை நாள். என்றால் ஞாயிற்றுக்கிழமை அன்று தனது வாழ்க்கையில் சங்கல்பத்திலும்கூட என்னென்ன குறைகள் உள்ளதோ, கனவிலும்கூட என்னென்ன குறைகள் உள்ளதோ அவற்றிற்கு விடுமுறை அளித்து விடுங்கள். எப்படி மக்கள் இந்த இரு நாட்களையும் நன்றாகக் கழிக்கின்றனரோ, அப்படி நீங்களும் இந்த இரு நாட்களிலும் விசேஷமாக இந்த லக்ஷியம் மற்றும் லக்ஷணம், லக்ஷியம் மட்டுமில்லை ஆனால் லக்ஷியத்தின் கூடவே லக்ஷணத்தின் மீதும் கவனம் வைக்க வேண்டும். பாப்தாதா எல்லாக் குழந்தைகளையும் கூடவே கூட்டிக் கொண்டு செல்வதற்கான உறுதிமொழி அளித்துள்ளார். இதற்காக கூடவே செல்வதற்கு என்ன தயார் செய்ய வேண்டும்? தந்தையோ நொடியில் அசரீரி ஆகி விடுவார் ஆனால் நீங்கள் என்ன உறுதிமொழி செய்தீர்களோ, தந்தையும் கூட உறுதிமொழி அளித்துள்ளார் கூடவே செல்வோம் என, என்றால் நீங்கள் தயாரா? என்பதை சோதனை செய்யுங்கள். ஒரு நொடியில் புள்ளி வைத்து, சம்பன்னம் சம்பூர்ணம் ஆகிச் செல்ல வேண்டும், எனில் இப்படித் தயாரா? கூடவே போக வேண்டும்தானே, போக வேண்டுமா? தலையை ஆட்டுங்கள், போக வேண்டும், நல்லது! உறுதியாக? கைகோர்ப்பது

என்றால் சமம் ஆவது! நேரம் தீடீர் (அசானக்!) என வரும் என்றால் கூடவே செல்லுமளவுக்குத் தயாராகி விட்டீர்களா?

தந்தைக்கு குழந்தைகளிடம் அன்பு உள்ளதால் ஒருவரைக்கூட பின்னால் விட்டுவிட்டு வர விரும்பவில்லை. கூடவே இருக்கிறோம், கூடவே இருப்போம், கூடவே செல்வோம் மற்றும் கூடவே ராஜ குடும்பத்தில் வருவோம். லட்சியம் இருக்கிறதுதானே. லட்சியம் இருக்கிறதா? தயாரா? லட்சியமுள்ளது என்றால் கைதூக்கச் சொல்லலாமா, இந்தக் கையைத் தூக்க வேண்டாம். தயார் என்பதில் கை தூக்குங்கள். நன்றாக நீட்டி உயர்த்துங்கள். நல்லது. நாளையே விநாசமானாலும்கூட தயாராக இருக்கிறீர்களா? ஆனால் தனது சேவையை முடித்து விட்டீர்களா? சேவையோ இப்போது நடந்து கொண்டுள்ளதா? சேவை முடிந்து விட்டதா? எல்லோருக்கும் செய்தி போய்ச் சேர்ந்து விட்டதா? ஒவ்வொருவருக்கும் தந்தை வந்து விட்டார், ஆஸ்தி எடுத்துக் கொள்ள விரும்பினால் எடுத்துக் கொள்ளுங்கள் என்ற இந்த செய்தியை அளித்து விட்டீர்களா? என்பதை தான் வசிக்கும் பகுதியில் மட்டுமே பாருங்கள். இப்போது திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள். வீடு வீடாக செய்தி அளிப்பதற்கான திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை பாப்தாதா கேள்விப்பட்டார். நல்லது, செய்தியோ அளித்தாக வேண்டும், இல்லையேல் புகார் வரும். எழுந்திருங்கள். (மீடியாக்காரர்களை எழுந்து நிற்கச் சொன்னார்). நன்றாக உள்ளது, புகார்களை முழுவதுமாக முடித்து விடுங்கள் ஏனெனில் ஆக வேண்டியதோ அசானக் தான்; ஆகவே உங்களுக்குள் கலந்து பேசி இந்தத் திட்டத்தை நடைமுறையில் கொண்டு வாருங்கள். உங்களுக்குள் ஆலோசனை சீக்கிரமாகச் செய்யுங்கள், நேரம் எடுக்கும் அல்லவா, என்றால் ஊக்கமும் கொஞ்சம் குறைந்து விடுகிறது. மற்றபடி பாப்தாதாவிற்கும் பிடித்துள்ளது, வீடு வீடாக இந்த புகார் முடிந்து விடட்டும் -எங்களுக்கோத் தெரியாமல் போய் விட்டது தந்தை வந்தார் மற்றும் சென்றும் விட்டார், ஏமாந்து விட்டோம்! என்பது. எல்லோருக்கும் ஊக்கம் உள்ளதுதானே. எல்லோருக்கும் ஊக்கம் உள்ளதுதானே? சேவை செய்து புகார்களை முடித்து விட வேண்டும். ஊக்கம் இருந்தது என்றால் பாப்தாதாவின் உதவியும் உள்ளது. நல்லது.

பாப்தாதாவின் உள்ளத்தின் நம்பிக்கை அனைவருக்குமேத் தெரியும். சமான் மற்றும் சம்பூர்ணம், தந்தையின் இந்த நம்பிக்கை பூர்த்தியாயிற்றா? என இந்த இரு வார்த்தைகளையும் சதா சோதனை செய்யுங்கள். ஏனென்றால் பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் தந்தையுடைய நம்பிக்கைகளின் நட்சத்திரம் என நினைக்கின்றார். ஒவ்வொரு குழந்தைக்கும் தந்தை மீது அன்பு உள்ளது, இதையோ பாப்தாதாவும் அறிவார். உங்கள் அனைவரையும் மதுபனுக்கு வரச் செய்வது எது? இந்த அன்பு எனும் ரயிலில் வருகிறீர்கள், அன்பு எனும் விமானத்தில் வருகிறீர்கள். எனவே தந்தையும் குழந்தைகளுடைய அன்பு எனும் பாடத்தில் குழந்தைகளிடம் குஷி அடைகிறார்; ஆனால் எந்த இரு வார்த்தைகளை தந்தை விரும்புகின்றாரோ -சமான் மற்றும் சம்பூர்ணம் -இதையும் சம்பன்னமாக்க வேண்டும். இன்று பாப்தாதா நாலா புறமும் உள்ள குழந்தைகளின் உள்ளத்தின் சிநேகத்தைப் பார்த்து ஒவ்வொரு குழந்தைக்கும் உள்ளத்தின் அன்பினுடைய வாழ்த்துக்களை அளிக்கின்றார்! நல்லது.

சேவையின் வாய்ப்பு -ஈஸ்டர்ன், போபால்: வாழ்த்துக்கள்! இந்த வாய்ப்பும் நன்றாக உள்ளது. சேவையின் களஞ்சியம் எளிதாகக் கிடைத்து விடுகிறது. இரண்டு மண்டலங்களும் ஊக்கம் உற்சாகத்துடன் முயற்சியிலும் முன்னேறுகிறீர்கள் மற்றும் மேலும் ஒவ்வொருவரும் தனது முயற்சியை தீவிரமாக்கி முன்னேறுவீர்கள். பாப்தாதா குஷி அடைகின்றார், இந்த வாய்ப்பினால், ஒன்று சேவையின் பலன் கிடைக்கிறது மற்றும் பலமும் கிடைக்கிறது. எல்லோருடைய பார்வையும் எங்கு செல்கிறது? இப்போது எந்த ஜோனின் சேவையோ அந்தப் பக்கம் செல்கிறது மற்றும் சேவை, மதுபனின் சேவை என்றால் சேவையின் பலன் மற்றும் பலமும் கிடைத்து விடும், மிக நன்றாகச் செய்தீர்கள். தடையற்ற சேவை செய்தீர்கள், எல்லோரும் திருப்தியின் பழத்தைச் சாப்பிட்டார்கள். பாப்தாதா குஷி அடைகின்றார், ஏனெனில் விசேஷ வாய்ப்பு கிடைக்கிறதுதானே மற்றும் குழந்தைகளும் மதுபன் வந்து விடுகிறீர்கள், மதுபனிற்கு வருவது, இவ்வளவு பெரிய பரிவாரத்தைச் சந்திப்பது மற்றும் இவ்வளவு பெரிய பரிவாரத்திற்குச் சேவைக்கு நிமித்தம் ஆவது, இதுவும் கூட மிகப் பெரிய பாக்கியம் ஆகி விடுகிறது. எனவே தடையற்ற திருப்தியின் பழத்தைச் சாப்பிட்டீர்கள் ஆதலால் பாப்தாதா விசேஷமாக இரண்டு ஜோன்களுக்கும்

வாழ்த்துக்களை அளிக்கின்றார். நல்லது, ஒவ்வொருவர் மீதும் தந்தையுடைய பார்வையும் செல்கிறது மற்றும் பரிவாரத்தின் பார்வையும் செல்கிறது. பிரத்யக்ஷ ஆத்மாக்களுக்கு குஷியும் கிடைக்கிறது, குஷி அடையச் செய்கின்றனர் மற்றும் கிடைப்பதும் குஷி எனில் இரு சாராருக்கும் வாழ்த்துக்கள்!

கிராமத்துறை, பாதுகாப்புத்துறை மற்றும் வியாபாரத்துறை: நல்லது. ஒவ்வொருவரும் தனது அடையாளத்தை எடுத்து வந்துள்ளீர்கள். எல்லோருக்கும் குஷி வருகிறது மற்றும் பாப்தாதாவும்கூட ஒவ்வொரு துறையைப் பார்த்து குஷி அடைகின்றார். பாப்தாதா பார்த்தார் ஒவ்வொரு துறையும் ஏதாவது புதிய கண்பிடிப்பு செய்து தனது துறையை சேவையின் வளர்ச்சியில் கொண்டு வந்துள்ளது மற்றும் பாப்தாதா மூன்று துறையினரின் தனித்தனியான 'ரிஸல்ட்'ஐப் பார்த்து குஷி அடைகின்றார். எப்படி இந்த யோகபல வேளாண்மையின் சேவை அதிகரித்துக் கொண்டிருக்கின்றதோ மேலும் அரசாங்கம் வரை ஓசை சென்றடைந்துள்ளது எனில் அரசாங்கமும் கூட குஷி அடைந்துள்ளது, இதன் மூலம் ஆத்மாக்களுக்கு லாபம் கிடைத்துக் கொண்டிருக்கின்றது என்று. ஒவ்வொரு துறையினரும் சேவையில் நம்பர்-1. இந்த வேளாண்மைக்காரருடைய அறிக்கையைப் பார்த்தார், அவர்கள் இப்போது யார் யார் அருகில் சம்பந்தத்தில் வந்துள்ளனர் என்ற பட்டியல் எடுங்கள் என தந்தை என்ன கூறினாரோ, அதில் முதலாவது துறையாக இவர்கள் பட்டியல் கொடுத்துள்ளனர். பாப்தாதா பார்த்தார் விதவிதமான முறைகளில் தொடர்பில் வந்துள்ளனர் மற்றும் பிரம்மாகுமாரிகள் அரசாங்கத்திற்கு உதவியாளர் ஆகிக் கொண்டிருக்கின்றனர் என்பதை புரிந்துள்ளனர் ஏனெனில் நடைமுறையில் பார்க்கின்றனர்தானே எவ்வளவு அன்புடன் உழைக்கின்றனர் என்பதை. ஆகவே மூன்று துறையினரும் பாராட்டுக்குரிய சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள் ஆதலால் வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! நல்லது, உருவாக்கியதை -சின்னச்சின்ன மர பொம்மைகள் -அனைவருக்கும் காட்டுங்கள். (கிராமத்துறையினர் பொம்மலாட்டம் காண்பித்தனர்). எல்லோரும் மிகுந்த குஷி அடைகின்றனர் என்பதைப் பாப்தாதாவும் பார்த்தார். தங்களது குஷியை குழந்தைகளின் ரூபத்தில் காட்டிக் கொண்டிருக்கிறீர்கள். நல்லது. கிராமத்துறையின் விவரங்கள் நன்றாக வந்துள்ளது. இன்னும் இரு துறையினர் உள்ளனர் அவர்களும் ஒன்றும்

குறைந்தவரில்லை. அதே போல முன்னேறிக் கொண்டே செல்லுங்கள், முன்னேறிக் கொண்டே செல்லுங்கள் மற்றும் உலகில் இந்த ஓசையைப் பரப்பிக் கொண்டே இருங்கள் -நாங்கள் சேவாதாரி ஆகி உலகிற்கு, அதிலும் பாரதத்தை சொர்க்கமாக சுகமானதாக கட்டாயம் ஆக்குவோம்! அப்போது புரிந்து கொள்வார்கள் பிரம்மாகுமாரிகளின் இந்த உறுதிமொழியை பிரம்மாகுமாரிகள் முழுமையாகச் செய்து கொண்டுள்ளனர் மற்றும் செய்தேக் காட்டுவார்கள் என. ஆகவே பாப்தாதா மூன்று துறையினருக்கும் தனித்தனியாக வாழ்த்துக்களை அளிக்கின்றார்.

வியாபாரத்துறைக்கு வெள்ளி விழா! இப்போது வியாபாரத்துறையினர் எழுந்திருங்கள். தைரியம் வைத்து உழைத்ததற்கு வெற்றியும் கிடைத்தது மற்றும் இனியும் வெற்றி உங்கள் பிறப்புரிமையும் ஆகும். பாப்தாதாவிற்கு நன்றாக உள்ளது, இந்தத் துறையில், ஒவ்வொரு துறையிலும் பார்த்தார், முறையோ மூன்று துறைக்கோ, நான்கு துறைக்கோ ஆகட்டும், ஆனால் ஒவ்வொரு துறையும் எப்போது உருவானதோ அப்போதிருந்து சேவையில் வளர்ச்சி அடைந்துள்ளனர் மற்றும் இனி மேலும் ஆகும். இதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார் மற்றும் முன்கூட்டியே வாழ்த்துக்களை அளிக்கின்றார். நல்லது!

டீச்சர்கள்: 1,500-டீச்சர்கள் வந்துள்ளனர். டீச்சர்களை பாப்தாதா சதா நினைக்கின்றார், அன்பு செய்கிறார் ஏனெனில் ஒவ்வொரு சகோதரர், சகோதரியும் முன்னேற்றுவதற்காக டீச்சர்கள் நிமித்தமாகின்றனர். டீச்சர்களை பாப்தாதா 'குருபாயீ' என்று கூறுகிறார். குருபாயீ என்றால் சமான் ஏனெனில் எப்படி தந்தையின் கடமை சதா சேவையில் பிஸியாக இருப்பது, அது போல தகுதியான டீச்சர்கள் தந்தைக்குச் சமமாக சதா சேவாதாரி மற்றும் வெற்றி சொரூபமாகி, பயன் தரும் சொரூபம் ஆகக்கூடியவர்கள். பாப்தாதாவிற்கு டீச்சர்கள் மீது சதா உள்ளத்தின் அன்பு இருக்கிறது. ஏன்? டீச்சர்கள் என்றால் சதா சேவாதாரி, சதா தந்தைக்குச் சமமாக ஆகக் கூடியவர்கள் மற்றும் புதியவர்களுக்குத் தந்தையின் அறிமுகம் கொடுத்து, அனுபவி ஆக்கி, தந்தையின் ஆஸ்திக்கு அதிகாரி ஆக்குபவர்கள். எனவே பாப்தாதா டீச்சர்கள் மீது குஷி அடைகின்றார் மற்றும் இதே உள்ளத்தின் அன்பை,

தந்தையின் அன்பை, மாணவர்களிலும் நிரப்பி, அவர்களையும் தந்தையுடைய முழு ஆஸ்திக்கும் அதிகாரி ஆக்குபவர்கள். தந்தை ஒவ்வொரு டீச்சர்கள் மீதும் நம்பிக்கை வைத்துள்ளார் -ஒவ்வொரு டீச்சரும் தந்தையுடைய நம்பிக்கைகளை, தந்தை விரும்புவதை பிரத்யக்ஷம் செய்பவர்கள் மற்றும் செய்விப்பவர்கள்; ஆதலால் ஒவ்வொரு டீச்சருக்கும் பாப்தாதா கோடி மடங்கு வாழ்த்துக்களை அளிக்கின்றார், வாழ்த்துக்களை அளிக்கின்றார்! நல்லது.

இரட்டை வெளிநாட்டு சகோதர சகோதரிகளுடன்: இரட்டை வெளிநாட்டினரும் சேவையில் பாரத ஆத்மாக்களுக்குக் குறைந்தவர்கள் இல்லை என்பதைப் பாப்தாதா பார்த்தார். பாப்தாதா குஷி அடைகின்றார், ஒவ்வொருவரும் தனது இடத்தில் சேவையை வளர்ச்சியடையச் செய்து கொண்டிருக்கிறீர்கள் மற்றும் தன்னையும் கூட நன்றாக ஊக்கம் உற்சாகத்தில் வைத்துள்ளீர்கள். இரட்டை வெளிநாட்டினருக்கு எதைச் செய்தாலும் அதை ஊக்கம் உற்சாகத்துடன் முழுமையாகச் செய்வது மற்றும் முயற்சியின் பக்கமும் கவனம் வைப்பது என்ற இந்த சம்ஸ்காரம் உள்ளது. எனில் எல்லோரும் தீவிர புருஷார்த்திகள்தானா? என்றால் கை உயர்த்துங்கள். தீவிர புருஷார்த்திகள்? நல்லது. அனைவர் சார்பாகவும் ஏராளமான வாழ்த்துக்கள், ஏன்? தீவிர புருஷார்த்தி என்றால் பாப்தாதாவின் நம்பிக்கைகளை நடைமுறையில் முழுமையாகச் செய்பவர்கள்! எனில் பாப்தாதா தீவிர புருஷார்த்திற்கு வாழ்த்துக்கள் அளிக்கின்றார். தீவிர புருஷார்த்திகள் மற்றும் சதா தீவிர புருஷார்த்தம் செய்து மற்றவர்களையும் தீவிர புருஷார்த்தி ஆக்குவது. வெளிநாட்டினர் முழுவதும் தீவிர புருஷார்த்தி பட்டியலில் வந்து விடுங்கள். இத்தகைய சிறப்பு கொஞ்சம் உள்ளது மற்றும் கொஞ்சம் காட்டவும் வேண்டும் ஆனால் பாப்தாதா முயற்சிக்கான வாழ்த்துக்களை அளிக்கின்றார். முரளி மீதும் கவனம் உள்ளது, இந்த முரளியின் சிநேகம் பாப்தாதாவிற்கு மிக நன்றாக உள்ளது. மதுபன் மீதும் அன்பு, முரளி மீதும் அன்பு, பரிவாரத்தின் மீதும் அன்பு மற்றும் 'மேரா பாபா' மீதும் அன்பு! இப்போது சூட்சும முயற்சியின் பக்கமும் கவனம் நன்றாக உள்ளது மற்றும் பாப்தாதா பார்த்தார் ஜனக் குழந்தைக்கும் மிகுந்த கவனம் உள்ளது. இங்கு இருந்தாலும் ஒவ்வொரு வகுப்பும் முதலில் வெளிநாடு செல்கிறது என்றால் வளர்ப்பும் கூட நன்றாகக் கிடைத்துக்

கொண்டிருக்கிறது. இதுவும் கூட உங்களுடைய அதிர்ஷ்டம்தான். 'லக்கியஸ்ட் & ஸ்வீட்டஸ்ட்' இரண்டுமே உள்ளது. நல்லது.

முதன் முறையாக வந்தவர்களுடன்: இவர்களோ மிகவும் அதிகம் வந்துள்ளனர். கை அசையுங்கள். எல்லோரும் தங்களது மதுபன் வீட்டை வந்தடைந்து விட்டீர்கள், அதற்காக பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் வாழ்த்துக்களை அளிக்கின்றார் ஏனெனில் இறுதி நேரத்திற்கு முன்பாகவே வந்தடைந்து விட்டீர்கள். 'லாஸ்ட் ஸோ ஃபாஸ்ட்'ல் செல்வதற்கான வாய்ப்பு உள்ளது. பாப்தாதா குழந்தைகளைப் பார்த்து குஷி அடைகின்றார். வாருங்கள் மற்றும் இனி தீவிர முயற்சி செய்து மிகவும் முன்னாடி செல்வதற்கான திட சங்கல்பம் செய்யுங்கள். உறுதித்தன்மைதான் வெற்றியின் சாவி! பாப்தாதா இன்று வந்துள்ள குழந்தைகளுக்கு விசேஷமாக உறுதித்தன்மையின் சாவியை பரிசாக அளிக்கின்றார். உறுதித்தன்மையை ஒருபோதும் லேசாக ஆக்கி விடக்கூடாது. உறுதித்தன்மை உங்களை சதா எளிதாக முன்னேற வைத்துக் கொண்டேயிருக்கும். பாப்தாதா குஷியுடன் வரவேற்கின்றார், தங்களது ஆஸ்தியை எடுத்துக் கொள்வதற்காக வந்துள்ளீர்கள், இதற்காக மிக்க வாழ்த்துக்கள்! நல்லது.

நாலா புறமும் எல்லா பிராமணர்களுக்கும் பாப்தாதா உள்ளத்தின் அன்பை மற்றும் சதா முன்னேறுவதற்கான சிரேஷ்ட சங்கல்பத்தை அளிக்கின்றார். ஒவ்வொரு குழந்தையையும் தந்தை பார்த்துக் கொண்டும் இருக்கிறார் மற்றும் பார்த்து பார்த்து உள்ளத்தில் ஒன்றிணைக்கிறார். அருகில் இருப்பவர்களோ பாப்தாதாவை நேரில் பார்த்துக் கொண்டுள்ளனர் மற்றும் நீங்கள் அனைவரும் சாதனங்கள் மூலம் முன்னாலேயே பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். பாப்தாதாவும் உங்கள் அனைவரையும் எங்கிருந்தாலும் அப்படியே எதிரிலேயே அமர்ந்திருப்பதாக பார்த்துக் கொண்டிருக்கிறார் மற்றும் ஒவ்வொருவருக்கும் உளப்பூர்வமான அன்பைத் தருகின்றார். முன்னேறிக் கொண்டே செல்லுங்கள், தீவிர முயற்சி செய்து இன்னும் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். நல்லது. எதிரில் அமர்ந்திருப்பவர்களுக்கும் கூட பாப்தாதாவின் அன்பு நினைவுகள்

மற்றும் சதா முன்னேறுவதற்கான வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! நல்லது.

தாதி ஜானகியுடன்: (எல்லோரும் கிறிஸ்துமஸ் அன்புடன் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள், எல்லோருமே அன்பு நினைவுகளை அனுப்பியுள்ளனர்) அனைவருக்கம் பாப்தாதாவின் சார்பாக கோடி மடங்கு பாராட்டுக்களை அளியுங்கள். நல்லது, பாப்தாதா கேள்விப்பட்டார் சேவையிலும் முன்னேறிக் கொண்டே இருக்கிறீர்கள். நன்றாக சேவை செய்து கொண்டே இருக்கிறீர்கள், பாப்தாதா குஷி அடைகிறார். எங்கு நிகழ்ச்சி நடந்தாலும் அங்கு வெற்றியே வெற்றிதான். நல்லது. இங்கு அமர்ந்தபடியே நீங்கள் அனைவருக்கும் சேவை செய்கிறீர்கள்தானே, இதுவும்கூட நன்றாக உள்ளது.

மோகினி சகோதரியுடன்: நன்றாக இருப்பீர்கள். அதிகம் ஓடியாட வேண்டாம். மற்றபடி நன்றாக இருப்பீர்கள், போகப்போக சேவை செய்வீர்கள்.

முன்னி சகோதரியிடம்: இவரும் கூட உதவியாளர் தான், நன்றாக ஒத்துழைக்கின்றார்.

ஈஷூ தாதியிடம்: இவரோ குப்தமான யக்ஞ பாதுகாவலர் ஆனால் மிக நன்றாக ரகசிய யுக்த் ஆகி எந்த ஒரு காரியத்தையும் செய்கின்றார், பாப்தாதா குஷி அடைகிறார். நல்லது.

பரதாதியுடன்: மிக்க நல்லது, இயற்கையை வென்றவராகி, இயற்கையை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். குஷியாக இருக்கிறீர்கள் ஆதலால் இந்த குஷியும் கூட சேவை செய்கிறது. (ருக்மணி சகோதரியிடம்) நீங்களும் சேவையில் களைப்படைவதில்லை, ஏனெனில் இவர் குஷியடைகிறார்தானே, அது களைப்படையாமல் செய்து விடுகிறது. நல்லது.

தாதி ஜானகி கேட்டார் -பாபா, ஜனவரி மாதம் லண்டன் மற்றும் ஜெர்மனியில் கூப்பிடுகின்றார்கள், போக வேண்டுமா அல்லது வேண்டாமா?). பாப்தாதா இதைத்தான் கூறுகிறார், எல்லை எதுவும்

வைக்காதீர்கள், போகக்கூடாது என, எங்கு அவசியமோ அங்கு கண்டிப்பாகச் செல்லுங்கள். (பாம்பேக்காரர்கள் கூட மிகவும் கூப்பிட்டுக் கொண்டே இருக்கிறார்கள், நான் பாம்பே போகட்டுமா, என்ன?). சரி, கண்டிப்பாகச் செல்லுங்கள். பாருங்கள், எங்கு அவசியமோ அங்கு செல்வதில் எந்தத் தடையும் இல்லை. எல்லா இடங்களுக்கும் செல்ல வேண்டாம், எங்கு அவசியமோ அங்கு செல்லுங்கள். (புவனேஸ்வர் போகவில்லை, அங்கு அதிகம் நினைத்துக் கொண்டிருந்தனர்). அதுவோ முடிந்து விட்டது. இப்போது எங்கு அவசியம் தேவை என நினைக்கிறீர்களோ அங்கு செல்வதில் தடை ஏதுமில்லை. தன்னை பந்தனத்தில் வைக்காதீர்கள், சுதந்திரமாக இருங்கள். இவரோ போகக் கூடாது என்ற பந்தனத்தில் தன்னை வைத்துள்ளார், இது சரியல்ல. எவர் ரெடி! எங்கு அவசியமோ அங்கு செல்வதில் தடை இல்லை. (எல்லோரும் நினைக்கிறீர்கள் சில சமயம் சரி என்கிறார், சில சமயம் வேண்டாம் என்கிறார்). இல்லை, இதுவும் பாப்தாதா கூறுகிறார், ஒரேடியாக தன்னை பந்தனத்தில் வைத்துக் கொள்ளாதீர்கள், போகக்கூடாது, போகக்கூடாது. (சங்கல்பம் உள்ளது, பந்தனம் இல்லை). சங்கல்பம் நிறைவேறி விடும்.

(நிர்வர் சகோதரர் எங்கும் செல்வதில்லை) இவர் உடல்நிலை காரணமாக எங்கும் செல்வதில்லை. (தாதியின் உடல்நிலையின்படி இப்போது போகக்கூடாது). இல்லை, இவரால் செல்ல முடியும் ஆனால் தன்னை பந்தனத்தில் வைத்துள்ளார் எங்கும் செல்லக் கூடாது என.

**ரமேஷ் சகோதரருடன்:** உடல் நன்றாக உள்ளதா? (இப்போது ஸ்டுடியோ தயாராகிக் கொண்டிருக்கிறது). மிக நல்லது, இதுவும் சேவை செய்யும். தயார் செய்து விடுவோம், நிகழ்ச்சிகள் நடந்து கொண்டே இருக்கும். நல்லது. உடல்நிலையை நன்றாக்குவதற்கு ஏதாவது வழியை யோசியுங்கள் ஏனெனில் பொறுப்புகள் நிறைய உள்ளது. (நானும்கூட இதனால்தான் எங்குமே செய்வதில்லை). ஏதாவது பந்தனத்தில், போகலாமா வேண்டாமா என்பது கூடாது. போக வேண்டும், அவசியம் எனில் சரீரமும் ஒத்துழைக்கும். எங்கு அவசியமோ அங்கு உதவி கிடைக்கும். எப்போது போக முடியுமெனில், மாட்டேன் என சொல்லாதீர்கள்; போக முடியும் என்றால் சரீரமும் கூடவே போகத்தான் வேண்டும். எப்போதாவது ஒரேடியாக மோசமாகி விடுகிறது, அது வேற

விஷயம். மற்றபடி போக முடியும் என்றால் சேவை மூலம் குஷி ஏற்படுகிறது, இதுவும் கூட மருந்து தான். எவ்வளவு குஷி ஏற்படுகிறது, அனைவருக்கும் குஷியின் சத்துணவு கிடைக்கிறது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋ ❋❋❋❋❋❋❋❋

# 31.12.2015 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நாடகத்தில் சங்கமயுகத்தின் இந்த சந்திப்பு மிக மிக விலைமதிப்பற்றது. மேலும் பற்றற்றதும் அன்பானதும் ஆகும். இது திடீரென்று கிடைத்த லாட்டரி அதுவும் பாக்கியவான் குழந்தைகளுக்கு மட்டுமே கிடைக்கிறது!

இன்று அனைவருடைய உள்ளத்திற்கும் விருப்பமான ஒவ்வொரு குழந்தையும் தனது உள்ளத்திற்குப் பிடித்தமான அன்பான தந்தையோடு சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். பாப்தாதாவும் நாலா புறங்களிலுமுள்ள ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து மகிழ்ச்சி அடைந்துக் கொண்டிருக்கின்றார். ஆஹா! எனது கண்களில் இருக்கக்கூடிய ஒவ்வொரு குழந்தையும் நிறைந்திருக்கின்றனர். ஏனெனில், ஒவ்வொருவரிடமும் ஏதேனும் விசேஷத்தன்மை உள்ளது. அந்த விசேஷத்தின் மூலம் குழந்தை மற்றும் தந்தையின் சந்திப்பு நடந்து கொண்டிருக்கிறது. எங்கிருந்து வந்தாலும் சரி, அனைவருமே தந்தையின் அன்புச் செல்லங்களே! ஒவ்வொருவரும் மிக அன்போடு ஆஹா பாபா! ஆஹா! என்றுக் கூறி சந்தித்துக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு குழந்தையும் அவர்கள் முன்னால் அமர்ந்திருந்தாலும் சரி, பின்னால் இருந்தாலும் சரி! பின்னால் இருப்பவர்கள் கை உயர்த்துங்கள். ஒவ்வொரு குழந்தையின் முகத்திலும் தந்தை மற்றும் குழந்தைகளின் சந்திப்பின் குஷி எவ்வளவு தென்படுகிறது! ஒவ்வொரு குழந்தையின் உள்ளத்திலிருந்தும் ஆஹா பாபா! ஆஹா பாபா! என்னும் இந்த வார்த்தை களே வெளிவருகின்றன. தாங்கள் இந்த சந்திப்பு அதுவும் நேர் எதிரிலேயே சந்திக்கக்கூடிய இந்த வாய்ப்பை அளித்தீர்கள். ஒவ்வொரு குழந்தையும் எதிரிலேயே தந்தையை சந்திக்கக்கூடிய இந்த

பொன்னான வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. பாபாவும் குழந்தைகளோடு சந்திக்கக்கூடிய இந்த வாய்ப்பைப் பார்த்து எவ்வளவு மகிழ்ச்சி அடைகின்றார். இவ்வளவு பெரிய சபையை பார்த்து பாபாவும் அடிக்கடி கூறுகிறார். ஆஹா குழந்தாய்! ஆஹா குழந்தாய்! இந்த சந்திப்பு எவ்வளவு மகான் தன்மையானது. எங்கிருந்தெல்லாமோ குழந்தைகள் சந்திப்பதற்காக வந்து சேர்ந்துள்ளனர். பாபா மற்றும் குழந்தைகளின் இந்த சந்திப்பு மிக அன்பானதும், அதே சமயத்தில் பற்றற்றதும் ஆகும். ஒவ்வொருவருடைய கண்ணிலும் பாபா மற்றும் குழந்தைகளின் சந்திப்பின் ஆனந்தம் நிறைந்திருக்கிறது. இந்த முழு சபையில் வீற்றிருக்கும் ஒவ்வொரு குழந்தையும் ஆஹா பாபா! ஆஹா! என்னும் பாடலை பாடிக் கொண்டிருக்கின்றார்கள். மேலும் பாபாவும் இதே கீதத்தைப் பாடிக் கொண்டிருக்கின்றார். ஆஹா குழந்தாய் ஆஹா! நாடகத்தில் இந்த பாபா மற்றும் குழந்தைகளின் சந்திப்பு எவ்வளவு அன்பானது. ஒவ்வொரு குழந்தையின் உள்ளத்திலும் இந்த கீதம் கேட்டுக் கொண்டிருக்கிறது. ஆஹா எங்களது அன்பின் நிறைவு, ஆஹா உங்களது கண்களின் இந்த சந்திப்பு: இந்த சந்திப்பு சதா காலத்திற்கும் பதிந்து விட்டது. எப்பொழுது விருப்பமோ அப்பொழுது இந்த காட்சியை வெளியே கொண்டு வாருங்கள். அப்பொழுது எவ்வளவு சுகமான உணர்வு வரும். உள்ளத்தில் பாடல் வெளிவந்து கொண்டிருக்கிறது. ஆஹா பாபா! ஆஹா பாபா! உங்களின் ஆன்மீகப் பார்வை! ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகிறது. இம்மாதிரியான சந்திப்பு, ஆஹா குழந்தைகளே! ஆஹா! என்று கூறி எதிரிலேயே சந்தித்துக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொருவரின் கண்ணிலும் இந்த சந்திப்பு அவ்வளவு குஷியை ஏற்படுத்துகிறது அதன்படி ஒவ்வொரு குழந்தையும் இந்த சாகார உலகத்தில், பௌதீக உருவில் பாபா மற்றும் குழந்கைதளின் சந்திப்பு நிகழ்வது மிகவும் அற்புதமானது. ஒவ்வொருவரின் உள்ளமும் கூறுகிறது ஆஹா பாபா! ஆஹா!! நாங்களோ நினைத்துக் கூட பார்த்ததில்லை, இந்த சந்திப்போ மிகமிக அன்பானது. இந்த சந்திப்பு கனவில் கூட நடந்ததில்லை. இப்படியும் நடக்கக்கூடுமா! ஆனால் குழந்தை மற்றும் தந்தையின் இந்த சந்திப்பு குழந்தைகள் தந்தையைப் பார்த்து மிகவும் மகிழ்ந்து போயினர், ஆஹா பாபா ஆஹா! மேலும் பாபாவும் ஒவ்வொரு குழந்தை யையும் பார்த்து எவ்வளவு சந்தோஷம் அடைந்து கொண்டிருக்கின்றார் ஆஹா! ஆஹா! ஆஹா! என்னும் இந்த தொனியே கேட்டுக் கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு வரின் குஷியின் அலைகள் அவர்களது முகத்தில் பிரகாசமாக தென்பட்டுக் கொண்டிருக்கிறது. அனைவரின் வாயிலிருந்தும் இதே ஒலி ஆஹா பாபா ஆஹா! என்ற வார்த்தையே வெளிவந்து கொண்டிருக்கிறது. இன்றோ நீங்கள் இந்த சந்திப்பை அனுபவிக்கச் செய்து விட்டீர்கள். ஒவ்வொருவரிடைய உள்ளத்திலிருந்தும் முழு ஹாலிலும் ஒரே இந்த ஒலி தான் வந்து கொண்டிருக்கிறது. அதுவே இனிமையான தந்தையே! ஆஹா இனிமையான தந்தையே ஆஹா! இம்மாதிரியான சந்திப்பை பார்த்து அனைவரும் இந்த சந்திப்பில் போதையிலேயே மூழ்கிக் கிடக்கும் ஆத்மாக்களாக தென்படுகின்றனர். அனைவரிடமிருந்தும் ஒரே வார்த்தை ஆஹா பாபா ஆஹா! ஒவ்வொருவரின் உள்ளமும் இதையே பேசுகிறது. இந்த முழு சபையின் உள்ளத்தின் கீதம் மிகவும் இனிமையாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. இந்த கீதம் எவ்வளவு அன்பானது. பௌதீக (சாகார) நிலையில் நேருக்கு நேர் நிகழும் இந்த சந்திப்பு மிகவும் விலைமதிப்பற்றது. நாடகத்தில் இந்த சந்திப்பு சங்கமயுகத்தில் மிகவும் அன்பானது மற்றும் பற்றற்றது. ஒவ்வொருவரின் உள்ளத்திலும் என்னுடைய தந்தை! என்னுடைய தந்தை! என்னுடைய தந்தை இதுவே நிறைந்திருக்கிறது. முன்னால் வந்து பார்த்தீர்கள் என்றால் அனைவரின் நெற்றியும் பிரகாசித்துக் கொண்டிருப்பதைக் காணலாம். ஒளி அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஏனெனில் தந்தை மற்றும் குழந்தைகளின் சந்திப்பு மிக அருகில் அதுவும் எதிரிலேயே பார்த்து, அனைவரும் தங்களை மிகவும் பாக்கிய வான்களாக அனுபவம் செய்து கொண்டிருக்கின்றனர். குழந்தைகள் பாபாவின் கூடவே இருந்தபோதிலும் கூட வந்திருப்போரின் சந்திப்பின் வாய்ப்பைப் பார்த்து அதில் ஏதோ திடீரென்று லாட்டரி கிடைத்தாற் போல் மூழ்கிக் கிடக்கின்றனர். இந்த சந்திப்பு முன்னுதாரமானது. சங்கமயுகத்தில் தந்தை மற்றும் குழந்தைகளின் சந்திப்பு அதுவும் பௌதீக (சாகார) ரூபத்தில், இது எவருடைய கனவிலும் கூட வந்ததில்லை ஆனால் அனைவரின் உள்ளத்திலும் இந்த சந்திப்பு நிரந்தரமாக நிறைந்து விட்டது. ஒவ்வொருவரின் உள்ளத்திலும் என்ன நிறைந்திருக்கிறது. இந்த சந்திப்பு நேரடியாக தந்தை மற்றும் குழந்தைகளின் சந்திப்பாகும். நினைத்துப் பாருங்கள். எவ்வளவு மகான் தன்மையானது இது. அனைவருமே இந்த நாட்களுக்காக எதிர்பார்த்து:க கொண்டிருந்தனர். இம்மாதிரி சாகார ருபத்தில் சந்திப்பு இது மிகவும்

விலை மதிப்பற்ற சந்திப்பாகும். அம்மாதிரி சந்திப்பைக் கொண்டாடுங்கள், உள்ளத்தில் நிறைந்திருக்கக் கூடிய இந்த சந்திப்பின் அனுபவம் அடிக்கடி மீண்டும் மீண்டும் மனதில் தென்படட்டும். இப்போது கூட சந்தித்துக் கொண்டிருக்கிறோம் என்ற அனுபவம் ஏற்பட வேண்டும். பாபா மற்றும் குழந்தைகளின் சந்திப்பு எவ்வளவு அன்பானது, எவ்வளவு சந்தோஷம் ஏற்படுகிறது, என்னுடைய பாபா எனக்கு கிடைத்து விட்டார்.

ஆக இன்று அனைவருடைய மனதிலும் தந்தை மற்றும் குழந்தைகளினுடைய அவ்யக்த சந்திப்பு எப்படி நிகழ்கிறது, அந்த அனுபவத்தை அனைத்துக் குழந்தைகளுக்கும் பாபா செய்வித்துக் கொண்டிருக்கிறார். அனைவரும் இந்த சந்திப்பை செய்தீர்களா? சதாரண விஷயம் அல்ல இது இந்த சந்திப்பினுடைய பாக்கியத்தை எடுத்துக் கொள்வது என்பது ஒவ்வொருவருக்கும் கிடைக்கிறது ஆனால் கிடைத்திருக்கும் பாக்கியத்தை அனுபவத்தில் கொண்டு வரவேண்டும். இந்த அனுபவம் இவ்வளவு அதிகம் பேர் இருந்தாலும் உண்மையான ரீதியில் அனுபவம் செய்ய வேண்டும். இது பாக்கியத்தினுடைய விஷயம் ஆகும். ஆக இன்று பாப்தாதா அம்மாதிரி குழந்தைகளின் பாக்கியத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். எவ்வளவு உள்ளப்பூர்வமாக சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள், பாடலைப் பாடி நினைவு செய்தனர் ஆனால் தற்போது பாடல் என்ன நேரடியாக சந்தித்துக் கொண்டும் இருக்கிறார்கள். இதுவும் ஒவ்வொருடைய பாக்கியமாகும் அதுவும் பௌதீக ரீதியில் இங்கே கிடைக்கக் கூடிய பாக்கியமாகும். இப்படிப்பட்ட பாக்கியத்தை பாக்கியசாலிகளே அடைகின்றனர்.

ஆக இன்று பாப்தாதா சந்திப்பைப் பார்த்து மிகவும் சந்தோஷம் அடைகிறார்கள், குழந்தைகள் பௌதீக ரீதியில் சந்திக்கும் அனுபவத்தை செய்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரின் மனதிலும் யார் நிறைந்திருக்கிறார்? பாபா! என்னுடைய தந்தை, அன்பான தந்தை! பாபாவின் உள்ளத்திலோ இரவும் பகலும் குழந்தைளே நிறைந்திருக்கின்றனர். ஏனெனில் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் பாபாவே நினைவாக நிறைந்திருக்கிறார். சந்திப்பும் பாபாவினுடையது, பாபா பார்த்தார். தந்தை எவ்வளவு கள்ளம் கபடமில்லாமல் இருக்கிறார்.

நினைவு செய்தவுடன் பிராப்தி கிடைத்து விட்டது. அப்படியிருக்கிறீர்களா? பாபாவின் சந்திப்பு நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்று நினைப்பவர்கள் கை தூக்குங்கள். பாபா குழந்தைகளினுடைய முகத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். ஆக எவ்வளவு காலம் பிரிந்திருந்தனர். மேலும் தற்போது சந்திப்பு நிகழ்ந்தது. அந்த சந்திப்பின் அன்பில் மூழ்கியிருக்கின்றனர். பாப்தாதாவும் குழந்தைகளினுடைய சந்திப்பினால் மகிழ்ச்சியாக இருக்கிறார். தொலைந்து போனவர்கள் எவரேனும் மீண்டும் கிடைத்தால் எவ்வளவு அன்பு ஏற்படுகிறது. ஆக இதுவும் கூட பலகாலம் பிரிந்திரிந்து பிறகு இப்பொழுது மீண்டும் அந்த சந்திப்பு ஏற்பட்டுள்ளது. ஏற்பட்டுவிட்டதுதானே! கை உயர்த்துங்கள். ஆஹா! இந்த காட்சி பாபாவிற்கு மிகவும் பிடித்தமாக இருக்கிறது. பின்னால் இருக்கக்கூடியவர்கள் கை தூக்குங்கள். ஒவ்வொவருடைய மனதின் அந்த களிப்பு முகத்தில் தென்பட்டுக் கொண்டிருக்கிறது.

**சேவையின் வாய்ப்பு டில்லி மற்றும் ஆக்ரா:** (14-ஆயிரம் பேர் டில்லி மற்றும் ஆக்ராவிலிருந்தும் வந்திருக்கின்றனர். மொத்தமாக சபையில் 24-ஆயிரம் சகோதர சகோதரிகள் இருக்கின்றனர்) பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறது. இதிலும் தாய்மார்கள் அதிகமாக உள்ளனர். பாபாவின் இந்த சக்தி சேனா எவ்வளவு சக்தி நிறைந்தது (பவர்புல்) இதுவும் பார்க்க முடிகிறது. பாண்டவர்களும் குறைந்தவர்கள் அல்ல, மேலும் பாண்டவர்கள் அனைவருக்கும் ஊக்கம் உற்சாகத்தை அளித்து அதிகப்படுத்தக்கூடியவர்கள். தாய்மார்கள் தங்களது கணவர் வரவில்லை என்றால், பாவம் அவர்கள் அப்படியே தங்கி விடுகிறார்கள் ஆனால் ஒருசிலரோ எவ்வளவு தான் பந்தனம் இருந்தாலும் அம்மாதிரி ஒரு தனியான முறையை கையாள்கிறார்கள். அந்த கையாளும் முறையைப் பார்த்து பாபாவும் மிகவும் குஷி அடைகிறார். பாப்தாதாவும் எப்பொழுது கேட்கின்றார் அல்லவா இவ்வளவு பந்தனம் முள்ள தாய்மார் எப்படி வந்தார்? என்று. ஆக இம்மாதிரி கதைகளைக் கேட்கும்பொழுது பாபா அவர்களுக்கு ஆஹா! தாய்மார்களே ஆஹா! என்று வாழ்த்துகின்றார். எவருடைய புத்தியிலும் வர முடியாத அளவிற்கு அம்மாதிரி முறைகளை கண்டுபிடிக்கிறார்கள். எனவே சங்கமயுகத்தில் தாய்மார்கள் மற்றும் அவ்வளவு வீரங்கனைகளாக வெளிவருகிறார்கள். எவ்வித பயமும் கிடையாது, என்ன ஆகுமோ என்று. அடி கூட கிடைக்கும் ஆனால் பாபா கிடைத்தவுடன் எல்லாமே

கிடைத்து விட்டது மாதிரி அவர்களுக்கு. நல்லது. பார்த்தீர்களா? எவ்வளவு உன்னதமானது தாய்மார்களின் நிலை! சபையைப் பார்த்தீர்கள் என்றால் முக்கால் பாகம் தாய்மார்களே நிரம்பியுள்ளனர். அவர்கள் மிகவும் தாகத்தோடு இருக்கின்றார்கள். தாகம் நிறைந்தவர்களுக்கு தண்ணீர் கிடைத்து விட்டால் அது அவர்களுக்கு என்னவாகத் தெரியும்? அமிர்தம்! ஆஹா! பாப்தாதா, குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். இம்மாதிரி அநேக சகோதரர்களும் (பந்தனத்தில்) உள்ளார்கள் ஆனால் அவர்களுக்கு தெரியாது அல்லவா இது என்னவென்று? ஆக பாப்தாதா இப்படிப்பட்ட குழந்தைகளைப் பார்த்து மிகவும் சந்தோஷம் அடைகிறார். ஆஹா என்னுடைய விரமான குழந்தைகளே ஆஹா!

**இரட்டை வெளிநாட்டினர்: 50-வெளிநாடுகளிலிருந்து 500-பேர் வந்துள்ளனர்:** நல்லது. அனைவரும் மிகவும் தைரியமாக இருக்கிறீர்கள். அந்த தைரியத்திற்கு பாப்தாதா உதவி வழங்குகிறார். இந்த குருப்பிலுள்ள இரட்டை வெளிநாட்டினர் எழுந்து நிற்கிறார்கள். இதில் மகிழ்ச்சியானவர் எத்தனை பேர். எழுந்து நிற்கிறார்கள். களைப்பானவர்களும் உள்ளனர், ஆனாலும் மகிழ்ச்சியாக இருக்கின்றனர் நல்லது. அனைவருக்கும் அன்பு நினைவுகள் கிடைக்கும் ஆனால் இரட்டை வெளி நாட்டினருக்கு விசேஷமாக அன்பு நினைவுகளை தந்துக் கொண்டிருக்கிறார். இந்தியாவில் இருந்து வந்திருப்பவர்கள் கூட வெளிநாட்டினவர்களுக்கு இல்லாத முறையில் பந்தனம் என்பது இருக்கத்தான் செய்கிறது ஆனால் பாபா அவர்களது புத்திசாலி தனத்தை அதாவது எப்படி பந்தனங்களை உடைத்தெரிகிறார்கள், எப்படி நன்மையை அடைகிறார்கள் இம்மாதிரியான கதைகளைக் கேட்டு பாப்தாதா கூட மகிழ்ச்சியடைகிறார். ஆக எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா? ஆக எல்லோரும் இரண்டு கை தூக்குங்கள். பாருங்கள் தாதி. (ஜனாகி தாதி) பார்ப்பதற்கு எவ்வளவு நன்றாக இருக்கிறது. மேடையில் இருந்து பார்க்கும் பொழுது மிகவும் நன்றாக இருக்கிறது. அனைவரும் ஞானத்தின் அடிப்படையில் குஷியாக இருக்கிறீர்களா? அன்பின் அடிப்படையில் அல்ல, ஞானத்தின் அடிப்படையில் அனைவரும் குஷியாக இருக்கின்றனர். நல்லது.

ஜானகி தாதி பாப்தாதாவை சந்திக்கின்றார்: இவ்வளவு வயதான பிறகும் இளைஞர் போன்றிருப்பது மிகவும் பாக்கியம் தான். (தாதிஜியின் வயது **100**-ஆகிறது) (தாதி கூறினார்) பாவம் இந்த சரீரம், ஆனால் சக்தி பாபாவினுடையது, பாபா நடத்துகிறார், இப்பொழுது பாபாவிற்கு முன் உதாரணத்தைக் காண்பிக்க வேண்டும். பாபா வந்துள்ளார், இதுவே மகிழ்ச்சிக்குரிய விசயமாகும். பாபாவிற்கு தெரியுமல்லவா? பாபா உங்கள் மூலம் செய்விக்கிறார். எப்படிப்பட்ட நிலையிருந்தாலும் சரி, ஆனால் நீங்கள் தானே நிமித்தமானவர்கள். (நாளை மறுநாள் ஹன்சா சகோதரி லண்டனுக்கு அழைத்து செல்கிறார்).

மோகினி சகோதரியுடன்: எப்பொழுதுமே மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் அல்லவா? இந்த குஷி இவரது சேவையை உருவாக்கித் தருகிறது. எப்படித்தான் இருந்தாலும் முகத்தில் தெரிவதில்லை. மகிழ்ச்சியிலேயே நடத்திச் செல்கிறார். எல்லோருமே நடத்திச் செல்கின்றனர். அனைவரது வயதும் தற்போது மிக அதிகம் (மோகினி தீதி தனது 75-பிறந்த நாளில் உள்ளார்) மற்றபடி அனைத்து சகோதரிகளும், சகோதரர்களும் கூட இருந்தாலும் தற்போது சகோதரர்களைப் பற்றிய விசயமே நடக்கிறது. ஆக சகோதரிகள் யாராக இருந்தாலும், சகோதரர்கள் அவர்கள் பின்னால் மறைவாக இருக்கின்றார்கள். சேவையின் காரணமாக சகோதரிகளின் பெயர் விளங்குகிறது ஆனால் கூடவே சகோதரர்களும் இருக்கின்றனர். சகோதரர்கள் இல்லாமல் சேவையும் நடக்காது. பாருங்கள், சகோதரர்களும் குறைந்தவர்கள் அல்ல. சகோதரிகளும் குறைந்தவர்கள் அல்ல. பிராமண குடும்பத்தில் தாய் மார்கள் மற்றும் சகோதராகள் அனைவருமே சேவைக்கு நன்கு உகந்தவர்கள். மோகனி சகோதரிக்கு பாப்தாதா பிறந்த நாள் பரிசு வழங்கிறார். சரிதானே! உங்களை நீங்கள் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்.

திரிமூர்த்தி சகோரர்கள்: சகோதரர்களும் வந்திருக்கிறார்கள். ஆஹா, நல்ல நல்ல தாய்மார்களும் நன்கு சேவை செய்யக் கூடியவர்கள். வெளியில் உள்ள காரியங்கள் அல்ல ஆனால் பிராமணர்களின் சேவையிலும் கூட தாய்மார்கள் நன்கு பணிபுரிகின்றனர். (இந்தியா கேட் மற்றும் செங்கோட்டையில் நிகழ்ச்சிகள் நடந்ததின் போட்டோ ஆல்பத்தை பாப்தாதாவிற்குக் காண்பிக்கின்றனர்)

**புதிய வருடம் 2016ன் வருகையின் குஷியில் மெழுகு வர்த்திகள் ஏற்றப்பட்டன. கேக் வெட்டப்பட்டது. பாப்தாதா அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை அளித்தார்!**

தாதி ஜானகி கூறினார்: எவ்விதமான சங்கல்பத்தையும் நான் நினைத்துக் கொண்டிருப்பதில்லை, பாபா நடத்திக் கொண்டிருக்கிறார் அவ்வளவே! இந்த சரீரம் மிகவும் ஆச்சரியமானது. எப்படிப்பட்ட நிலையில் இருந்தாலும் ஒவ்வொரு அடியிலும் என்னுடைய பாபா என்னும் ஒலியே உள்ளத்திலிருந்து எழுகின்றது. இன்று சக்தி வந்தது, பாபா கொடுத்தார், முரளி கூறுவதற்காக. இன்று பாபா வந்துள்ளார். மிகவும் குஷி. பாபாவினுடைய அற்புதம் என்னவென்றால், இவ்வளவு நேரம் என்னால் இங்கு இருக்க முடிகிறது. நான் உள்ளுக்குள் எண்ணினேன் நாளை காலை முரளி (வாகுப்பில்) படிப்பேன். ஆக ஒவ்வொரு அடியிலும் பாபாவின் உதவி கிடைத்துக் கொண்டே யிருக்கிறது. இவர் (ஹன்சா) நிமித்தமாக இருக்கிறார். என்னை பயணத்தில் அழைத்துச் செல்வதற்காக. பாபா வந்துள்ளார் என்றால் எவ்வளவு மகழ்ச்சி. தற்போது புத்தாண்டின் அனைத்து நிமித்தமான பாபா குழந்தைகளும் தத்தம் காரியத்தில் மிக நன்றாகவே ஈடுபடுவர்.

பாபா (பாபா நான் செல்வதற்கு அனுமதி தானே) ஆமாம். அனுமதி தான். இப்பொழுது கேட்டு அம்மாதிரி பிரயாண திட்டம் தயாரிக்கப்பட்டது. டிக்கெட்டும் வந்து விட்டது. எப்பொழுது தேவையோ அப்பொழுது சென்று வாருங்கள். இப்பொழுது இவரே தான் தலைவி அல்லவா? எனவே இவர் தான் என்ன செய்ய வேண்டும் என்று தீர்மானிப்பார்.

புதிய வருட வருகையின் போது அனைவருக்கும் வாழ்த்துக்கள்! பாபாவினுடைய கட்டளையின் பிரகாரம் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறார்கள். இன்னும் முன்னேறி செல்வர். வெற்றி என்பது உறுதியானது. வெற்றியை வழங்கும் வள்ளல் நம் கூடவே இருக்கிறார் என்றால் வெற்றி எங்கே செல்லும்?

அனைவருக்கும் பாபாவின் நினைவு ஒவ்வொரு அடியிலும் இருக்கிறது. மேலும் நமது உள்ளத்தில் நிமித்தமாக பாபா யாரைத் தந்துள்ளார். அதுவும் அனைவருக்கும் தெரியும். பாபா யாரை நிமித்தமாக

ஆக்குகிறாரோ, பிற அனைவரும் அவர்களுடன் இருப்பவர்கள். ஆக ஒவ்வொரு அடியிலும் அனைவரும் துணையாக நிற்பார்கள். இன்றிலிருந்து புதிய ஆண்டு ஆரம்பமாகிறது. புதிய ஆண்டு ஆரம்பமானது என்றால் அதில் புதுமையான சங்கல்பங்கள் (எண்ணங்கள்) நிச்சயமாகத் தோன்றுகின்றன. இந்த வருடம் ஆரம்பமாகிச் கொண்டிருக்கிறது. அதில் சில புதுமையானவற்றை செய்ய வேண்டும். யாருக்கு என்ன சங்கல்பமோ எவருக்கேனும் புதிய எண்ணம் எழுகின்றதோ, ஏதேனும் புதிதாக நடக்க வேண்டும் என்றால் எழுதி அனுப்புங்கள். சொல்வதற்கு அவசியம் இல்லை. மற்றபடி ஏதேனும் புதுமையான எண்ணம் இருந்தால் அதனை எழுதி அனுப்புங்கள். நேரம் மிச்சப்படும். உங்களது சங்கல்பங்களும் சேவையில் வந்தால் நல்லது தான். எனவே நீங்கள் சுருக்கமாக உங்கள் எண்ணங்களை எழுதி அனுப்புங்கள். நல்லது. அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋ ❋❋❋❋❋

# தனிப்பட்ட சந்திப்புகள் -பார்ட்டிகள் etc

**1) டீச்சர்களுடன் -டீச்சர்கள் என்றால் அறிவுரை தரும் ஆசிரியர்கள்!**

தந்தையும் ஆசிரியர் வடிவில் தனது பங்கைச் செய்கிறார். அப்படி ஆசிரியர்கள் (டீச்சர்கள்), தந்தைக்குச் சமமாக மாஸ்டர் உலகத்தின் ஆசிரியர் ஆகி விட்டார்கள். எப்படி தந்தை உலகத்தின் ஆசிரியரோ, பாரதத்திற்கு மட்டுமில்லை மற்றும் வெளிநாட்டிற்கு மட்டுமில்லை. முழு உலகிற்கும் ஆசிரியர் ஆவார். அப்படி மாஸ்டர் ஆசிரியர் என்றால், எல்லைக்கப் பாற்பட்ட ஆசிரியர். எனவே யார் எல்லைக்கப்பாற்பட்ட ஆசிரியராக இருப்பாரோ அவருக்கு என்ன போதை இருக்கும்? எல்லைக்கப்பாற்பட்ட போதை, எல்லைக்கப்பாற்பட்ட குஷி, எல்லைக்கப்பாற்பட்ட பிராப்தி, இருக்கும். நீங்கள் அந்த மாதிரி ஆசிரியர்கள் தான் இல்லையா? ஏனெனில், எப்படி தந்தைக்கு டைட்டில் (பட்டம்) கிடைத்துள்ளதோ அந்த டைட்டிலுக்கு ஏற்றாற்போன்று காரியம் மற்றும் குணம் ஆகியவை அவ்வாறே இருக்கும் இல்லையா? எனவே எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் இருக்கிறீர்களா? மனநிலையும் எல்லைக்கப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். தேக அபிமானம் எல்லைக்குட்பட்ட நிலை ஆகும். ஆத்ம அபிமானியாகுவது இது எல்லைக்கப்பாற்பட்ட நிலை ஆகும். தேக அபிமானத்தில் வந்தீர்கள் என்றால் அனேக விதமான எல்லைக்குட்பட்ட விஷயங்களில் அதாவது - நான் பெண், இது கூட எல்லைக்குட்பட்டது தான் இல்லையா? இவ்விதமாக தேகத்தில் வருவதினால்அனேக விதமான காரியங்களின் பந்தனத்தில் எல்லைக்குட்பட்டதில் வர வேண்டியதாக ஆகி விடுகிறது. எப்பொழுது ஆத்மா என்று புரிந்து கொள்கிறீர்களோ அப்பொழுது இந்த அனைத்து பந்தனங்களும் முடிந்து விடுகிறது. எனவே நிலையும் எல்லைக்கப்பாற்பட்டதாக அதாவது ஆத்ம அபிமானியாக இருக்க வேண்டும். டீச்சர்கள் என்றால், எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் இருப்பவர்கள், டீச்சர்கள் என்றால், பந்தனங்களிலிருந்து விடுபட்டு இருப்பவர்கள். எப்படி நாங்கள் கூட பந்தனங் களிலிருந்து விடுபட்டவர் தான் ஜீவன்முக்தி அடைவார்... என்று கூறுகிறீர்கள், அப்படி யார் எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் இருப்பவராக இருப்பாரோ அவர் தான் பந்தனங்களிலிருந்து விடுபட்டவராக, ஜீவன்முக்த் ஆகவும் இருப்பார். எதிர்கால ஜீவன் முக்தி இல்லை, தற்சமயத்தின் ஜீவன் முக்தி. இந்த சங்கமயுக பிராமண வாழ்க்கையில் இருந்து கொண்டே வாயுமண்டலம்,

வைப்ரேஷன், தாழ்வான உள்உணர்வுகள், மாயாவின் தாக்குதல் இவை அனைத்திலிருந்தும் விடுபட்டவர், இதைத் தான் ஜீவன் முக்தி என்று சொல்வது. எனவே டீச்சர் என்றால் தற்சமயத்திலும் ஜீவன்முக்தி நிலையிலிருப்பவர்கள். அப்படி இருக்கிறீர்களா? டீச்சர் ஒருவரின் இலக்கணமே இது தான். டீச்சரின் டைட்டில் (பட்டம்) ஒன்றும் குறைந்தது அல்ல. டீச்சர் ஆவது என்றால், தந்தைக்குச் சமமாக ஆவது. டீச்சர் ஆவது என்றால், தந்தையின் ஆசனத்தில் அமர்வது. எனவே யாருடைய ஆசனத்தில், நாற்காலியில், இருக்கை யில் அமருவீர்களோ, அந்த இருக்கைக்கான காரியம் மற்றும் இருக்கையில் அமர்வதற்கான தகுதிகளை நடைமுறையில் கொண்டு வர வேண்டியதாக இருக்கும். எனவே டீச்சர்களுக்கு எவ்வளவு மகத்துவம் இருக்கிறது. பெயரளவில் மட்டுமின்றி காரியத்திலும் இருக்க வேண்டும். எனவே அப்படி இருக்கிறீர்களா? என்ன நினைக்கிறீர்கள்? டீச்சர்களைப் பார்த்து பாபாவிற்கு விசேஷ குஷி ஏற்படுகிறது. ஏனெனில், டீச்சர்கள் பாபாவின் நண்பர்கள். எப்பொழுது இரு நண்பர்கள் தங்களுக்குள் சந்தித்துக் கொள்கிறார்கள் என்றால் எவ்வளவு அப்படி குஷி அடைகிறார்கள். அப்படி டீச்சர்கள் அனைவரைக் காட்டிலும் நெருக்கமான நண்பர்கள் ஆவர். எனவே குஷி ஏற்படும் இல்லையா? எப்பொழுது இருவர் நண்பர்கள் ஆகிறார்கள் என்றால், எப்பொழுது இருவருமே சமமாக ஆகிறார்களோ அப்பொழுது தான். அப்படியானால் நீங்கள் சமமாக இருக்கிறீர்கள் தான் இல்லையா? யார் இந்த நேரம் சமமாக ஆகிறார்களோ அவர் தான் எதிர்காலத்திலும் பிரம்மாபாபாவுடன் அனைத்து வாழ்க்கையின் விசேஷமான பங்கிலும் சேர்ந்தே இருப்பார்கள். எப்படி நண்பர்கள் ஒவ்வொரு காரியத்திலும் எப்பொழுதும் சேர்ந்தே இருப்பார்கள் இல்லையா?. எனவே யார் அப்படிப்பட்ட சமமான டீச்சர் ஆகிறார்களோ அவர்கள் ஆரம்பம் தொட்டே சேர்ந்தே படிப்பார்கள், சேர்ந்தே விளையாடுவார்கள் மற்றும் பிறகு சேர்ந்தே இராஜ்யம் செய்வார்கள். அப்படிப்பட்ட சமமான டீச்சர்கள் தான் நீங்கள் இல்லையா? வாக்குறுதியும் உள்ளது சேர்ந்தே வாழ்வோம், சேர்ந்தே இறப்போம்.....மேலும் சேர்ந்தே இராஜ்யத்தில் வருவோம், இந்தளவு வாக்குறுதி இருக்கிறது. எனவே அந்த மாதிரி சமமான டீச்சர்களாக இருக்கிறீர்களா? அந்த மாதிரி சமமான டீச்சர்களின் தற்சமய அடையாளமாக என்ன இருக்கும்? எப்பொழுதும் சமமாக இருக்கும் ஆத்மா இந்த நேரம் சுவமானத்தில் (சுய

கௌரவத்தில்) இருப்பார். சமநிலையின் சுவமானம் நடைமுறையில் பார்க்கத் தென்படும். எப்படி தந்தை எப்பொழுதும் சுவமானத்தில் நிலைத்திருக்கிறாரோ அது போன்றே சமமான ஆத்மாக்களும் சுவமானத்தில் இருப்பார்கள். (சுவமானத்திலிருந்து) கீழே வர மாட்டார்கள். ஒவ்வொரு அடியும் சுயமானத்திற்கானதாக இருக்கும். எனவே சுவமானத்திலிருப்பவரை பார்த்த மாத்திரத்திலேயே அனைவர் வாயிலிருந்தும் இவர் சுவமானத்திலிருக்கின்ற தந்தைக்குச் சமமானவர் என்று வெளிப்படும். சுவமானம் தான் அவருடைய சிம்மாசனமாக இருக்கும். எதிர்கால சிம்மாசனத்திற்கு முன்பாக சுவமானத்தின் சிம்மாசனத்தில் எப்பொழுதும் நிரந்தரமாக இருப்பார். சிம்மாசனத்தை விட்டு கீழே இறங்கி வர மாட்டார். அந்த மாதிரி இருக்கிறீர்களா? தந்தை ஒவ்வொருவரையும் இதே உயர்ந்த பார்வையோடு தான் பார்க்கிறார். நல்லது. அனைவரும் திருப்தியாக இருக்கிறீர்களா? எங்கிருந்தாலும் அங்கு திருப்தியாக இருக்கிறீர்களா? எப்பொழுதும் திருப்தியாக இருக்க வேண்டும். இதுவும் டீச்சர்களுடைய விசேஷ மான தகுதி ஆகும். டீச்சரின் முக்கியமான குணம் -எப்பொழுதும் திருப்தியாக இருப்பது மற்றும் பிறரையும் திருப்திப் படுத்துவது ஆகும். நான் திருப்தியாகத் தான் இருக்கிறேன் ஆனால் பிறரை என்னால் திருப்திப் படுத்த முடியவில்லை என்று ஒருவேளை யாராவது கூறுவாரேயானால் இதுவும் டீச்சரின் தகுதிக்கு புறம்பானது ஆகும். டீச்சர்களின் கடமை -பிறரை திருப்திப்படுத்துவது. ஒருவேளை உங்கள் மூலமாக திருப்திப்படுத்த முடியவில்லை என்றால், யாருடைய உதவியைக் கொண்டாவது அவசியம் திருப்திப்படுத்த வேண்டும். டீச்சரோ எப்பொழுதும் தடைகளை அழிப்பவர் ஆகி அனேகரின் தடைகளை அழிப்பதற்கு ஆதாரமாக ஆவதற்கு பொறுப்பாளராக ஆக்கப்பட்டிருக்கிறார். யாரேனும் ஏதாவது பிரச்சனையை எடுத்து கொண்டு வரட்டும் மற்றும் சமாதான சொரூபம் ஆகி விட்டு செல்லட்டும். அந்த மாதிரி டீச்சர்கள் இல்லையா?

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵ ✵✵✵✵✵✵✵✵

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!**

## பொருளடக்கம்